# இந்து ஒளி

தீபம்: 21 சுடர்: 1

HINDU OLI

மகா சிவராத்திரி
24.02.2017



துர்முகி வருடம் - தை - மாசி
January - February - 2017

அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மீக இதழ்
Religious Journal of All Ceylon Hindu Congress

1955 - 2016

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய தெற்குவாசல் இராஜகோபுர
கும்பாபிடேக சிறப்பிதழ்

## 07-01-2017 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்ற, தெய்வத்திருமகள் சிவத்தமிழ்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவு நிகழ்வின் பதிவுகள்



கொழும்பு மகளிர் இந்து மன்றத்தின் சார்பில் தெய்வத்திருமகளுக்கு அஞ்சலி செய்யும் திருமதி. த. நீலா



கொழும்பு மகளிர் இந்து மன்றத் தலைவி திருமதி வி. ஸ்ரீரஞ்சனி அவர்களின் உரை



மாண்புமிகு திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா (பா.உ-வன்னி மாவட்டம்) அவர்கள் நினைவுப் பேருரை நிகழ்த்தினார்



மேடையில் அமர்ந்திருக்கும் விருந்தினர்களும் பிரதிநிதிகளும்



கொழும்பு மகளிர் இந்து மன்றத்தினால் ஆரம்பிக்கப்பட்ட "இந்து மங்கையர் அணி"



மாண்புமிகு திருமதி ஸ்ரீ. சாந்தி (பா.உ) அவர்களை கௌரவிக்கும் திருமதி நீலகண்டன் அவர்கள்



யோகபுரம் ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயத்துக்கான 100.000 ரூபா நன்கொடை பாராளுமன்ற உறுப்பினரூடாக வழங்கப்பட்டது.



பிரதம விருந்தினர் உரை - மாண்புமிகு திருமதி விஜயகலா மகேஸ்வரன (இராஜாங்க அமைச்சர்)



இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்களை கௌரவிக்கும் திருமதி அ.கயிலாசபிள்ளை.



கொழும்பு மகளிர் இந்து மன்றப் போஷகர் திருமதி யமுனா கணேசலிங்கம் அவர்களின் நிறைவுரை

## முறிகண்டியில் சரவணப் பொய்கை









கிளிநொச்சி, முறிகண்டியில் மாமன்றத்தினால் அமைக்கப்பட்டுவரும் சரவணப்பொய்கையுடனிணைந்த கட்டடப் பணிகளைப் பார்வையிடும் மாமன்றத் தூதுக்குழுவினர்.

## பாடசாலை மாணவர்களுக்கு ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் அருளுரை







பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு ஆன்மீக உரை நிகழ்த்துகிறார் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்



பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு அருளுரை வழங்கும் சுவாமிகள்

உ
சிவமயம்

# இந்து ஒளி

தீபம் - 21 சுடர் - 01

துர்முகி வருடம் தைத் திங்கள் 27ஆம் நாள் (09.02.2017)

## பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அரவித்திரள் மழலைமுழவு அதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே

### திருவாசகம்

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.

### திருவிசைப்பா

மாங்கை யோடிருந்தே யோகுசெய் வானை
வளர்இளந் திங்களை முடிமேல்
கங்கையோடு அணியும் கடவுளைக் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானை
அங்கையோ டேந்திப் பலிதிரி கருவூர்
அறைந்தசொல் மாலையால் ஆழிச்
செங்கையோடு உலகில் அரசுவீற் றிருந்து
திளைப்பதுஞ் சிவனருட் கடலே

### திருப்பல்லாண்டு

மன்னுகதில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய்மண்டபத் துள்ளேபுகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடைமடவாள் உமைகோன்
அடியோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்கநெறிதந்த
பித்தற்குபல்லாண்டு கூறுதுமே!

### திருப்புராணம்

மாசு இலாதமணிதிகழ் மேனிமேல்
பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேசினால்எத் திசையும் விளக்கினார்
பேசஒண்ணாப் பெருமைபிறங்கினார்!

திருச்சிற்றம்பலம்

## நல்லதை எண்ணி நாளும் வணங்கி நல்லருள் பெறுவோம்!

ஈழத்திருநாட்டில் அறங்காக்கும் ஆலயமாக தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தானம் விளங்குகிறது. இரண்டரை நூற்றாண்டுகளுக்கு முன்பு சித்தரான கதிர்காமர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஆலயமானது, இன்று உலகறிந்த பெருங்கோயிலாக சிறப்புற்றுள்ளது. கற்பகதருவாகிய பனைமரங்களும், இலுப்பைமரச் சோலைகளும், பாம்புப் புற்றுகளும் நிறைந்த இடத்தில் தோற்றம்பெற்ற இத்திருக்கோயிலில் பொங்கிப் படைத்து வழிபாடு செய்துவந்த மக்கள், துர்க்காதேவியை தமது காவல் தெய்வமாகக் கருதினர். அன்று ஒற்றையடிப் பாதையால் சென்று மக்கள் வழிபட்ட இந்த ஆலயம், இன்று மாடமாளிகைகள், கோபுரங்களுடன் எழுச்சி பெற்றிருப்பது பெருமைக்குரிய விடயமாகும்.

ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் இன்று ஆகமநெறி முறைக்கு அமைய சகல வசதிகளுடன் துலங்குகிறது. ஆரம்பகாலத்தில் தனிப்பட்டவர்களின் நிர்வாகத்தின் கீழிருந்த ஆலயம், பின்னர் தர்மகர்த்தாக்களால் பரிபாலனம் செய்யப்பட்டு, கடந்த ஐந்து தசாப்தங்களாக நிர்வாக சபையினால் பராமரிக்கப்பட்டு வருவது வரலாற்றுப் பதிவாகும். கல்வி அதிகாரியாக விளங்கிய அமரர் தியாகராஜா, அதிபராக விளங்கிய அமரர் து.ஜெயரத்தினம், சிவத்தமிழ்ச்செல்வி தெய்வத்திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி போன்ற பெருமக்கள் நிர்வாகசபையின் தலைமைத்துவத்தை சீராக நெறிப்படுத்தி ஆலயத்தை நல்லமுறையில் பேணி வளர்த்து வந்திருப்பதையும் சிறப்பாகச் சொல்லலாம்.

2008ஆம் ஆண்டு தெய்வத்திருமகளின் மறைவுக்குப் பின்னர், செஞ்சொற்செல்வர் சைவஞானபானு கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள், முன்னைய தலைவர்கள் வழியில் நின்று ஆலயத்தை வழிநடத்தி வருகிறார்.

ஏனைய ஆலயங்களுக்கு முன்னுதாரணமாக, துர்க்காதேவி திருக்கோயிலை சமூகப் பணிகளில் ஈடுபடுத்தி வளர்த்த பெருமைக்குரியவர் தெய்வத்திருமகள் தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார். இத்திருக்கோயில் ஓர் ஆதீனம்போல சைவசமய

மறுபக்கம் பார்க்க...

**வாழ்த்து**

பொன்னுயர் தெல்லியூர்வாழ் பூரணிதுர்க்காதேவி
தன்னிகரில்லாசோதிதருமுகம் காட்டிநின்று
நன்னிலைக் கிழக்கும் தாயேநின்கோயில் வாசல்
உன்னிவந் தடையும்உன்றன் அன்பர்கள் வாழி வாழி!

வளர்ச்சிக்குரிய படிநிலைகளை நன்முறையில் பேணிவருகிறது. நேரந்தவறாத பூசை வழிபாடுகளுடன், ஆடம்பரமின்றி அமைதியான வழியில் ஆலய நித்திய நைமித்திய கடமைகள் சிறப்பாக நடைபெற்று வருவதையும் குறிப்பிடலாம்.

இங்கு கடந்த வருடம் தைப்பூச நன்நாளில் தெற்குவாசல் இராஜகோபுரத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டு, இவ்வருடம் தைப்பூச நாளில் கோபுர கும்பாபிஷேகம் நடைபெறுவது, ஆலய வளர்ச்சியில் மற்றுமொரு பெருமைக்குரிய விடயமாகச் சொல்லவேண்டும். அருள்மிகு துர்க்காதேவியின் நல்லருளால், ஆலயம் காலத்துக்குக் காலம் புதுப்பொலிவு பெற்று வருவது கண்டு அம்பாள் அடியார்கள் அனைவரும் வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளார்கள்.

அகில இலங்கை இந்து மாமன்றமும் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வளர்ச்சியில் அவ்வப்போது பங்குகொண்டு வந்துள்ளது. இந்த வகையில் மாமன்ற ஆன்மீக இதழான 'இந்து ஒளி' ஆலயம் தொடர்பாகவும், தெய்வத்திருமகள் தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் பற்றியும் கடந்த காலங்களில் பல சிறப்பிதழ்களை வெளியிட்டு வந்திருப்பதையும் சிறப்பாகச் சொல்லலாம்.

கடந்த ஆறு வருடங்களுக்கு முன் இடம்பெற்ற ஆலயத்தின் மகா கும்பாபிஷேகப் பெருவிழாவையொட்டிய சிறப்பிதழாக 2011 தைத்திங்கள் 'இந்து ஒளி' வெளிவந்தது. இப்போது, ஆலய தென்திசைவாயில் இராஜகோபுர கும்பாபிஷேகத்தையொட்டிய சிறப்பிதழாக 'இந்து ஒளி' மலர்ந்துள்ளது. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலைப்போல தெல்லிநகர் துர்க்கை அம்மன் ஆலயமும் விரைவில் எல்லா திசைகளிலும் கோபுரங்களோடு காட்சியளிக்கும் என்பதில் ஐயமில்லை. நல்லதை எண்ணி நாளும் வணங்கி நல்லருள் பெறுவோமாக!


**இந்து ஒளி** | அகில இலங்கை இந்து மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலையத்தின் வெளியீடு

**தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய தெற்குவாசல் இராஜகோபுர கும்பாபிடேக சிறப்பிதழ், மகாசிவராத்திரி**

தை – மாசி 2017



ஆசிரியர் குழு : திரு. கந்தையா நீலகண்டன்
சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
திரு.வே. கந்தசாமி
கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா
சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள்
திரு. த. மனோகரன்



| | |
|---|---|
| *ஒரு பிரதியின் விலை* | ரூபா 50.00 |
| *வருடாந்தச் சந்தா (உள்நாடு)* | ரூபா 300.00 (தபாற் செலவு தனி) |
| *வருடாந்தச் சந்தா (வெளிநாடு)* | US டொலர் 15 |



**அகில இலங்கை இந்து மாமன்றம்**

தலைமையகம்: 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2, இலங்கை.
தொலைபேசி (கொழும்பு) :0112434990, தொலைநகல் : 0112344720
மின்னஞ்சல் : hinducongress@gmail.com

யாழ் பணிமனை : 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி (யாழ்ப்பாணம்) : 0212221075, தொலைநகல் : 0212217280
மின்னஞ்சல் : hinducongressjaffna@gmail.com
இணையத்தளம் : http://www.hinducongress.lk


*இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.*


**HINDU OLI** | *Publication of* HINDU RESEARCH CENTRE OF ALL CEYLON HINDU CONGRESS

**Tellipazhai Sri Thurkkadevi Temple South Kopura Kumbabishega Special Issue and Maha Sivarathri**

January - February 2017



**Editorial Board :** Mr. Kandiah Neelakandan
Dr. Aru. Thirumurugan
Mr. V. Kandasamy
Dr. M. Balakailasanatha Sarma
Sivasri K. Vaitheeswara Kurukkal
Mr. D. Manoharan



| | |
|---|---|
| Price | Rs. 50.00 |
| Annual Subscription (Inland) | Rs. 300.00 (Excluding Postage) |
| Annual Subscription (Foreign) | US $ 15 (Including Postage) |



**ALL CEYLON HINDU CONGRESS**

Head Office: 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha Colombo - 2, Sri Lanka.
E-Mail : hinducongress@gmail.com
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720
Jaffna Office : 211/17, Temple Road, Nallur, Jaffna.
Telephone No.: 0212221075, Fax No.: 0212217280
E-Mail : hinducongressjaffna@gmail.com
Website : http://www.hinducongress.lk


**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**


**ISSN : 2012 - 9645**



## நல்லை ஆதீன முதல்வர்
## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது ஆசிச்செய்தி

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் தெற்கு வாசலில் அழகான கோபுரம் அமைக்கப்பட்டு தைப்பூச நன்னாளிலே கும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் தலைமைத்துவக் காலத்தில் ஆலய பிரதான வாசல் இராஜகோபுரம் அழகிய சிற்பவேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டது. அம்மையாரின் சிவபதப்பேறுக்குப் பின்னர், தேவஸ்தானப் பொறுப்பை ஏற்ற செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தொடர்ந்து ஆலயத் திருப்பணிகளை அனைவரின் ஒத்துழைப்போடு நிறைவேற்றி வருவது பெருமைக்குரிய விடயமாகும்.

சென்றவருடம் தைப்பூச நன்னாளில் கோபுரத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அமைதியாக இடம்பெற்றிருந்தது. அன்று அடியார்கள் ஆர்வமாக அடிக்கல் நாட்டியதைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. ஆலயங்களுக்கு முன்னுதாரணமாக விளங்கும் இத்திருக்கோயிலில், விரைவாக கோபுரத் திருப்பணிகள் நிறைவுபெற்று கும்பாபிஷேகம் நடைபெறுவது பேரானந்தம் அளிக்கிறது. ஆகம விதிக்கமைய சீரானமுறையில், இந்திய சிற்பக் கலைஞர் திரு.புருஷோத்தமன் அவர்கள் கட்டுமானப் பணியைப் பொறுப்பேற்று நிறைவேற்றியுள்ளார். கடந்த சில வருடங்களுக்குள் யாழ்.குடாநாட்டில் பல கோயிற் கோபுரங்களை உருவாக்கிய பெருமை இக்கலைஞரையே சாரும்.

துர்க்காதேவி ஆலய தெற்குவாசல் கோபுர கும்பாபிஷேகப் பெருவிழாவையொட்டி அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆன்மீக இதழான 'இந்து ஒளி' சிறப்பிதழாக மலருவது சிறப்புக்குரியது.

துர்க்காதேவியின் நல்லருளும், அம்பாள் அடியார்களின் காணிக்கையும், ஆலய நிர்வாக சபையின் சிறப்பும் ஒருங்கே நடைபெறுவது பாராட்டுக்குரியது. துர்க்காதேவியின் கோபுர கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்பாக நடைபெறவேண்டி, அனைவருக்கும் நல்லாசிகளை சமர்ப்பிக்கிறோம்.

---

## அமெரிக்க ஹவாய் சைவஆதீனத்தைச் சார்ந்த ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் அவர்களின் ஆசிச்செய்தி



உலகளாவிய ரீதியில் அனைவராலும் அறியப்பட்ட திருக்கோயிலாக தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் விளங்குகிறது. தவத்திரு சிவயோக சுவாமிகள் தவம்செய்த இடங்கள் பெருமை பெற்றிருப்பது உண்மை. சிவயோக சுவாமிகள் விரும்பித் தவம் செய்த இடங்களில் ஒன்று தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலாகும். இயற்கையான சூழலில் அமைந்த இக்கோயிலுக்கு எவர் சென்றாலும் ஏதோ ஓர் ஈர்ப்பு சக்தி ஆட்கொள்வதை உணரலாம்.

கடந்த வருடம் ஆறு.திருமுருகன் ஐயா அவர்களின் அழைப்பை ஏற்று கோபுர அடிக்கல் நாட்டும் வைபவத்தில் அடியேனும் கலந்து கொண்டேன். இப்போது கும்பாபிஷேகம் நடைபெறும் செய்தி அறிந்து வியப்படைந்தேன். திருவருளால் விரைவாக திருப்பணி வேலைகள் நிறைவேறியிருக்கும் சிறப்பை உணர்கிறேன். மிகவும் அழகாக- அற்புதமான சிற்ப வேலைப்பாடுகளுடன் புதிய கோபுரம் காட்சியளிக்கிறது. இப்பணியில் ஈடுபட்ட கலைஞர்கள் அனைவரையும் முதற்கண் வாழ்த்துகிறேன்.

"சிறுதுளி பெருவெள்ளம்" என்ற கூற்றுக்கு அமைய அடியார்களது காணிக்கை, பெருவிருட்சமாக இந்த கோபுரம் அமைவதற்கு காரணமாகியது. துர்க்கை அம்மன் கோயிலைப் பொறுத்தவரை, ஆலயத் திருப்பணியோடு சமூகத்துக்குப் பயனுள்ள அறப் பணிகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. அதனால் இந்தக் கோயிலின் வளர்ச்சி பெருவளர்ச்சியாக இன்று வியாபித்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் நான் அமெரிக்காவிலிருந்து வருகின்றபோது துர்க்கை அம்மன் ஆலயத்தின் புதுப்புது பணிகளைக் கண்டு மகிழ்வேன். இத்திருக்கோயில் நெறிமுறைகளை ஏனைய ஆலயங்களும் பின்பற்றவேண்டும்.

அம்பாளின் நல்லருளால் கோபுர கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்று, அடியார்கள் நிறைவோடு வாழப் பிரார்த்தித்து எனது அன்பையும் நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## கீரிமலை நகுலேஸ்வர ஆதீன கர்த்தா

## ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களது ஆசிச் செய்தி



பஞ்ச ஈஸ்வர தலங்களில் தலையாய கீரிமலை நகுலாம்பாள் சமேத நகுலேஸ்வரப் பெருமானின் பெருங்கருணையால் போற்றி வணங்குகின்றேன்.

எமது தேவஸ்தானத்துடனும், மாவை ஆதீனத்துடனும் மிகவும் தொடர்புடைய திருக்கோவில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் என்பது சகலரும் அறிந்ததே. அம்பாளின் அருளால் தெற்கு வாசலில் கோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவது மிகவும் சந்தோஷமான விடயமாகும். சென்ற ஆண்டு தைப்பூச நாளில் யானும் அடிக்கல் நாட்டும் வழிபாட்டில் கலந்து கொண்டு ஆசி வழங்கினேன். மிக ஆனந்தம். குறிப்பிட்ட காலப்பகுதியில் நேர்த்தியாக திருப்பணி நிறைவேற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவது சக்தியின் கடாட்சமே. ஆலய நிர்வாக சபையினரின் நன் முயற்சியை வாழ்த்தி எமது ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்

---

## மாவை ஆதீன கர்த்தா

## மகாராஜஸ்ரீ து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள் அவர்களது ஆசிச் செய்தி



# அன்னையின் கோபுர எழில்காண்பீர்!

தெல்லிப்பளை துர்க்காபுரம் உமுகொடைப் பதியினிலே கோவில்கொண்டு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அன்னை துர்க்காதேவியம்மன் ஆலய தெற்கு வாசல் கோபுரக் கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்வதையிட்டு மாவை ஆதீனப் பேரரசு ஆதீனகர்த்தாக்கள் மகிழ்வு கொண்டு கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற எல்லாம்வல்ல மாவைக் கந்தப் பெருமானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

ஆதீன கர்த்தாக்களின் ஆசீர்வாதங்கள்!

---

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுரு

## சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள் அவர்களது ஆசிச்செய்தி




அருள்மழை பொழியும் துர்க்கை அம்பாளின் திருவருளை அறியாதவர்கள் இல்லை. எனது சிறு பராயத்திலிருந்து அம்பாளின் ஆலயத்தில் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. இது முற்பிறப்பு புண்ணியம் என்பேன். அம்பாள் தன்னை நாடி வருபவர்களுக்கு நல்லருள் பாலிப்பவள். அம்பாளின் திருக்கோயிலில் எழுந்தருளி வாயிலாகிய தென்திசையில் அழகான கோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். கடந்த வருடம் தைப்பூச நன்னாளில் அடிக்கல் நாட்டப்பட்டு ஓராண்டில் சிறப்பாக திருப்பணிகள் நிறைவேறியுள்ளமை துர்க்கை அம்பாளின் திருவருளேயாகும்.

தேவஸ்தான தலைவர் அவர்கள் தென்திசைக் கோபுரம் அமைக்கவேண்டும் என்று மிகவும் ஆவலுற்றார்கள். புன்னாலைக்கட்டுவன் சிவஸ்ரீ கெங்காதரக் குருக்கள் அவர்களை நான் அழைத்து வந்து நிலையம் எடுத்தோம். மாவை ஆதீனகர்த்தா அவர்களின் நல்லாசியுடன் சங்குஸ்தாபனம் செய்யும் வாய்ப்பு கிட்டியது. இன்று கண்கொள்ளாக் காட்சியாக கோபுரம் நிமிர்ந்து நிற்கிறது. எல்லாமே துர்க்கை அம்பாளின் சக்தியினால் நடைபெறுகிறது. இந்திய சிற்பக் கலைஞர் திரு.புருஷோத்தமன் குழுவினர் கோபுரத்தை நல்லமுறையில் அமைத்துள்ளனர். ஆலய தர்மகர்த்தா சபையினரும் நிர்வாக சபையினரும் அடியார்களின் ஒத்துழைப்புடன் இந்தப் பாரிய பணியை நிறைவேற்றியுள்ளனர். எதிர்காலத்தில் ஏனைய திசைகளிலும் திருக்கோபுரங்களை நாம் காணும் வாய்ப்பு கிட்டும். அம்பாளின் திருவருளுடன் கும்பாபிஷேகம் இனிதே நடைபெற வேண்டுகிறேன்.

அகில இலங்கை இந்து மாமன்றம், அம்பாளின் கோபுர கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஆன்மீக இதழான 'இந்து ஒளி' சிறப்பிதழை வெளியிட்டு கௌரவிப்பதையிட்டு, மாமன்றத்தினருக்கு எனது நல்லாசிகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

---



## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பரம்பரை தர்மகர்த்தா சபையின் தலைவர் கௌரவ தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

தெல்லிப்பழை துர்க்காதேவி அம்பாளின் தெற்கு வாசல் கோபுரமானது மிகக்குறுகிய காலத்துள் அமைக்கப்பெற்று இன்றைய தினம் கும்பாபிடேகம் நடைபெறுவது மிகவும் மகிழ்ச்சி அளிக்கின்றது. இப் புண்ணிய கைங்கரியத்துக்கு பெரிதும் உறுதுணையாக இருந்தவர்கள் அம்பாளின் பக்தர்களே என்றால் மிகையல்ல. எமது தர்மகர்த்த சபையின் சார்பில் நிரவாக சபைத் தலைவரான கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் இரவு பகல் பாராது உழைத்தமையும் இங்கு நன்றி கூறப்படவேண்டியது. அவரது குடும்பத்தில இழப்பொன்று ஏற்பட்டிருந்த நிலையிலும் அம்பாளின் கைங்கரியத்தில் அவரின் அரப்பணிப்பான ஈடுபாட்டிற்கு நாம் என்றும் நன்றியுடையவர்கள். இத் திருப்பணிக்கு அனைத்து வகையிலும் துணைநின்ற நிர்வாகத்தினர் மற்றும்தர்மகர்த்தா சபையினர் மிக உதவியாக இருந்தனர். அம்பாளின் அருளால் எதிர்காலத்திலும் அனைத்தும் சிறப்புறும் என்பது எமது திண்ணமான நம்பிக்கை.

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபை தலைவர் செஞ்சொற்செல்வர் சைவஞானுபானு கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களது வாழ்த்துச்செய்தி



இந்தியாவிலுள்ள பெருங் கோயில்களின் சிறப்புக்கு அக்கோயில்களில் அமைந்துள்ள திருக்கோபுரங்களின் எழுச்சியும் முக்கிய காரணம் எனலாம். சைவத்தமிழ் பண்பாட்டு பாரம்பரியத்தில் ஆலய கட்டுமானத்தில் கோபுரங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. துர்க்கை அம்பாள் ஆலயத்தின் பிரதான கோபுரம் மிக அழகாகவும், கம்பீரமாகவும் காட்சியளிக்கிறது. அவ்வாறு தென்திசை வாசலில் ஒரு கோபுரத்தை அமைக்க வேண்டும் என்ற ஆவல் எமது நிர்வாகசபைக்கு ஏற்பட்டது. அம்பாளின் நல்லருளால் 2016 ஆம் ஆண்டு தைப்பூச நன்னாளில் அடிக்கல் நாட்டி, திருப்பணியை ஆரம்பித்தோம். பல அன்பர்கள் இத்திருப்பணிக்கு உதவ முன்வந்தனர். அனைவரது பரிபூரண ஒத்துழைப்பினாலும், சிற்பக் கலைஞர் புருஷோத்தமன் அவர்களது உதவியினாலும் அழகான கோபுரம் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. எங்கள் கனவு இன்று நனவாகி கும்பாபிஷேகம் நடைபெறுவது அம்பாளின் பெரும் கருணையே என்பதில் எதுவித ஐயமும் இல்லை. மனிதர்களுக்கு அப்பாற்பட்ட மாபெரும் சக்தி தெல்லிப்பழை துர்க்காதேவி என்பது முற்றிலும் உண்மை. கேட்பதெல்லாம் அருளும் அம்பாள், அடியார்களின் ஆவலை பூர்த்தி செய்துள்ளார்.

இந்த வரலாற்று நிகழ்ச்சியை பெருமைப்படுத்தும் வகையில் அகில இலங்கை இந்து மாமன்றம் தனது ஆன்மீக இதழான 'இந்து ஒளி' யை சிறப்பிதழாக வெளியிட்டிருப்பது சிறப்புக்குரிய விடயமாகும். மாமன்றத்தின் மதிப்பார்ந்த தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் அவர்களின் நன்முயற்சிக்கும், மாமன்றத்தின் நலப் பணிகளுக்கெல்லாம் இலண்டனிலிருந்து கொண்டு மாமன்றத்துக்கு ஆதரவு வழங்கும் 'வெஸ்டேர்ண் ஜுவலர்ஸ்' திரு.வேலுப்பிள்ளை சிவசுந்தரம் அவர்களின் ஆதரவுக்கும் நாம் என்றும் நன்றி பாராட்டுகிறோம்.

இந்து மாமன்றம், துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு பல்வேறு வகைகளில் உதவி வருகிறது. 2011ஆம் ஆண்டில் லண்டனிலிருந்து அன்பர்கள் மிகப்பெரிய கண்டாமணியை எமது தேவஸ்தானத்திற்கு அனுப்பிவைத்த வேளையில், மாமன்றம் அதனை கொழும்பு துறைமுகத்தில் பொறுப்பெடுத்து மிகச் சிரமத்துக்கு மத்தியில் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்திருந்தது. இதனை மறந்துவிடமுடியாது. அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அவர்களை கௌரவித்திருப்பதுடன், இரு சிறப்பு நூல்களையும் வெளியிட்டுள்ளது. மாமன்ற ஆன்மீக இதழான 'இந்து ஒளி' யும் அம்மையாரின் மறைவின்போது சிறப்பிதழாக மலர்ந்தது. இப்போது ஆலய தென்திசை வாயில் கோபுர கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மாமன்றம் 'இந்து ஒளி' சிறப்பிதழை வெளியிடுவது பெருமகிழ்ச்சியளிக்கிறது.

எல்லாம் வல்ல துர்க்காதேவியின் திருவருளால் கும்பாபிஷேகம் சிறப்பாக அமைவதோடு, அம்பாள் அடியார்கள் அனைவருக்கும், எனது இதயபூர்வமான வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## மாமன்றத் தலைவரின் பிரார்த்தனைச் செய்தி



இலங்கையின் வடபால் எழுந்தருளி அருளாட்சி புரியும் சக்தி தலங்களுள் ஒன்றாகத் திகழ்வது தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயமாகும். இத்தகைய அருள்நிறை ஆலயத்தில் காலத்திற்குக் காலம் பல திருப்பணிகளும் பல்வேறு அறப்பணிகளும் ஆற்றி ஏனைய ஆலயங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்வதும் துர்க்கை அம்பாளின் ஆலயம் என்றால் அது மிகையாகாது.

ஓர் ஆலயத்தின் அமைப்பு, நிர்வாகம், சமூக அக்கறை, நீண்டகால திட்டமிடல் என்பவற்றின் சின்னமாகத் திகழும் இவ் ஆலயத்தின் இன்னொரு திருப்பணியாக தெற்கு வாயிலில் கோபுரமொன்று அமைக்கப்பட்டு இன்று கும்பாபிடேகம் நடைபெற அம்பாள் அருள்புரிந்துள்ளார். கடந்த வருடம் தைப்பூசத் தினத்தன்று ஆரம்பமாகி இவ்வருட தைப்பூசத்தினத்தன்று கும்பாபிடேகம் செய்வது அம்பாளின் அருளையும் ஆலயத்தின் திட்டமிடலையும் நன்கு வெளிப்படுத்தி நிற்கின்றது.

வெறுமனே திருப்பணிகளுடன் மட்டும் நின்றுவிடாது மகளிர் இல்லம், பெண்கள் காப்பகம், முதியோர் இல்லம், அறநெறிப் பாடசாலை, ஆய்வு நூலகம், மகளிர் வீட்டுத் திட்டம், மருத்துவ உதவிகள், ஆயுள்வேத வைத்தியசாலையும் அதனோடிணைந்த மூலிகைத் தோட்டமும் எனப் பரந்தளவில் தனது விழுதுகளைப் பரப்பி ஆலமரமாக வளர்ந்து வருகின்றது. இவ் அனைத்துச் செயல்களுக்கும் திருவருள் துணையே பிரதானமான காரணம் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

தெய்வத்திருமகள் சிவத்தமிழ்ச்செல்வி அவர்களின் அளப்பரிய ' அர்ப்பணிப்புக்களுக்கு எவ்வாறு வரையறை இல்லையோ அதேபோல் அவரின் ஈடுசெய்யமுடியாத இழப்பின் பின்னர் சைவஞானபானு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் அயராது செயற்பட்டு வருவது இங்கு நன்றியுடன் கூறப்படவேண்டியது. சைவஞானபானு அவர்கள் மாமன்றத்தின் பணிகளையும் வடக்கில் சுமக்கும் ஒரு தூணாகவே இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை இந்து மாமன்றமானது கடந்த காலங்களில் துர்க்காதேவி அன்னையின் மகோற்சவ கால சிறப்பு இந்து ஒளியை வெளியிட்டு வந்துள்ளதுடன் தெற்கு வாசல் கோபுர கும்பாபிடேகத்தை முன்னிட்டு சிறப்பிதழ் ஒன்றினை வெளியிடுவதில் மிகுந்த மன மகிழ்ச்சியடைகிறேன்.

அன்னையைநாடிவரும்பக்தர்களுக்கும், எண்ணத்தால் அன்னையை நினைந்து வழிபடும் அன்பர்களுக்கும் இவ்வுலக மாந்தர் அனைவருக்கும் அன்னை தன் கருணை மழை பொழிந்து அருள்பாலிக்க பிரார்த்திக்கின்றேன்.

இறைபணியில்

**கந்தையா நீலகண்டன்**
தலைவர்

# ஸ்ரீ துர்க்காதேவி திருப்பதிகம்



ஞானவித்தகர் அருட்கவி சீ. விநாசித்தம்பி

காப்பு

வெண்பா

சீரார்நற் றெல்லிநகர் சேரே ருழுகுடைவாழ்
பாரார்துர்க் காதேவிப் பண்ணவிக்கு – நேரார்வத்
தாற்பதிக மோதவுயர் தந்திமுகத் தெந்தையிரு
காற்சவதம் போருகப்பூக் காப்பு.

ஆசிரிய விருத்தம்

உலகமொரு மூன்றினுங் குலவுபற் பலகோடி
யோனிபே தங்களாகி
ஊர்வநீர் வாழவதத் துவநடப் பனநிற்ப
வுயரப் பறப்பதவழ்வ
நிலவரு மக்கள்வகை வகையாக வீன்றுமிக
நீடருள் சுரந்தவைகடம்
நினைவறிந் திருக்கண்க ளிமையாம லிரவுபகல்
நீங்காம லுடனிருந்து
அகிலபோ கங்களையு மூட்டியன் பொடுவளர்த்
தாதரித் திடுமன்னையே
அடியரனு தினமுமுண் டானந்த முறவைகு
மரியவா னாவமிர்தமே
திலகவா ணுதலணங் கேயெனது துயரெலாந்
தீரவருள் செய்யம்மணீ
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே!

எந்தநா ளெந்தவகை வந்துபந் தித்ததிங்
கென்னைமல மென்பதறியேன்
ஏதிலாக் கற்பங்க ளெண்ணிலெண் ணிலவாய்
இருட்டல மிகுந்தறியேன்
அந்தநடு வாதியில் லாதமக மாயிநின்
அருளினா லறிவுதோன்றி
அமலமாம் வகையற்ப புல்பூடு மரமாகி
யாமெழு வகைபிறப்பாய்
வந்துவந் தேபோவ தறியே னினிச்செயும்
வண்ணமே தென்பதறியேன்
வரம்ருவு முன்சரண் போற்றவறி யேன்சாண்
வளர்க்கவகை தேடியோடிச்
சிந்தைநொந் தேயயரு மறிவிலேன் குறையெலாந்
தீர்த்தருள்செய் வாயம்மணீ
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே!

மலமாயை கன்மவிரு ளிடையன்று விழவந்த
வகையொன்று மறியாப்பெரும்
மதிகெட்ட வென்னையிப் படியின்று வரையுமிவ்
வகையாற்றெ ணாதமிடியால்
நலனொன்று மின்றியுயி ரொடுசெத்த பிணமாகி
நாடொறும் வாழவைத்தாய்
நாடுமுன் னருளுக் கடாதன்னை யேயீது
நானுனது மைந்தனன்பாய்
இலகுமிரு குழையருகு பொருதுசெவ் வரிசிதறி
இருவயில் களைப்பழித்த
இணைகயல் கண்ணினா லென்முகம் பார்த்துலக
வின்பெல்லாந் தந்துயாருஞ்
செலவரிய தாயடியர் செல்கதிய தானபர
சிவபதமு மீந்தருள்செய்வாய்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே!

அருளோங்கு மானந்த வல்லிநா லெண்வகை
அறங்களை வளர்த்தசெல்வி
அயனாதி முப்பத்து முக்கோடி தேவர்நிதம்
அடிபரவு மிறைவிபோதப்
பொருளோங்கு முயர்தவத் தோரருங் கதியைப்
பொருந்தவழி காட்டுமனையே
பொருளிலேன் றாய்தந்தை தமருதவி தானிலேன்
புவியிலொரு சுகமுமில்லேன்
மருளோங்கி நிறைமனத் தேனிகம் பரமான
வாழ்வினும் தாழ்வுறுவனோ
வந்துவந் தேபோன வாழ்வினால் நொந்துளம்
வாடுமென் முகம் நோக்கியே
தெருளோங்கு முயர்கல்வி செல்வமும் தந்துயர்
தீரவருள் செய்யம்மணீ
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே!
பெறுமெலாப் பிறவியினும் மானுடப் பிறவிதான்

**காத்யாயினி:** அசுரனோடு போரிடுவதற்காக துர்க்கை சிம்மவாகனத்தில் எழுந்தருளினார். அந்த நிலையில் அவள் காத்யாயினி எனப்படுவாள். இவளை மேலைச் சாளுக்கிய அரசர்கள் வழிபட்டதாக ஆவணங்கள் காட்டுகின்றன. ராஜேந்திரசோழன், சாளுக்கியரை வெற்றிகொண்டு எடுத்துவந்த துர்க்காதேவி விக்கிரகம் கங்கைகொண்ட சோழபுரம் கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

# குடமுழுக்கினால் உலகம் உய்யுமே!

**பண்டிதர், கலாநிதி செ. திருநாவுக்கரசு**

1. தெல்லிப்பழைத் துர்க்காதேவியின் திருக்கோயில்
தென்திசைக் கோபுரகுடமுழுக்கு
தொல்புகழ் ஆண்டெனத் தோற்றியதுர்முகி
தூயதைத் திங்களின் தைப்பூசம்
புல்லியவளர்பிறைபுலர்காலைப் பொழுதினில்
புண்ணியகாரியம் பொலிவுற
நல்லிசைவாத்தியம் நான்மறைமுழங்கிட
நடைபெறத் திருவருள் நாடிற்றே!

2. தாயின் மடியினில் தழைத்திடுமழலைபோல்
தண்ணொளிவெண்ணிலாதருவபோல்
பாயும் அருவியின் பயன்விளைகின்றபோல்
பங்கயமென்மலர்ப் பான்மைபோல்
ஓய்விலாதுழைத்திடும் உழவரின் உறுதிபோல்
ஒண்டமிழ் மொழியதன் உயர்வுபோல்
ஆயபேரன்புசெய் அன்னையின் கோபுர
ஆகமகும் பாபிஷேகம் அமையுமே!

3. சின்னதாய் அமைந்து,சீரினாற் பொலிந்து
சிலபத்துஆண்டின்பின் உயர்ந்து
அன்னையார் தங்கம்மாஅவர்தம் தலைமையில்
ஆலய அறங்காலல் சபையினர்
முன்னுயர் பணிகளால் மூச்சுடன் எழுந்து
மூலக் கோபுரம்,மண்டபம்
இன்னறுந் தீர்த்தக் கேணியும் இயற்றி
இறைவியெம் துர்க்கா இருந்தனள்.

4. ஆதரவற்றபெண்களின் நலனுக்
கானதோர் மகளிர் இல்லம்
தீகிலாஅறிவைத் திரட்டியேநல்கத்
திகழ்ந்ததுநூலகமொன்று
வாதனைசெய்யும் வருத்தங்கள் போக்க
வந்ததுஔடதசாலை
சாதனைபடைத்தசரித்திரம் துர்க்கா
சக்தியின் சந்நிதியன்றோ!

5. துர்க்கையம்மனைத் தொழுபவர் பசியால்
துவண்டிடக் கூடாதெனக் கருதி
அர்த்தமோடன்னதானமண்டபம்
அமைத்தேஅருஞ்செயலாற்றி
நர்த்தனமாடிடும் நளினசிங்கார
நாயகிஆலயந் தன்னில்
மர்த்தனமிடுவாற் மலரடிபணிய
மலர்ந்ததுமணிமண் டபமாம்..

6. தெல்லியூர் நாடியேதெரிசனம் பெற்றிடத்
திசையெங்குமிகுந்துவருவார்
வல்வினைபொடிபடவரம்வேண்டித் துர்க்கையை
வாயாரப் பாடிமகிழ்வார்
அல்லதைஆற்றிடும் அழுக்குறுமனத்தினில்
அமைதியைஅன்பினைஅருளப்
பல்விதமாகவேபரவியேதேவியைப்
பார்த்ததும் கண்ணீர் சொரிவார்.!

7. இதுபோலஒருதலம் ஈழத்தில் இலையென
இதயத்தாற் பேதம் மாந்தர்
அதுபோல் ஆயிரம் அறப்பணிஆற்றிடும்
ஆலயம் உளதோவெனக் கேட்பர்
மதுவுண்டவண்டாகிமகோற்சவகாலத்தில்
மண்ணுளோர் அன்னையைக் கண்டு
எதுவந்தபோதிலும் எழில்துர்க்கையிருக்கின்றாள்
எமக்கேது இனித்துயரம் என்பார்.

8. ஆறுகாலப் பூசையும் ஆன்மீகசேவையும்
அறப்பணிஆற்றிடும் நன்மையும்
மாறுபடாமனத்தராய் மக்கள்வந் திறைஞ்சிடும்
மாட்சியும் துர்க்கையின் ஆட்சியும்
ஈறிலாப் பெருமாட்டிஎங்கள்சிவத் தமிழ்ச்செல்வி
இணையற்றஅருட்பணியின் ஈகையும்
பேறினாலவர் பின்வந்தபெருந்தலைவர் திருமுருகன்
பேணுகின்றபெருந்தவமும் பெருகவே!

9. விரைகமழ் மலர்கள் விரவிய சூழல்
விண்ணுறவோங்கியதருக்கள்
தரையெலாம் வெண்மணல் தடவியகோலம்
தாவிடும் நாதஸ்வரகானம்
நிரைநிரையாய்வரும் அடியவர் நேர்த்தி
நின்றொளிர் கோபுரக் கீர்த்தி
உரையுணர் விளந்துஅன்பர் அன்னையை
உள்ளத்தால் வணங்குவர் உண்மையாய்.

10. உலகெங்கும் வாழும் உன்னதச் சைவர்கள்
உவந்தநல் லுதவிகளோடு
நிலைபெற்றதுர்க்கையின் நீடியபணியொன்று
நிறைவேறஅன்னையருள் புரிந்தனள்
கலைநின்றபஞ்சதளக் கவினுறுகோபுரம்
காலத்தைக் கடந்துநிற்கவே
சிலமாதமுயற்சியால் செய்தேமுடித்தனர்
செஞ்சொற் செல்வரின்தலைமையில்.

11. கோபுரதரிசனம் கோடிபுண்ணியம்
கொண்டவூ ரென்றும் வாழும்
மூபுரமெரித்தமுன்நோன் தேவி
மூல மூர்த்தமாய் ஆனகோயில்
மாபுரம் துர்க்காவெனமாறியமண்ணில்
மகாகும்பாபிஷேகம்
சீபுரத் தென்றிசைக் கோபுரம் காணவே
சிந்தைகுளிர்ந்துசிறக்குமே!

12. அந்தணர் அருமறைமந்திரம் ஓதிட
ஆலய மணிகள் ஓசையிட
சிந்தைகொள் திருமுறைப் பனுவல்கள் ஒலித்திடச்
சீருடன் வாத்தியம் முழங்கிட
வந்தனைசெய்துவாழ்த்திடுமடியார்
வாயினுமனத்தினும் பக்தி
முந்துறத் துர்க்கைதென்கோபுரக்குட
முழுக்கினாலுலகம் உய்யுமே!

# சைவ சமயத்தில் சிவநடனம்

செல்வி ஜமிலா இராமசாமி

சிவபெருமானை முழுமுதற் கடவுளாக கொண்ட சமயம் சைவ சமயமாகும். சிவபெருமானும் அவருடைய சக்திகளும் கதிரவனும் அவனது கதிர்களும் போல்வன. கதிரவனது கதிர்கள் விரியும் போது உலகில் உள்ள பொருள்கள் விளக்கம் பெறுவது போல சிவனுடைய இச்சை முதலிய செயல்கள் தொழில்படும் போதுதான் பிரபஞ்ச உண்மை புலனாகின்றது. இறைவன் சக்தியில் இருந்து வேறுபட்டவன் அல்லன். சிவனும் சக்தியும் சேர்ந்து அர்த்தநாரீஸ்வர வடிவில் நின்றும் எக்காலத்தும் பஞ்ச கிருந்தியங்களை செய்து கொண்டே இருப்பார். இறைவன் பல நாமங்களால் அர்ச்சிக்கப்படுகிறார். நடராஜர் ஆடலரசன், கூத்தபிரான் என்ற நாமங்களோடு சைவ சமயத்தவர்கள் வழிபடுகின்றனர். இவ்வாறு ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனிடத்திலுருந்து அறுபத்தி நான்கு கலைகளும் தோன்றின. அக்கலைகளில் பரதக்கலை சைவசமயத்துடன் நகமும் தசையும் போலவும் பூவும் மணமும் போலவும் இணைந்து காணப்படுகின்றது.



சிவனின் பலவகையான நடனங்களில் மூன்றுவகை முக்கியம் பெறுகின்றது. சிவ பிரதோஷவிரதம் இது சைவ ஆகமப்படி வழிபடப்படுகின்றது. கைலாய மலையிலே மாலைப் பொழுதிலே தெய்வீக பல்லியத்துடன் ஆடிய போது தேவர்கள் இசையமைத்தார்கள். உலகில் அன்னையாகிய பார்வதியை அரியணையில் அமரச் செய்து சிவன் நடனமாடினார். சிவனுடைய பூதகணங்கள் பூடை சூழ சிவன் தேவியோடு சுடலையில் நடனமாடுவதை "அரண் அங்கி நன்னில் அறையில் சம்ஹலம்" என்பது உண்மை நெறிவிளக்கம். அதாவது ஆன்மாக்களை இளைப்பாற்றும் செயலைக் குறிக்கின்றது. இறைவனுடைய அடுத்த நடனமாகிய நாதாந்த நடனம் தில்லையம்பல பொற்சபையிலே இடம் பெற்றது. சிவனுடைய திருநடனம் பஞ்ச கிருந்தியங்களை அதாவது அவை படைத்தல் காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாகும். உயிர்களை மேன்மேலும் வினை செய்வதில் அழுத்தி அதன் மூலமாக உயிர்களுக்கு வினையொப்பமும் மலபரிபாகமும் ஏற்படச் செய்கிறது. மும்மலங்களுடன் இருக்கும் ஆன்மாவை அவற்றினின்று பிரித்தெடுத்து அதனை தூய்மையும் ஒளியும் உடையதாக உயர்ந்த பேரின்ப நிலையடையச் செய்வதையும் எடுத்துக் கூறுகின்றது.

மலர்கள் நறுமணம் கமழ்வதும் ஆறு கடலை நாடிச் செல்வதும் எவ்வாறு இயல்பாகவே ஏற்படுகிறதோ அவ்வாறே எமது உள்ளம் இறைவனை ஆவலுடன் நோக்கி வருகின்றது. பக்தி என்பது முயற்சி இன்றி இயல்பாகவே இறைவனை விரும்பி ஆன்மா நாடுதலே உண்மையான பக்தியாகும். இப்பக்தி நிலையிலே ஆன்மா இறைவனை மேலும் விரும்பி நாடுதல் போல இறைவனும் ஆன்மாக்கள் மீதுள்ள பெருங்கருணையால் எழுந்தருளி ஆட்கொள்வார். இறைவனுடைய திருக் கோலத்தை பக்தியடியார்கள் இசையாலும் நடனத்தாலும் பாடியாடி வழிபட்டனர்.

இறைவனின் தோற்றத்தை தரிசித்த காரைக்கால் அம்மையார்

"காலையே போன்றிலங்கு மேனி கடும் பகலின்"

என்கிறார் திருஞான சம்பந்தர். சிவனது ஐந்தொழில்களும் ஆனந்த நடனத்துடன் நடந்தேறுகின்ற அநுபூதி அனுபத்தை

"நட்டப் பெருமானை நாளுநீ தொழுவோமே"

என்றும், நாவுக்கரசர்

"அன்புக்கினியதோர் சிதம்பரம் தனிலே
நடம் புரிந்தருள் அம்பலவாணனே"

என்றும் பாடியிருக்கிறார்கள். முத்துத்தாண்டவரும் சிவபிரானின் ஆனந்த தாண்டவம் கண்ட போதே உடல்பாக்கியம் பெற்றவர். தாண்டவ தரிசனத்தை ஒரு தடவை பார்த்தாலே துன்பம் எல்லாம் நீங்கும். இதையே

"நமக்கினி பயமேது
தில்லை நடராஜன் இருக்கும்போது"

என்று சொல்லப்பட்டுள்ளது. சிவனின் நடனம் ஆன்ம ஈடேற்றத்திற்காகவே நிகழுகின்றது. இதை இராமலிங்கர்

"அன்பரெலாம் தொழ மன்றில்
இன்ப நடனம் புரிகின்றார்"

என்கிறார். இறைவனின் நடராஜ வடிவமாகிய ஆனந்த தாண்டவம் இடம் பெறும் இடமாகிய சிதம்பரத்தில் காணும் தூக்கிய திருவடியும் உள்ளத்தை நன்கு ஈர்த்துள்ளது.

"நடனமாடினார் ஐயனார் நடனமாடினார்
நடனமாடினார் தில்லை நாயகம்
பொன்னம்பலம் தன்னில்"

என மாரிமுத்தா பிள்ளையும் இறைவனின் திருக்கோலங்களை மனதில் உணர்ச்சிகள் மூலம் சிறப்பாக சிவத்தமிழ் ஆராய்ச்சி கட்டுரைகள் மூலம் வெளிக்காட்டுகிறார்கள்.

சிவநடனம் எப்பொழுதும் பேரின்ப வீட்டு நிலையை நினைவுபடுத்தும் சிதம்பரத்தில் இறைவன் ஆகாய வடிவில் உள்ளான். இறைவனின் செய்கைகள் ஆடல் அசைவுகளாலும் காணப்படுகின்றது. சிவனின் திருவுருவம் விளக்கும் தத்துவங்களை பார்க்கும் போது இறைவனின் வலது கரம் படைத்தலையும், வலது அபயகரம் காத்தலையும், பிறவிப் பிணியில் கிடந்து வருந்தி வந்த உயிர்களுக்கு அபயம் அளிக்கின்றது. இடது திருக்கரத்தில் இருக்கும் நெருப்பு சங்காரத்தை குறிக்கின்றது. அதாவது நமது பாசங்களை அழிப்பதை உணர்த்துகிறது. மோட்சத்தை இடது வரதஹஸ்தம் அளிக்கின்றது. தூக்கிய திருவடி ஆன்மாவிற்கு பரமசாந்தியை தருவதோடு உள்வளைந்து அடிக்கீழ் இருக்கும் உயிர்களுக்கு முத்தி இன்பத்தையும் தருகிறது. இறைவன் ஆணவ மலத்தின் அடையாளமான உயிர்களை அடக்கி அவற்றை வீடு பேறு அடையச் செய்யவும்,

இறைவன் கழுத்திலிருக்கும் பாம்பணி நாகசக்தி யாவற்றையும் நியமிக்கும் உலகம் தோன்றவும் ஒடுங்கவும் நிமித்த காரணர் நாமே என்பதையும் ஆபரணங்களான தோடும் குழையும் ஆணோடு பெண்ணாய் அமைந்த உலகம் தானே என்பதையும் அவைகாட்டும். படைத்தல் என்பன சிவ சக்தியின் தனித்தன்மை என்பதையும் காட்டுகின்றது.

பரமசிவனின் முத்தொழிலுக்கேற்ப சிவனுக்கு விழிப்புநிலை, கனவுநிலை, உறக்கநிலை என்ற மூன்றும் அமைகின்றன. பாசங்களின் வாசனை தீர்ந்து போகும் போது உயிர் அந்த பூரணத்துள் நிலையை அடைகிறது. அதுவரை பிறவிதோறுஞ் செய்த வினைப்பயனை சுகதுக்க போகங்களை உயிர் அனுபவித்து வருகின்றது. இறைவனுடைய திருமுகம் எல்லை இல்லா அழகினையும் இனிய தண்ணொளியினையும் குறிப்பதோடு. பவள நிறச் சிவந்த திருமேனி தூய்மைப்படுத்தலையும் குறிப்பதோடு, அணிந்திருக்கும் திருநீறு பராசக்தியையும் ஆன்மாக்களின் பந்த பாசங்களின் பற்றுதலையும் அறிவற்ற இயல்பையும் சுட்டும். அங்கவஸ்திரம் உலகில் உள்ள அறுபத்து நான்கு கலைகளாலும் அறியப்படும் பரஞானக்கலையை நான்கு வேதங்களாகின்ற அரைநாணிற் கோத்து அணிந்திருக்கும் நிலையை கூறுவதோடு முக்கண்கள் இச்சாசக்தி, கிரியாசக்தி ஞானசக்தி என்பவற்றையும் சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மும்மூர்த்திகளையும் கூறுகின்றது. உலகத்தின் நாயகனுடைய புன்சிரிப்பு துன்பங்களை தன் புன்முறுவலால் நீக்குகின்றது. சிவன் தெற்கு திசை நோக்கி நடனம் புரிவது தென்தமிழின் மீதும் தென்திசை காற்று மீதும் தெற்கு திசை தலைவனாகிய யமனிடம் உள்ள பயத்தை நீக்குதற்காகவேயாகும்.

அன்பு நெறியே மனிதனை மனிதனாக்கும். இறைவனே உயிர்களின் துன்பத்தை நீக்கி இன்பம் அளிக்கிறான். இறைவன் அன்புருவானவர். சைவ சமயத்தில் சிவ நடனத்தை பதிகங்கள், பாடல்கள் பிரபந்தங்கள் மூலமும் இறைவனின் பெருமைகளுடன் எடுத்து கூறி வந்தனர்.

"அன்பாகி அம்பலத்தாடும் ஐயா
அம்பலவாணரே நீர் அன்பர்கட்கு அன்பான சாமி"

என்று இராமலிங்கர் சிவத்தமிழ் ஆராய்ச்சி கட்டுரைகள் மூலம் எடுத்துக் கூறுகின்றார். சமய குரவர்களில் மாணிக்க வாசகர் இயற்றிய திருச்சாழல் இது பெண்கள் கை கொட்டி விளையாடுவது ஆகும். இவ்வாறு விளையாடும் போது ஒரு பெண் கேள்வி கேட்பது போலவும் மற்றைய பெண் அதற்கு விடை கூறுவது போலவும் அமைந்துள்ளது.

முதலாவது பெண் :- தோழி எல்லோர்க்கும் தலைவனான ஈசன் கிழிந்த துணிகளை கோவணமாக தைத்து உடுத்தியிருப்பதேன்?

இரண்டாவது பெண் :- அவர் எளிமையாக நான்கு வேதங்களையே அரை நாணாகவும், நிலைபெற்ற கலைகளில் பொருந்தியிருக்கும் மெய்ப் பொருளையே கோவணமாகவும் அணிந்துள்ளார் என்பதை நீ அறியவில்லையா?

முதலாவது பெண் :- தில்லையில் ஆடுகின்ற இறைவன் பெண்ணுக்கு பாதி உடம்பை தந்தாரே அவர் பித்தனல்லனே.

இரண்டாவது பெண் :- அடி அசட்டுப் பெண்ணே! பெண்ணுக்குத் தன் உடம்பில் பாதியை அவர் தந்திராவிடின் உலகமே அழிந்திருக்குமே! இதை நீ அறியமாட்டாயா?

பரமேசுரன் ஆடுகின்ற அரங்கம் ஜீவாத்மா. இவ்வரங்கத்திற்கு பற்பல வேடங்கள் புனைந்து ஆடுகின்றார். இறைவன் சிவனும் சக்தியும் நின்று உயிர்களை இயக்காவிடில் உலகமே அழிந்து விடும். இதனையே சிவஞான சித்தியார் "இல்வாழ்க்கை அவனால் வந்த ஆக்கம்" என்றார். மாணிக்கவாசகருடைய இப்பாடல்களை பண்ணுடன் பாடுவதும் வாய்ச் சொல்லால் கேட்பதுவும் சிவனருள் வேண்டி நிற்றலுஞ் சைவ சமயத்தவர்களுடைய தனிப்பெரும் கடமைகளாகும். உலகம் பரமசிவனின் மறுவடிவம் ஆதலால் உலகமும் உண்மைப் பொருள் என்பர். சந்திரன் ஓடுகின்ற நிறைந்த குட்டையில் சலனமற்றிருப்பது போலத் தோன்றினாலும் சந்திரனின் தூய்மையும் இயல்பும் மாறாதிருப்பது போல பரமேசுரன் பல்வேறு பிறவிகளை மேற்கொண்டும் தேவர், மனிதர், குரங்கு, மரம் முதலான உருவங்களை எடுத்தும் சுகதுக்கங்களை நுகர்ந்தும் தன்னுடைய நிலையான இச் சொரூபத்தையே கொண்டிருக்கிறார். சிவனே பரனென நம்பி வாழும் மக்களுக்காகவும் உலகத்தின் நன்மைக்காகவும் சுபீட்சத்துக்காகவும் நல் வாழ்வுக்காகவும் என்றென்றும் நடராஜப் பெருமான் ஆடல் புரிந்தருளுகிறார்.

(க. டிபா.த (உ.த) வகுப்பு மாணவர்களின் நன்மை கருதி மாமன்றம் தொகுத்து வெளியிட்ட இந்து நாகரீகம் நூலின் ஓர் அத்தியாயம் இது.)

## மாமன்றச் செய்திகள்

### தெரணியகலபிரதேசத்தில் ஆன்மீகச் சுடரின் அருள் ஒளி

அகில இலங்கை இந்துமாமன்றத்தின்அனுசரணையில் கடந்த 29-01-2017 ஞாயிற்றுக்கிழமைதெரணியகலை, ஸ்ரீ கதிரேசன் தமிழ் மகாவித்தியாலயத்திலும் நூரி, அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலும் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் சொற்பொழிவுஒழுங்குசெய்யப்பட்டது. ஆன்மீகச் சுடரின் அருளுரைமாணவர்களின் எதிர்காலநல் வாழ்க்கையைவளப்படுத்தும் வகையில் இருந்தது.

சிறப்புநிகழ்வாகசிலமாதங்கள் இயங்காது இருந்தஅறநெறிப் பாடசாலைசுவாமிகளின் ஆசிர்வாத்த்துடன் மீளஆரம்பித்துவைக்கப்பட்டது. அத்துடன் இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டஅனைவருக்கும் அன்னதானமும் வழங்கப்பட்டது. சுவாமிகளேமுன்னின்றுஅடியார்களுக்குஅன்னம் பகிர்ந்தார்.

மண்சரிவால் பாதிக்கப்பட்டதெகியோவிற்ற,டெஸ்வேர்த் தோட்டத்தில் மண்சரிவுஎச்சரிக்கைவிடுக்கப்பட்டுதற்காலிக கூடாரங்களிலும்,கைவிடப்பட்ட இறப்பர் தொழிற்சாலையிலும் எவ்விதஅடிப்படைவசதிகளுமின்றிவசிக்கின்ற 50 தொழிலாளர் குடும்பங்களைசந்தித்துசுவாமிகள் உரையாடிதானேஅனைத்துகுடும்பங்களுக்கும் உணவுப் பொதிகள் வழங்கினார்.

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்கள் எங்கும் பரவுக அறங்கள் இன்பம்
நல்குக உயிர்கட்கெல்லாம் நான்மறைச் சைவம் ஓங்கிச்
புல்குக உலகம் எல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க.

சமயம் என்பது மக்களை தூய நேரிய வாழ்வு வாழ வழிகாட்டும் ஒரு சன்மார்க்கமாகும். அதாவது வீட்டு நலத்தையும், நாட்டு நலத்தையும் பேணுவதே சமய வாழ்வின் நோக்கமாகும். அருளாளர்களும், ஆலயங்களும் இந்நிலையை உணர்ந்து பணியாற்ற வேண்டியது இன்றியமையாதது ஆகும்.

'எவ்வுயிருக்கும் தன்னுயிர்போல் எண்ணியிரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாப் பராபரமே
என்று தாயுமான சுவாமிகள் பாடினார்.

ஒரு சமூகத்தை நன்நெறியில் நடத்திச் செல்ல சட்டம் எவ்வளவு அவசியமோ அவ்வளவுக்குச் சமயமும் அவசியமாகும். சட்டப்புத்தகங்களில் இருக்கும் குறிப்புகளிலும் பார்க்க சமய நூல்களிலிருக்கும் சட்டங்கள் மிகவும் வரவேற்கத்தக்கவை. திருவெண்ணெய் நல்லூர் விசாரணையில் வயோதிக அந்தணரை நோக்கிப் பஞ்சாயத்தார் கேட்கிறார்கள் 'ஆட்சியில் ஆவணத்தில் அன்றி மற்றயலார் தங்கள் காட்சியில் மூன்றிலொன்று காட்டுவாய்' இதிலிருந்து சமயமும் சட்டமும் எவ்வாறு இணைத்துப் பேணப்பட்டது என்பதைக் காணமுடிகிறது.

# ஆலயங்களும் அறப்பணிகளும்

(இந்நாட்டின் ஆலயங்களின் வரலாற்றில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் நிர்வாகத்தைப் பொறுப்பெடுத்து ஒரு புதிய சரித்திரம் படைத்த கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி எழுதிய கட்டுரை இது.)



இயற்கை சீற்றமில்லாது இயங்கவும், நாட்டிலே நல்ல மழை பொழியவும், அதனால் விளைவு பெருகவும், மக்கள் வாழ்வு சிறக்கவும் திருக்கோயில் வழிபாடுகளே காரணமாக அமைந்தன என்பதை எமது சமயக்குரவர்கள் திருமுறைகளின் மூலம் விளக்கியுள்ளார்கள். நாயன்மார்கள் பல திருத்தலங்களுக்குச் சென்று பாடிப் பரவி வழிபட்ட போதும் அவர்கள் சமூக நலன்களை மறக்கவில்லை.

திருமருகல் என்ற இடத்தில் இளம் பெண் ஒருத்தியின் கண்ணீரைத் துடைத்துத் திருமணத்தை நிறைவேற்றி வைத்தவர் ஞானசம்பந்தப் பெருமான். திங்களூரிலே பாம்பு தீண்டியதால் மரணமடைந்த அப்பூதியடிகளின் மகனை உயிர் பெற்று எழச் செய்தவர் நாவுக்கரசர். சுந்தரமூர்த்திநாயனாருடைய வழக்கினை அந்தணப் பெரியவரின் வேண்டுகோளுக்கிணங்க தீர்ப்புக் கூறிய இடம் திருவெண்ணெய் நல்லூர். பட்டினியால் வாடிய மக்களுக்கு அன்னமிட்டுப் பசி போக்கிய இடம் திருவீழிமிழலை. இவ்வாறு ஆலயங்களை அண்டியே சமூக நலன்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டன என்பதை நம் நாட்டுத் திருக்கோயில் வரலாறுகள் காட்டுகின்றன.



சைவம் என்ற சொல்லுக்கு அன்பு என்று பொருள். அதுவே கருணையாகவும் இரக்கமாகவும் பாசமாகவும் மலர்கிறது. பிறவுயிர்பால் அன்பு காட்டலே சைவநெறியாகும்.

சைவ சமயத்தில் அன்னதானப் பணி பேரிடம் பெற்றிருந்தது. திருக்கோயில்களில் நைவேத்தியங்கள் இறைவனுக்கு நிவேதிக்கப்பட்ட பின்பு ஏழைகளுக்கே வழங்கப்பட்டன. என்பதும் யாத்திரிகர்களுக்குத் தங்குமிட வசதியோடு உணவு நல்கப்பட்டது என்பதும் விழா நாட்களில் கஞ்சி வார்த்தல் முதலியன வழக்கில் இருந்தன என்றும் அறிய முடிகிறது. அன்ன சத்திரங்கள் நாடெங்கும் இயங்கின. அப்பரடிகளும், திருஞானசம்பந்தரும் பஞ்ச காலத்தில் சொல்லால் சாற்றிச் சோறிட்டுத் துயர் கூர் வறுமை தொலைத்திட்டதாகப் பெரியபுராணம் குறிக்கிறது. சோறு மணக்கும் மடங்கள் எல்லாம் அன்னதானப் பணிகளில் முன்னின்றன. மகேஸ்வரப் பூசை என்ற பெயரால் மக்களுக்கு உணவு வழங்கப்படும் முறை இன்றும் திருமடங்களில் நிலவி வருகிறது. தமிழ் மக்கள் தமது இல்லத்து இன்ப துன்ப நிகழ்ச்சிகளில் எல்லாம் சோறிட்டு வந்தனர். மனிதாபிமானம் மிக்க நமது சமயத்தின் இவ் அறப்பணியை ஆற்றி வந்த குன்றத்தூரைப் பாராட்டுகிறார் உமாபதி சிவாச்சாரியார்.

சோறு மணக்கும் மடங்கள் எல்லாம்
தூய்மை மணக்கும் சிந்தை எல்லாம்
சுவண் மணக்கும் ஆடையெல்லாம்
தொங்கல் மணக்கும் தோள்கள் எல்லாம்
சேறு மணக்கும் கழனி எல்லாம்
செல்வ மணக்கும் மாட மெல்லாம்
தென்றல் மணக்கும் மேடை எல்லாம்
தெய்வ மணக்கும் செய்யு ளெல்லாம்
நீறு மணக்கும் நெற்றி யெல்லாம்
நெய்யே மணக்கும் கறிக ளெல்லாம்
நெருப்பு மணக்கும் குண்ட மெல்லாம்
நேய மணக்கும் வீதி யெல்லாம்
சாறு மணக்கும் குன்றத்தூர்
தலைவா தாலோ தாலேலோ
சகளாகம பண்டித தெய்வச்
சைவா தாலோ தாலேலோ

கடவுள் மறுப்பினைப் பேசிய பௌத்தமும், ஜைனமும் கூடப் பசிக்கு சோறிடுவதைப் பெரிதாகப் பேசின. மணிமேகலை அமுதசுரபி துணையோடு "பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக" என வாழ்ந்த வாழ்வைக் காப்பியம் பேசிக் காட்டுகின்றது. ஜைனம் 'தயாமூலதன்மம்' என இதற்கு உடன்பட்டுப் பேசுகின்றது. வைணவ ஆழ்வார்களில் ஒருவராகிய திருமங்கை ஆழ்வார் நாளும் ஆயிரவர்க்கு உணவு வழங்கி வறுமையுற்றமையை வரலாற்றால் அறிகிறோம். எனவே இந்த நாட்டின் சமயங்களின் உயிர்க் கொள்கைகளில் ஒன்றாகிய சோறிடும் தருமம் மீண்டும் புதிய நோக்கில் மலர்ந்திருப்பது மகிழ்ச்சி தருகிறது.

அந்தக் காலத்திலே ஆலயங்கள் நல்ல கல்விச் சாலைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் அறநெறி நிலையங்களாகவும் அவை விளங்கின. தமிழகத்திலே முதன்முதலாகக் கல்லால் கோயிலைக் கட்டியவன் என்கின்ற பெருமை கோச்செங்கணான் என்ற சோழ மன்னனையே சாரும். அவனுடைய காலத்திலே தான் ஆலயங்கள் கல்லால் கட்டும் முறை ஆரம்பமானது. இன்று ஆயிரக்கணக்கான ஆலயங்கள் கருங்கற்களால் கட்டப்பட்டவையாக விளங்குகின்றன. கலை வளர்க்கும் நிறுவனங்களாகவும் ஆலயங்கள் விளங்கி வந்துள்ளன. நமது நாட்டை நினைத்தால் அழகான கோயில்கள் மலைச்சரிவிலும் ஆற்றங்கரையிலும் கடற்கரையோரங்களிலும் அடர்ந்த காடுகளின் மத்தியிலும் வயல் ஓரங்களிலும் காட்சி தருகின்றன.

பிற்காலச் சோழர் காலம் தமிழகத்தின் பொற்காலமாக விளங்கியது எனலாம். சோழ மன்னர்கள் தமக்கென்று அரண்மனையைக் கட்டிக் கொள்வதிலும் பார்க்க ஆண்டவனுக்கு பெருங் கோயில்களை கட்டி வழிபாட்டினால் மக்கள் வாழ்வு வளம் பெற வழிவகுத்தார்கள். அத்துடன் இசை நடனம் முதலிய கலைகள் ஆலயத்தை மையமாகக் கொண்டு வளர்ச்சி பெற ஆவன செய்தார்கள். கோயில்களே கலைக் கூடங்களாகவும் வைத்தியப் பராமரிப்பு நிலையங்களாகவும் அன்னமிடும் மடங்களாகவும் அகதிகளுக்குப் புகலிடங்களாகவும் விளங்கியதை இராஜ ராஜ சோழ மன்னனின் தஞ்சைப் பெருங் கோயில் வரலாறு எடுத்துக் காட்டுகிறது. வாரத்துக்கொருமுறை ஏழைக் குழந்தைகளுக்குத் தலைக்கு வைப்பதற்கு எண்ணெய் கொடுக்குந் தருமமும் இவ்வாலயத்தில் நடைபெற்றதாக வரலாற்றுச் செய்தி உண்டு.

எங்கும் கோயில், எல்லாம் கோயில், உலகமே கோயில், உள்ளமே கோயில் என்ற முறையில் இறை நம்பிக்கை மக்கள் வாழ்வில் ஊடுருவி நிற்பதைக் காண்கிறோம்.

கோயிற் பண்பாடே தமிழனின் பெருமைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது நாம் வணங்கும் அடியாரும் அந்தணர்களும் கோயில்களைச் சார்ந்தவர்களே. நாம் பாடும் பக்திப் பாடல்கள் எல்லாம் கோயில் இசைகளே. காலையும் மாலையும் நாம் கேட்பது கோயில் மணிகளே. கோயில் உணர்விலேயே நமது வாழ்க்கை பின்னிக் கிடக்கின்றது. கோயில் கோபுரத்தை கண்டவுடனேயே அமைதியும் இன்பமும் தாமாக ஏற்படுகின்றது. கோபுரமே ஜீவாத்மாக்களின் பரிணமா விளக்கத்தைக் காட்டி நிற்கின்றது. அவை வெற்றுச் சிலைகளாக இல்லாமல் உட்பொருள் கொண்ட தத்துவச் சிலைகளாகக் காட்சி தருகின்றன.

கற்சிலைகளும், கட்டடங்களும் மாத்திரம் கோயில் என்ற சொல்லின் பொருளை விளக்கி நிற்பவை அல்ல. மக்கள் வாழ்வில் இவை ஏற்படுத்துகின்ற திருப்தியிலே தான் கோயில் என்ற சொல்லின் பொருள் மகிமை அடைகின்றது. இதனாலேயே ஆலயங்கள் எல்லாம் அறநெறி பரப்பும் நிறுவனங்களாக அமைய வேண்டுமென்று பலரும் விரும்பினார்கள். சமயம் வேறு சமூகம் வேறு என்று பிரித்து நோக்காது சமய வாழ்வே சமூக வாழ்வுக்கு உதவுவதாக அமைய வேணடும் என்ற கொள்கை இன்று வலுப் பெற்று வருகின்றது. ஏனெனில் ஆலயங்கள் எல்லாம் மக்களின் சுபீட்சமான வாழ்வுக்காகவே ஏற்பட்டன. பண்டைக் காலத்து நாகரிகம் பெற்ற ஆற்றங்கரை நகரங்கள் இன்று மறைந்து விட்டன. ஆனால் தெய்வ நம்பிக்கையோடு கூடிய நாகரிக வாழ்வை வாழ்ந்த கங்கை நதிக்கரை நாகரிகம் இன்றும் புகழ் பெற்று ஓங்கி நிற்பதைக் காண்கின்றோம். காரணம் தெய்வ அம்சம் இவர்களின் நாகரிகத்தோடு இணைந்திருப்பது தான். வட நாட்டிலே இராமகிருஷ்ண ஆச்சிரமம் சிவானந்தன் ஆச்சிரமம் தென்னாட்டிலே ஞானானந்த தபோவனம் போன்றவை ஆலயப் பணிகளோடு அறப் பணிகளையும் சிறப்பாக நிறைவேற்றி வருகின்றன.

சமயம் என்பது தன்னையும் வாழ்வித்து மற்றவனையும் வாழ் வழிகாட்டும் அன்பு நெறி. மக்கள் ஒன்று கூடி வாழுகின்ற சமுதாயத்துக்கு உயிர்நாடிக இருப்பது சமயமே. அது வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தழுவிக் கலக்க வேண்டும். இக் கருத்தினைக் கோயில்களும் சமய நிறுவனங்களும் கடைப்பிடிக்க வேண்டியது தலையாய கடனாகும். வழிபாட்டு நிலையங்களை வாணிக நிலையங்களாக மாற்றித் தனிப்பட்ட சிலருக்கு மாத்திரம் கோயில் உரிமையும் உடைமையும் என்று எண்ணுகின்ற மனப் போக்கு மாற வேண்டும். கண்ணீரோடும் கம்பலையோடும் காலத்தை கழிக்கும் மக்களுக்குத் திருக்கோயில்களே ஆதரவளிக்கும் நிலையங்களாக மாற வேண்டும்.

"சிறியோரை மேம்படச் செய்தால் – பின்பு
தெய்வ மெல்லோரையும் வாழ்த்தும்"

என்று முரசு கொட்டினார் பாரதியார். பாட்டினால் சமுதாயம் எழுச்சி பெறுகிறதேயன்றி நடைமுறையில் பூரண வெற்றியை காண முடிகிறது என்று கூற முடியாமல் இருக்கிறது.

படிப்பறிவு குறைந்தவர்களுக்கும் பாடசாலை பிள்ளைகளுக்கும் பயன்படக்கூடிய சமய நூல்களை இலகு தமிழில் அச்சிட்டு வெளியிடுவதும் சமயப் பிரசாரகரை நியமித்து வீடுகள் தோறும் பிரசாரம் செய்வதும் திருக் கோயில்களின் முக்கிய கடனாக அமைய வேண்டும். அத்துடன் மருத்துவமனைகளும் நூல் நிலையங்களும் திருக்கோயிற் சார்பிலே அமைக்கப்பட்டு மக்களுக்கும் இறைவனுக்குமிடையே இணைப்பு ஏற்படுத்த வேண்டும். ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து இந்நாட்டிற்கு வந்த கிறிஸ்தவ பாதிரிமார் இவற்றைச் செய்தமையால் தான் தங்கள் சமயத்தை வளர்த்தனர். என்ற உண்மையை நாம் உணர்தல் வேண்டும் ஆடம்பரமான விழாக்களைச் செய்து பணத்தை செலவாக்குவதிலும் பார்க்க அப் பணத்தை ஏழை மக்களுக்கு உதவி செய்வது அவர்கள் சிவநெறியில் வாழ வழி காட்ட வேண்டும்.

ஆகவே திருக்கோயில் வரலாற்றை நோக்கினால் நாயன்மார் காலத்திலும் எழுச்சி பெற்ற சோழர் காலத்திலும் கோயில்களே கல்விக் கூடங்களாகவும், நாடக அரங்குகளாகவும், நாட்டிய மன்றங்களாகவும், ஊராட்சி நிறுவனங்களாகவும், மாணவர் விடுதிகளாகவும், ஆதுலர் சாலைகளாகவும், மருத்துவ மனைகளாகவும் விளங்கி வந்தன என்பது கல்வெட்டுகள், செப்பேடுகள், ஆகியவற்றிலிருந்து காணும் உண்மையாகும். அத்துடன் கோயிலை சுற்றியுள்ள மடங்களிலேயே அன்னதானப் பணிகள் நடைபெற்று வந்தமையும் சமீப காலம் வரை நாமறிகின்றோம். ஆகவே திருக் கோயில்கள் மூலம் மக்களை வாழவைக்கும் பணிகள் நடைபெறுவது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை உள்ளத்திருத்தி ஆவன செய்வோமாக.

"படமாடக் கோயில் பரமர்க் கொன்றீயில்
நடமாடும் கோயில் நம்பர்க்கங்காகா
நடமாடும் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடக் கோயில் பரமர்க் கங்காமே"

(நன்றி: அன்புநெறி மலர் 2 இதழ்1.2)

## மாமன்றச் செய்திகள்

# இந்து மக்களின் பிரச்சினைகளை ஆராயும் மாநாடு

கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் துர்முகி வருடம் தை மாதம் 30ம் திகதி (12-02-2017) ஞாயிற்றுக்கிழமை காலை, இந்து மக்களின் பிரச்சினைகளை ஆராய அகில இலங்கை இந்து மாமன்றம் ஒரு மாநாட்டை நடத்தத் தீர்மானித்திருக்கிறது.

பாதிக்கப்பட்ட ஆலயங்கள், இந்து மாணவர்களின் கல்விப் பிரச்சினைகள், வறுமையால் பாதிக்கப்பட்ட இந்து மக்கள் மற்றும் இம் மாநாட்டில் ஆராய வேண்டிய ஏனைய விடயங்கள் சம்பந்தமான விதந்துரைப்புக்களை (கூடியவரை போதுமான சான்றுகளின் பிரதிகளுடன்) எழுத்துமூலம் **03-02-2017க்கு** முன் எங்களுக்குக் அனுப்பிவைக்கும்படி இந்து ஆலயங்களையும், இந்து நிறுவனங்களையும், இந்து மக்களையும் கேட்டுப் பத்திரிகை வாயிலாக அறியத்தந்திருந்தோம்.

அதன் பிரகாரம் கிடைக்கப்பெற்ற விதந்துரைப்புக்களை மாமன்றத்தின் குழுக்கள் ஆராய்ந்து பொருத்தமானவை மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும். அத்துடன் அந்த விதந்துரைப்புக்களை அனுப்பியவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவும் சந்தரப்பம் வழங்கப்படும்.

# ஹட்டன் வலய ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையில் ஹட்டன் கல்விவலய கல்விப்பணிப்பாளர் திரு.ஸ்ரீதரன் அவர்களின் ஒழுங்கமைப்பில் கல்வி வளர்ச்சிப் பணி மன்றத்தினால் ஹட்டன் கல்வி வலயத்துக்குட்பட்ட இந்து சமய பாட ஆசிரியர்களின் வாண்மையை விருத்தி செய்யும் நோக்கில் கருத்தரங்கு ஒன்று கடந்த 28-01-2017 சனிக்கிழமை அன்று ஹட்டன் ஹைலாண்டஸ் கல்லூரி மண்டபத்தில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

இதில் ஹட்டன் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சாந்தகுமார் கல்வி வளர்ச்சிப் பணி மன்றத் தலைவர் திரு. கலைச்செல்வன், ஆசிரிய ஆலோசகர்களான செல்வி. தமயந்தி, திரு.ராஜேந்திரன் மற்றும் மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன், திரு.சின்னத்துரை தனபாலா, சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக்குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காலை அமர்வாக அமெரிக்க ஹவாய் சைவ ஆதீனத்தைச் சார்ந்த ஆன்மீகச்சுடர் ரிஷி தெண்டுநாதன் சுவாமிகளின் கருத்துரை நடைபெற்றது. இந்து சமய ஆசிரியர்களின் மதிப்பரிய நோக்கத்தையும் பொறுப்பினையும் மிகத்தெளிவாக எடுத்துரைத்து அதனை எவ்வாறு விருத்தி செய்ய வேண்டும், தற்போதையா காலகட்டத்தில் இந்து சமயம் எதிர்நோக்கும் சவால்கள் என்ன? அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது, மேல்நாட்டில் இந்து மதம் நிகழ்த்திவரும் உணர்வுபூர்வமான மாற்றங்கள் என்ன? இந்து மதம் பற்றி மேல் நாட்டவர் வியந்து பார்ப்பவை என்ன? என்ற பொருள்பட தனது உரையினை நிகழ்த்தினார், அதன்பின்பு ஆசிரியர்களின் ஐயங்கள் கலந்துரையாடப்பட்டு கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன. தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்குரிய இலவச அப்பியாசப் புத்தகங்கள் வழங்கப்பட்டதுடன் மாமன்றத்தின் இந்து ஒளி 20வது ஆண்டுப்பூர்த்தி சிறப்பிதழ் மற்றும் கையடக்கப்பஞ்சாங்கம் எனபனவும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது.

தொடர்ந்து இரண்டாவது அமர்வாக ஆசிரியர்களின் பண்ணிசைத் திறனை வளர்த்தெடுப்பது அத்தியாவசியம் என்பதைக் கருத்திற் கொண்டு இந்து மாமன்றம் அதற்குரிய ஒழுங்கினைச் செய்தது. ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரி இசைப்பிரிவு விரிவுரையாளர் திரு. உதயகுமார் அவர்களின் சிறப்புபண்ணிசைப் பயிற்சி நடைபெற்றது.




# சைவத்தமிழ் உலகில் சைவாதீனமாக விளங்கும் சிவத்தமிழ்ச் செல்வி முத்துவிழா காணும் பெருந்தகை

ஐ.தி. சம்பந்தன்
(ஆசிரியர் - சுடரொளி இதழ் - இலண்டன்)

**ஆலய நிர்வாகத்தைப் பொறுப்பேற்று நடாத்திய மங்கையர்த் திலகம் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவரின் முத்துவிழாவையொட்டி இலண்டனில் இருந்து மாமன்ற சிறப்பு உறுப்பினர் திரு சம்பந்தன் எழுதிய இக்கட்டுரையை இன்றைய மாதர்குலமும் வாசித்துப் பயன்பெற வேண்டும்.**



அந்நியர் ஆட்சியால் அழிவுற்ற நிலையிலிருந்த சைவத்தையும் தமிழையும் பாதுகாத்து வாழ வைத்த சைவச் சான்றோன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களே. பெரும் பணிகளாற்றிப் பாதுகாத்து வந்த சைவத்தையும் தமிழையும் பேணிப் பாதுகாத்து வருவதற்கு ஒரு நாவலர் பரம்பரையை உருவாக்கியவரும் அவரே.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை திரு. கையிலாசபிள்ளை, திரு.ந.க.சதாசிவம்பிள்ளை, திரு .அருணாசல வாத்தியார் சைவப்பெரியார் திரு. சிவபாதசுந்தரம் போன்ற பெரும் பரம்பரையின் வாரிசாக இன்று வாழ்ந்து கொண்டிருப்பவர்தான் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

நாவலர் பெருமான் போன்று பிரமச்சாரியத்தை மேற்கொண்டு சைவத்தையும் தமிழையும் காதலித்து அரும்பெரும் தொண்டாற்றி வருபவர். நாவலர் பரம்பரையின் ஒளிச் சுடராக விளங்குபவர்.

நாவலர் வழிநின்று சைவத்தையும் தமிழையும் வளர்த்துவரும் தமிழ் அன்னை.நாவலர் பெருமான் வகுத்த சைவாகம விதிப்படி தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தை நிருவகித்து அதனூடாக சமய சமூகப் பணியாற்றிவருபவர். நாவலர் பெருமான் போன்று சமயச் சொற்பொழிகள் மூலம் சமயத்தை வளர்த்து வந்தவர்.சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக சைவத் தமிழ் உலகில் பிரகாசித்துக் கொணடிருக்கும். சைவ ஒளிச்சுடர்.தமது சொற்பொழிவால், எழுத்தால், செய்கையால், அர்ப்பணிப்பால் சைவத்தின் பெருமையைத் துலங்க வைத்துக் கொண்டிருப்பவர்.

நாவலர் பெருமான் ஓர் ஆசிரியராகவிருந்து கற்றுக்கொண்ட வழிமுறைகள் மூலம் கல்விப் பணியாற்றி மக்களுக்கு சமய அறிவை ஊட்டியவர். அதேபோன்று அம்மையாரும் ஆசிரியராகவிருந்த காலத்தில் சைவசித்தாந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டு சமயப் பிரசங்கங்கள் மூலம் மக்களிடையே சமய அறிவை வளர்த்தவர்.நாடளாவிய -உலகளாவிய ரீதியில் ஆயிரத்திற்கு மேற்பட்ட சொற்பொழிவுகளை நிகழ்த்தியவர். அதனால் சைவசமய எழுச்சியை ஏற்படுத்தியவர்.

தமிழ் நாட்டில் நடைபெற்ற சைவ மகாநாடுகள், சைவசித்தாந்த மகா நாடுகளில் பங்கு கொண்டு சமய ஆராய்ச்சிக்கட்டுரைகள் வாசித்தும் சொற்பொழிவு நிகழ்த்தியும் தொண்டாற்றியவர். ஆரம்பித்த அச்சுக்கூடத்தாலும் சமயப் பணிகளினாலும் ஈழத்தமிழர்களுக்கு மதிப்பும் பெருமையையும் ஏற்பட்டதுபோல் அம்மையாரும் அந்தப் பெருமையை எமக்கு ஈட்டித்தந்தவர்.

சமய நூல்கள் பலவற்றை வெளியிட்டு சமயத் தத்துவங்களை மக்கள் கற்றுக்கொள்ள வழிசெய்தவர். சைவசித்தாந்தங்களை இலகு தமிழில் அறிய வாய்பளித்தவர். தமிழ் பெண்களின் பெருமையை உலகிற்கு எடுத்துக்காட்ட அம்மையாரின் 77வது பிறந்தநாள் பரிசாக வெளியிட்ட பெண்மைக்கு இணையுண்டோ?' என்னும் நூல் தமிழ்ப் பெண்களின் நல்வாழ்வுக்காக கருவூலமாகும். சுமார் 50 நூல்களை ஆராய்ந்து எழுதிய அருமையான நூல் சங்ககால பெண்மை.வள்ளுவர் காட்டிய பெண்மை, சேக்கிழார் காட்டிய பெண்மை பரம் சோதி முனிவர் காட்டிய பெண்மை பாரதியார் காட்டிய பெண்மை பிற்காலப் பெண்மை ஆகியன இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அக்காலத்து சைவத் தமிழ்ப் பெண்கள் சமய வளர்ச்சியிலும் குடும்ப நலன் பேணுவதிலும் கணவனைத் தெய்வமாக மதிப்பதிலும் எந்த அளவிற்கு முன்னின்றார்கள் என்பதை இந்நூல் எடுத்துக் கூறுகிறது. புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ்ப் பெண்கள் படிக்கவும் வேண்டிய நூல். காலத்தின் தேவையையொட்டி வெளியான நூலாகும். இவ்வாறு பல்வேறு பணிகளினாலும் சைவத் தமிழ் உலகின் உலகில் ஒரு சைவதீனமாக விளங்குகின்றார் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அவர்கள்.

அந்நியர் ஆட்சியின் அடக்கு முறையின்போது தனிமனிதனாக நின்று சைவத்தையும் தமிழையும் நாவலர் பெருமான் எவ்வாறு பாதுகாத்தாரோ அதேபோன்று சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் கடந்த 20 வருட போர்ச்சூழலும் இலங்கை அரசப்படைகளின் அட்டகாசத்தின் மத்தியிலும் சைவத்தையும் தமிழையும் இரு கண்கள் போல் பேணிப் பாதுகாத்து வந்தவர். எந்த நெருக்கடியிலும் வயது



திரு. ஐ.தி. சம்பந்தன் முதிர்ந்த நிலையிலும் துர்க்கை அம்மன் ஆலயத்திலிருந்து சமயத்தை வளர்த்து வருபவர். சமூகப் பணியாற்றி வருவர். அனாதைப் பிள்ளைகளுக்கு அனாதை இல்லம் அமைத்து ஆதரவளித்து வருபவர்.

நாவலர் பெருமான் வாழ்ந்த மண்ணில்லிருந்து சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக சைவத்தமிழ் பணியாற்றி வரும் அம்மையார் அகவை எண்பதிலும் தளர்வின்றிப் பணியாற்றத் துணை நிற்பது துர்கை அம்பாளின் திருவருளே.

அம்மையாரின் 80வது பிறந்தநாள் (07-01-2005) சைவ உலகின் முக்கிய நாளாகக் கருதப்படுகிறது. எமக்கென்று ஒரு அரசு இன்று இருந்தால் அம்மையாருக்கு முத்திரை வெளியிட்டு அவரது முத்துவிழாவை தேசிய விழாவாகக் கொண்டாட வழி செய்திருப்பர். அப்படியொரு நிலை ஏற்பட இந்நாளில் சைவாலயங்களில் நடைபெறவுள்ள பிரார்த்தனைகளில் தமிழர்களுக்கு ஒரு தாயகம் உருவாக வேண்டிப் பிரார்த்திப்போமாக.

எமக்கு ஒரு சுதந்திர நாடு இல்லையென்றாலும் சைவத்தமிழ் உலகெங்கும் முத்துவிழா கொண்டாடப்படவிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். ஐரோப்பிய நாடுகளில் அம்மையாரின் முத்துவிழாவைச் சிறப்புடன் கொண்டாடப் பிரித்தானிய சைவமுன்னேற்றச் சங்கம் உந்து சக்தியாக இருந்துவருவது மகிழ்ச்சியான செய்தியாகும். அதேபோன்று கனடாவில் சைவ அமைப்புகளும் குறிப்பாக கனடா சைவசித்தாந்த மன்ற அம்மையாருக்கு சிறப்பு மலர் வெளியிட்டு முத்துவிழாவைச் சிறப்புடன் கொண்டாட விரிவான ஏற்பாடு செய்துள்ளனர். இதே போன்றே ஏனைய நாடுகளிலும் முத்துவிழா சிறப்புடன் நடைபெற்றுள்ளன.

நாவலர் பெருமான் தான் வாழும் போது தமது பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஓர் பரம்பரையை உருவாக்கியிருந்தார். அம்மையாரும் தமது பணிகளைத் தொடர்வதற்கு சிலரை உருவாக்கிவருகின்றார். அவர்களில் முதன்மையானவராக விளங்குபவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள்.அவரும் ஒரு பிரமச்சாரியாக இருந்து அம்மையாரின் வழி நின்று சைவத்தமிழ்ப்பணி யாற்றி வருகின்றார். அன்று அம்மையார் உலகநாடுகள் பலவற்றிக்குச் சென்று ஆற்றியது போல் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களும் சிறப்புடன் அப்பணியைச் செய்து வருகின்றார்.

இவ்வாறு ஈழத்தில் மட்டுமன்றி சைவத்தமிழ் உலகெங்கும் சைவமும் தமிழும் தழைத்தோங்க மூலவேராக செயல்பட்டு வரும் அம்மையார் அகவை எண்பதிலும் தளர்வின்றி உற்சாகத்துடன்பணியாற்றத்தோன்றாத்துணையாகதிருவருள் பாலித்துக் கொண்டிருப்பவள் அவரது குலத்தெய்வமாகிய துர்க்கை அம்பாளே.

முத்துவிழா காணும் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து சைவத் தமிழ்ப் பணியாற்ற துர்க்காதேவியின் திருவருள் கிடைக்க வேண்டிப் பிரார்த்திப்போம் .

## மாமன்றச் செய்திகள்

### தெய்வத்திருமகள், சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவு நிகழ்வு – 2017

இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் அகில இலங்கை இந்து மாமன்றமும், கொழும்பு மகளிர் இந்து மன்றமும் இணைந்து நடாத்திய தெய்வத்திருமகள், சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நினைவு நிகழ்வு, துர்முகிவருடம் மார்கழி மாதம் 23ம் நாள் (07-01-2017) சனிக்கிழமை மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது.

மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு பாராளுமன்ற உறுப்பினரும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சருமாகிய மாண்புமிகு, திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். கொழும்பு மகளிர் இந்து மன்றத் தலைவி ஸ்ரீரஞ்சனி விஷ்ணுகாந்தன் அவர்கள் ஆரம்ப உரையுடன் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகிய மாண்புமிகு திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் "தமிழ்த்தாய்க்குலம் : அன்று, இன்று, நாளை" எனும் தொனிப்பொருளில் நினைவுப் பேருரையை நிகழ்த்தினார்.

மேலும் அன்றைய தினம் கொழும்பு இந்து மகளிர் மன்ற அனுசரணையில் "இந்து மங்கையர் அணி" அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

கொழும்பு மகளிர் இந்து மன்றப் போஷகர், திருமதி யமுனா கணேசலிங்கம் அவர்களின் நிறைவுரையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.



# “இந்து மதத்தின் சிறப்புக்களை மாணவர்களுக்கு அறியத்தரும் பணி போற்றுதற்குறியது”




**தைப்பொங்கல் தினத்தில் நடைபெற்ற இந்து ஒளி 20வது ஆண்டு பூர்த்தி சிறப்பு மலர் வெளியீட்டில் மாண்புமிகு பிரதம நீதியரசர் க.ஸ்ரீபவன்**

பெருமதிப்பிற்குரிய சிவாச்சாரியார் வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களே! வணக்கத்திற்குரிய ரிஷி தொண்டு நாதர் சுவாமி அவர்களே! திரு.சுப்பிரமணியம் செட்டியார் அவர்களே! இவ்வைபவத்திற்கு தலைமைதாங்கும் திரு.நீலகண்டன் அவர்களே! திருமதி.சாந்தி நாவுக்கரசு அவர்களே! மற்றும் இங்கு வருகை தந்துள்ள சபையோரே அனைவருக்கும் என் அன்பான வணக்கங்கள். உங்கள் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இந்து ஒளி இதழின் இருபதாவது ஆண்டு வெளியீட்டு விழாவிற்கு எனக்களிக்கப்பட்ட அழைப்பிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். “என் கடன் பணி செய்து கிடப்பதே” என்பதற்கேற்ப அறுபத்தி இரண்டு வருடங்களாக அகில இலங்கை இந்து மாமன்றம் அரிய தொண்டாற்றி வருகின்றது. இந்து ஒளி வெளியீட்டின் மூலம் இந்து மதத்தின் சிறப்பினையும், இந்து மதம் பற்றிய அறிவினையும் பரப்பி வருகின்றது; இந்து மதப் பெரியார்களின் கட்டுரைகளை வெளியிட்டு இந்து மத அறிவை வளர்த்து வருகிறது; இந்து ஒளியில் பிரசுரமாகும் ஸ்தலவரலாறுகள், மத அனுஷ்டானங்கள் பற்றிய விளக்கங்கள், யோகிகள், சித்தர்கள் பற்றிய கட்டுரைகள் மிகவும் அழமாக ஆராய்ந்து எழுதப்பட்டவை; படிப்பவர் கருத்தை கவரும் பாங்குடன் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்து மாமன்றம் ஆற்றி வரும் சமயப்பணியும், சமூகப்பணியும் பாராட்டிற்குரியது. இந்து மாமன்றத்தின் பிரதான குறிக்கோள்கள் இந்து சமயத்தையும், இந்து சமூகத்தையும் இந்து சமயத்தை காக்கும் அரண்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஒருவருக்கு கஷ்டம் வரும் போது உற்றமும் சுற்றமும் கைகொடுக்க முடியாத நிலை ஏற்படும் போதும் அவர் தன் மதச்சார்புடைய ஸ்தாபனங்களின் உதவியை நாடவேண்டிய நிலை உருவாகும். அந்நிலையில் திக்கற்றவர்கள் திசைமாறிப் போகாமல் இருக்க இது போன்ற மன்றங்கள் அவசியம் தேவை.

நமது மதமும் தாய்மொழியும் நமது இரு கண்களுக்கு ஒப்பானவை. தான் பிறந்த மதத்தை ஒருவன் துறப்பானாகில் அவன் தன்னை பெற்ற தாயை துறந்ததற்குச் சமமாகும். உலகில் மிக பழைமை வாய்ந்த மதமான சனாதன தர்மம் என்ற பெருமைக்குரிய நமது இந்து மதத்தின் சிறப்புக்களை மாணவ சமுதாயத்திற்கு அறியத்தருவதில் இந்து மாமன்றம் ஆற்றி வரும் சிறப்புப்பணி போற்றுதற்குரியது. பொருளாதார நெருக்கடி, வேலையில்லாத் திண்டாட்டம், புலம் பெயர்தல், இடப்பெயர்வு, போர் போன்ற இன்னோரன்ன காரணங்களால் கலாச்சார பாதிப்பு ஏற்பட்டுள்ள இன்றைய காலகட்டத்தில் எல்லா இந்துக்களுக்கும் தம் மதத்தைப் பற்றிய அறிவு, தெளிவு அதனுடன் கூடவே ஒரு பெருமித உணர்வும் இருக்க வேண்டும். இந்து மதத்தின் சிறப்பு, அதன் பழைமை, அதன் ஆழம் பற்றிய அறிவு இன்றைய இளம் சந்ததியினருக்கு இக்கால கட்டத்தில் அவசியம் தேவை.

பல கடவுள் உருவங்களையும், பல பிரிவுகளையும், பல அனுஷ்டானங்களையும் தன்னகத்தே உள்ளடக்கிய போதிலும் இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவம் பரமாத்மா-ஜீவாத்மா என்ற கோட்பாடேயாகும். ஜீவாத்மா பரமாத்மாவோடு இணைவதற்கு பலவழிகளைக் காட்டி நிற்கிறது. இந்து மதம், மனித மனம் ஒரு குழம்பிய குட்டை. ஆசாபாசங்கள் காரணமாக தத்தளிக்கும் மனிதர்களை அவரவர் குணத்திற்கேற்ப வழிநடத்தி மெய்பொருளை உணர வைப்பதற்காக நமது ரிஷிகள் இவ்வழிமுறைகளைக் கையாண்டார்கள். எல்லா நோய்களுக்கும் ஒரே மருந்து பயனளிக்காது. அது போல் அவரவர் வாசனைக்கேற்ப மனமும் குணமும் வித்தியாசப்பட்டு நிற்கும் மனிதர்களை அவரவர்க்கு விரும்பியவாறு மெய்பொருளை உணர்த்த நமது ரிஷிகள் இவ்வழிகளைக் கண்டுபிடித்தார்கள்.

உலகாய விடயங்களில் ஈடுபடும் போது கூட இறைவனின் நினைவு நம்மை விட்டு அகலாமலிருக்க கல்விக்கு சரஸ்வதி, செல்வத்திற்கு லஷ்மி, வீரத்திற்கு துர்க்கை என்று வரிசைப்படுத்தினார்கள். மயிலைப்பார்த்தால் முருகனையும், யானையைப் பார்த்தால் கணபதியையும், கருடன் என்றால் மகாவிஷ்ணுவையும் நினைத்துக் கொள்கின்றோம். இசைக் கருவிகளில் கூட வீணை சரஸ்வதியையும், புல்லாங்குழல் கண்ணனையும் நினைவுபடுத்துகின்றன. நடனக்கலை என்றவுடன் சிதம்பரத்து நடராஜன் அல்லவா நம் நினைவிற்கு வருகிறார். கடைசியாக நாம் அனைவரும் போய்ச் சேருமிடமான மயானத்தில் கூட அந்த பித்தன் “காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளங்கவர் கள்வனாக” நிற்கிறார். தொட்டில் முதல் சுடுகாடுவரை இறைவனை மையப்படுத்தும் பெருமை நமது இந்து மதத்திற்கே உரியது.

ஸ்ரீராமகிருஷ்ணர் தோணியில் கங்கை நதியில் சென்று கொண்டிருந்த போது மணிகர்ணிகா என்ற கட்டடத்தை தோணி தாண்டிய போது தான் கண்ட காட்சியைப் பற்றி பின்வருமாறு சொல்கிறார் – "வெண்ணிற உடலும், செஞ்சடை முடியும் கொண்ட நெட்டை உருவினர் ஒருவர் ஒவ்வொரு சிதையினையும் அணுகி அன்போடு அதிலுள்ள ஜீவனை உயர்த்தி அதன் செவிகளில் தாரக மந்திரத்தை ஓதியருளக் கண்டேன். சிதையின் மறுபக்கத்திலிருந்த அருளார்ந்த ஜெகதாம்பிகையார் ஒவ்வொரு ஜீவனின் கட்டுகளாகிய மறைப்புக்களையெல்லாம் ஒவ்வொன்றாகக் கலைந்தெறிந்து நிலையத்தின் மணிக்கதவைத் திறந்து அந்நல்லுயிரை பிரம்மத்தை நோக்கி விரைந்து செலுத்தி வந்தார். ஆகப் பல்லாயிரம் ஆண்டுகள் தவமும் யோகமும் பயின்ற பின் அடைவதற்குரிய அத்வைத மெய்ஞானம் சிவபெருமானது கரையற்ற கருணையால் காசியில் இறப்பார்க்கு எளிதே கிட்டுவதாகிறது" என்றார். இந்துக்களின் நான்கு வர்ணாசிரம தர்மத்தில் நான்காவதான சந்நியாச தர்மத்தின் போது காசிக்கு போகிறேன் என்று விடைபெற்றுச் செல்வதன் தாத்பரியம் இது தான்.

தாஜ்மகால் கட்டிய ஷாஜகான் தன் (மகனுக்கு) எழுதிய கடிதத்தில் "இந்துக்கள் எவ்வகையிலும் போற்றக்கூடியவர்களே. அவர்கள் இறந்தவர்களுக்குக் கூட தண்ணீர் கொடுக்கிறார்கள்" என்று எழுதியிருந்தான்.

இந்து மதம் எனும் போது நமக்கு முதலில் நினைவிற்கு வருவது "ஓம்" என்னும் நாமமே ஓம் என்றால் பிரணவம், பிரணவம் தான் பிரம்மம். இது இயற்கையால் இறைவனுக்கு அளிக்கப்பட்ட சொல். இது எந்தவொரு மொழிக்கும் சொந்தமானதல்ல. இச் சொல்லை சமஸ்கிருதச் சொல் என்று கருதியதால் ஏனைய மதத்தவர் இச் சொல்லை ஏற்க மறுத்து விட்டனர். ஆனால் இந்துக்கள் இச்சொல்லை ஏற்றுக்கொண்டனர். Omniscient, Omnipotent, Omnipresent என்ற பதங்கள் இறைவனுக்குக் கொடுக்கப்பட்ட அதி உயர்ந்த பெயர்கள். இவை அனைத்தும் "OM" என்றே ஆரம்பிக்கின்றன.

இந்து மதத்தின் மற்றுமொரு சிறப்பம்சம் "யோக" என்பது. யோகா என்ற சொல்லுக்கு ஐம்பது வேறுபட்ட பொருள்கள் உண்டு. பதஞ்சலியின் யோக சாஸ்திரம் பற்றி நாம் கேள்விப்படிருக்கிறோம். யாக்ஞவல்லியின் யோக சாஸ்திரமும் உண்டு. அவர் சூரியனிடமிருந்து பெற்ற ஞானத்தை ஆதாரமாகக் கொண்டு யோக சாஸ்திரத்தைக் கண்டறிந்தார்.

"இந்து மாமன்றம்" எனும் போது நம் நினைவிற்கு வருவது நந்திக் கொடியும் அதற்கான பிரயத்தனங்களுமாகும். அதிக உழைப்பு, குறைவான வேதனம், காளை மாட்டின் பண்பு. ஆணவமோ ஆணவத்திற்குட்பட்ட ஆசைகளோ இல்லாமல் உழைப்பது காளை மாட்டின் குணம். நந்தியின் தலை சிவன் நோக்கி இருப்பது தன் செயல்கள் அனைத்தும் இறைவனுக்கு அர்ப்பணம் என்பதைக் காட்டுவதற்காக. கர்ம யோகத்தின் தாத்பரியமும் இது தான். கீதையில் ஓரிடத்தில் கிருஷ்ணபரமாத்மா, அருச்சுனனை "பாரதரிஷபா" என்றழைத்துப் பெருமைபடுத்துகிறார். வாழ்க்கை கொடுப்பதற்கே ஒழிய எடுப்பதற்கு அல்ல. அதனால் தான் நம் முன்னோர்கள் காளையையும் பசுவையும் போற்றி வாழ்ந்தார்கள்.

குருஷேத்திர போர் முடிவுற்று பின் பாண்டவர்கள் அரசுரிமையைப் பெற்றர்கள். ராஜமாதாவான குந்தி தேவி அரண்மனை வாழ்வைத் துறந்து திருதராஷ்டிரனுக்கும் காந்தாரிக்கும் பணிவிடை செய்வதற்காக அவர்களோடு காட்டிற்குப் போகிறாள். இந்து மதத்தின் கோட்பாடு இது தான். நமது சிந்தனையிலும் சொல்லிலும் நேர்மை இருப்பதே நாம் செய்யும் மிகப் பெரிய தவமாகும். இதுவே நம் தேவைகளைப் பூர்த்தி செய்யும், இறைவனின் கருணைக்கும் உரியதாக்கும். பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மத்தில் உறுதியான அறிவுடையவன், மனக் குழப்பமடையாதவன், பிரியமானதைப் பெற்று இன்பமடைவதுமில்லை பிரியமில்லாததைப் பெற்று துன்பமடைவதுமில்லை என்கிறது கீதை.

இந்து மதம் மட்டுமே ஒரு தனிநபரை மையமாகக் கொண்டு எழுதப்படாதது. ஸ்ருதிகள், உபநிடதங்களை மையமாகக் கொண்டது இந்து மதம். வேதங்கள் கிருஷ்ணருக்குள் இல்லை, கிருஷ்ணர் வேதங்களுக்குள் இருக்கிறார் என்றார் சுவாமி விவேகானந்தர். "தத்வமஸி" நீயே அது அனைத்திற்கும் ஆதாரமாக இருக்கும் அந்தப் பொருளே மனித ஆன்மாவினுள்ளும் இருக்கிறது. என்றத் தெளிவுடன் வேதம் முற்றுப் பெறுகிறது.

அகத்தில் சாந்தமும், புறத்தில் சமாதானமும், போதுமென்ற மனமும் கொண்டு இப்புத்தாண்டில் அனைவரும் வாழ வேண்டும் என்று இந்த நேரத்திலே இறைவனை வேண்டுவதுடன் இந்து ஒளி மேன்மேலும் ஞான ஒளி பரப்பி பிரகாசிக்க வேண்டும் என வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி!

## தெய்வத்திரு திருமுருக கிருபானந்த வாரியாரின் அருள்மொழிகள்

- ஒருவீட்டிலுள்ள பெரியவரை, தாத்தா என்றும், மாமா என்றும், பெரியப்பா என்றும், அண்ணா என்றும் அவரவர்களுக்கு ஏற்ற முறையில் அழைப்பது போன்று ஒரே கடவுளைப் பல பெயர்களால் அழைக்கலாம்.
- நிலத்தின் சொந்தக்காரருக்கும் உழைப்பவர்க்கும் நிலத்தை விளைபொருளை பங்கு போடுகின்றனர். ஆனால் ஒன்றை நூறாக விளைவிக்கும் ஆற்றலைக் கொடுத்த ஆண்டவனை மறந்துவிடுகின்றனர். மனிதன் நிலத்தின் எல்லைக்கு வேண்டுமானால் வேலி போடமுடியுமே தவிர, விளையும் ஆற்றலுக்கு எல்லை போடமுடியாது.




# யார் மன்னன்?

**(வாழ்க்கையில் ஏற்றத் தாழ்வு வந்தாலும் அதனை சீர்தூக்கிப் பார்த்து தளம்பாது தன் கடமையைச் செய்ய வேண்டும்)**

முன்னொரு காலத்தில் நீதி தவறாத மன்னன் ஒருவன் ஆண்டு வந்தான். மக்கள் அவனை மிகவும் மதித்துப் போற்றினர். தங்கள் உயிரும், கண்ணும்போல் பேணி வாழ்ந்தனர். அம்மன்னனது வெண்கொற்றக் குடையின் கீழ் மக்கள் எவ்விதக் குறையும் இல்லாமல் இன்புற்று வாழ்ந்தனர். அம்மன்னன் உடலில் நரையும், திரையும் தோன்றிக் கிழவனாகிவிட்டான்.

ஒருநாள் தன் புதல்வர்கள் மூவரையும் அழைத்தான். புதல்வர்களைத் தன் அருகில் அமரச் சொன்னான். அவர்களைப் பார்த்து கூறினான்.

"என் அருமை மைந்தர்களே! நான் தொண்டுக் கிழவனாகி விட்டேன். இனி என்னால் நல்ல முறையில் அரசாள முடியாது. பொறுப்புகளையும், கடமைகளையும் இனி நல்ல முறையில் செய்வதற்கு எனக்குச் சக்தி இல்லை. ஆகையால், நான் கால் நடையாகவே காசிக்குச் சென்று வருகிறேன். அரசாளும் பொறுப்பை நீங்கள் மூவரும் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று கூறினான்.



மன்னன் அதன் பின்னர் எந்த விதக் கவலையுமின்றிக் காசிக்குப் புறப்பட்டு சென்றான். அவனது புதல்வர்கள் மூவரும் அரசியல் அலுவல்களைத் தம்முள் பகிர்ந்து கொண்டு, நாட்டை ஆண்டு வந்தனர். காசிக்குச் சென்ற மன்னனைப் பற்றி ஓர் ஆண்டு வரையில், எந்த விதமான தகவலும் வரவில்லை. அதன் பிறகு எல்லாரும் வருந்தத்தக்க செய்தி வந்து சேர்ந்தது.

"கால் நடையாகச் சென்ற மன்னன் காசிக்குச் சென்றடையுமுன் வழியிலேயே இறந்து விட்டான்' என்னும் துயரச் செய்தி வந்து சேர்ந்தது. மன்னனுடன் சென்றவர்கள் திரும்பி வந்து துயரச் செய்தியைத் தெரிவித்தனர்.

அம்மன்னனுடைய அருமை பெருமைகளை எண்ணி நாடு முழுவதும் துயரத்தில் மூழ்கியது. துயரமோ, மகிழ்ச்சியோ என்றும் நிலை பெறுவதன்றோ? சில நாட்களில் எல்லாரும் ஒருவாறு துயரம் நீங்கி, தத்தம் செயல்களில் கவனம் செலுத்தினர்.

ஒருநாள் ஏழைக் கிழவன் ஒருவன், கிழிந்த உடைகளை அணிந்து கொண்டு அரண்மனை பக்கம் வந்தான்.

""பழைய மன்னவன் இல்லையே!" என்று சொல்லி வாய்விட்டு அழுதான். பலரும் அவனை தேற்ற, அவன் ஒருவாறு மனம் தேறினான். அதன் பின்னர் கிழவன், அம்மன்னவனின் பிள்ளைகளின் நிலைமைகள் பற்றிச் சிலரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

தந்தை இறந்த செய்தியைக் கேட்ட நாள் முதலாக முதல் மகன் துயரில் மூழ்கி, வருந்தி வருந்தி இளைத்துத் துரும்பாகிவிட்டான். அவனது முகத்தில் பொலிவில்லை. அவன் பேசிய சொற்களில் தெளிவில்லை. அவனது செயல்களில் அவனுக்குக் கவனம் இல்லை. தந்தையிடம் அவன் வைத்திருந்த அன்பு, அவனை அந்த நிலைக்கு ஆளாக்கிவிட்டது.

இரண்டாம் மகன், தனக்கு அரசியலில் பங்கு கிடைத்த நாள் முதலாக ஆடம்பர வாழ்க்கையை மேற்கொண்டொழுகி வந்தான். நன்றாக உடை உடுத்துவது, சுவை மிக்கவற்றையே உண்பது, இன்பமாகப் பொழுது போக்குவது ஆகியவற்றில் தன் கவனத்தை முழுமையாகச் செலுத்திக் கொண்டிருந்தான்.

மூன்றாம் மகனுக்குத் தந்தையின் மறைவு அதிர்ச்சியைக் கொடுத்தது. ஆனாலும், "தந்தைக்குப் பின் அவரது பெயர் கெடாத வகையில் நாட்டைப் பொறுப்புடன் ஆள வேண்டுமே. மூத்த அண்ணன் இதனை அறியாமல் துயரத்தில் மூழ்கியிருக்கிறான் இரண்டாம் அண்ணன் கடமைகளை மறந்து, உலக இன்பங்களில் மூழ்கிக் காலங்கழிக்கிறான். எல்லாப் பொறுப்புக்களும் என்னைச் சார்ந்துவிட்டன. மக்களின் நலம் கருதி செங்கோல் செலுத்தும் திறனை இறைவன் எனக்கு அளித்தருள்வானாக.

"இவன் தந்தை இவனைப் பெறுவதற்கு என்ன தவம் செய்தானோ" என்று உலகம் சொல்லுமாறு நடந்து கொள்வதுதான் மகன் தந்தைக்குச் செய்யத்தக்க கடமையாகும். அந்தக் கடமையைச் செய்ய நல்ல மன வலிமையையும், ஆற்றலையும் நான் பெறுவது எவ்வாறு?' என்று எண்ணி எண்ணி அமைச்சர்களுடன்

கலந்து ஆலோசித்துத் திட்டமிட்டு அரசியல் அலுவல்களை ஒழுங்காகக் கவனித்து வந்தான்.

அவ்வாறு இருந்து வந்த மூன்று பிள்ளைகளின் நிலைமைகளையும், அக்கிழவனிடம் விளக்கமாக எடுத்துக் கூறினர். அவற்றைக் கேட்டறிந்த அக்கிழவன் வேறு எவனும் அல்லன், பழைய மன்னவனாகிய தந்தைதான். அம்மன்னவன் திட்டமிட்டு அவ்வாறு செயல் புரிந்தான். தான் இறந்தபிறகு என்ன நடக்கும் என்பதை அறியவேண்டி, தான் இறந்துவிட்டதாகக் கூறுமாறு தன்னுடன் வந்தவர்களிடம் கூறி, அவர்களை முன்னதாக அனுப்பி வைத்தான். அவர்களும் திரும்பி வந்து அவ்வாறே செய்தனர். பின்னர் மன்னவனே கிழக்கோலத்தில் வந்து, தன் புதல்வர்களின் நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

அப்போது மன்னவனுக்குத் தன்மீது உண்மையான அன்புள்ள மகன் எவன் என்பது நன்கு விளங்கிவிட்டது. மன்னன் உடனே அரண்மனைக்குச் சென்றான். தான் பழைய மன்னன் என்பதை வெளிப்படுத்தினான். எல்லாரும் அவனை பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அவன் அரண்மனையில் சில நாட்கள் தங்கியிருந்து, தன் மூன்றாம் புதல்வனாகிய இளையமகனே ஆளுதல் வேண்டும் என்று முடிவு செய்து, அவனுக்கு முடி சூட்டினான்.

இளைய மகனுக்கு முடி சூட்டிய பின்னர், மன்னன் மன அமைதியோடு காசிக்குச் சென்றான். அங்கே தங்கித் தன் இறுதி நாட்களைக் கழித்தான்.

எனவே என்னருமைச் செல்வங்களே! நமது கடமை என்ன என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். பெற்றோரும் பிள்ளைகளுக்கு அவர்களின் கடமைகளை சிறுவயது முதலே கூறி அவர்களை நன்னெறிப்படுத்தி இறைபக்தியுடைய நல்ல குழந்தைகளாக வளர்க்க வேண்டும். எத்துணைத் துன்பம் வரினும் இன்பம் வரினும் அவற்றிற்கு ஆட்படாது இறைசிந்தனையுடன் நல்லபடி வாழ்ந்து இறைவனின் குழந்தைகளாக என்றென்றும் இருக்கவேண்டும்.

(நன்றி: வாரியார் கதைகள்)

## மாமன்றச் செய்திகள்

### "எமது மண்ணில் மேலும் வளரட்டும் எமது சமயம்"

### அகில இலங்கை இந்து மாமன்றம் நிகழ்த்திய சிறப்புச் சொற்பொழிவுத் தொடர்




அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் "எமது மண்ணில் மேலும் வளரட்டும் எமது சமயம்" எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சிறப்புச் சொற்பொழிவுகள் ஜனவரி மாதம் 20ம்திகதி முதல் 24ம் திகதி வரை வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெற்றது. இதில் தமிழ்நாட்டு அறிஞரும் தமிழ் இலக்கியத்தில் முதுகலைமானிப் பட்டம் பெற்ற, "ஞானபாரதி", திருக்கயிலைமணி", "கொங்குநாவுக்கரசன்", "சைவநெறிக்காவலன்" திரு. வெ. அனந்தகிருஷ்ணன் அவர்கள் "எமது மண்ணில் மேலும் வளரட்டும் எமது சமயம்" எனும் தொனிப்பொருளிலான சிறப்புச் சொற்பொழிவினை வழங்கினார்.

20-01-2017 வெள்ளிக்கிழமை காலை 09.00 மணிக்கு ஹட்டன் மாணிக்கப்பிள்ளையார் மண்டபத்தில் ஹட்டன்வலய கல்வி வளர்ச்சிப்பணி மன்றத்தின அனுசரணையிலும், 21-01-2017 சனிக்கிழமை காலை 10.30 மணிமுதல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அமரர், கலாநிதி முத்தையா கதிர்காமநாதன் நினைவுப் பேருரையினையும், 22-01-2017 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிமுதல் பொலன்னறுவை சமன்பிட்டி இந்து இளம்பிறை இறைபணி மன்றத்திலும், 22-01-2017 ஞாயிற்றுக்கிழமை மாலை 03.00 மணிமுதல் மட்/ களுதாவளை மகா வித்தியாலயத்தில் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் அனுசரணையிலும், 23-01-2017 திங்கட்கிழமை காலை 09.00 மணிமுதல் கல்முனை ஸ்ரீ இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் அம்பாறை சிவநெறி அறப்பணி மன்றத்தின் அனுசரணையிலும், 23-01-2017 திங்கட்கிழமை நண்பகல் 02.30 மணிமுதல் மட்/தாழங்குடா விநாயகர் வித்தியாலயத்தில் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் அனுசரணையிலும், 24-01-2017 செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணிமுதல் கிளிநொச்சி இந்துக் கல்லூரியிலும் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெற்றன.

இன்றைய காலத்தின் தேவை கருதியும், மாணவர்களிடையே ஆன்மீக எழுச்சியை ஏற்படுத்தும் பொருட்டும் மாமன்றம் சிவதொண்டர் அணி, இந்து ஒளி ஆன்மீக சஞ்சிகை, நூல் வெளியீடுகள், கல்விப் புலமைப்பரிசில் திட்டம், மருத்துவ உதவிகள், வாழ்வாதார உதவிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது. அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஓரங்கமாக இச் சிறப்புச் சொற்பொழிவுகள் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆறுமுகநாவலர் சிந்தனைத் திறன்



(தெய்வத்திருமகள் கலாநிதி சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் நாவலரின் சிந்தனைத் திறன் பற்றி எழுதிய கட்டுரை இது.)

"நல்லைநக ராறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே - எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை."

அறிஞர்களாற்றான் ஒரு நாடு பெருமையடைகிறது. சோக்கிறற்றீஸ் தோன்றியதால் கிரேக்க நாடு நினைவில் வருகிறது. ஆபிரகாம் லிங்கனால் அமெரிக்கா பெருமையடைகிறது. சுவாமி விவேகாநந்தரால் பாரத நாடு போற்றப்படுகிறது. அதேபோல் நாவலர் பெருமானால் யாழ்ப்பாணம் பெருமையடைகிறது.

நாவலர் பெருமான் அவதரித்த காலம் யாழ்ப்பாண மக்கள் உண்மை அறிவிழந்து போலியில் மயங்கி அந்நியராட்சிக்கு அடிமைப்பட்டிருந்த காலமாகும். இந்தச் சூழ்நிலையிலே சிந்தித்துச் செயலாற்றினார் நாவலர் பெருமான். அவர் எண்ணம் விரிந்து தாய்நாட்டிற்கும் சேய் நாட்டிற்குமிடையில் பேரிணைப்பை ஏற்படுத்தியது.

சைவத்தையோ, தமிழையோ தனித்தனியாக வளர்ப்பது இயலாததென்று கண்டு, இணைத்து ஒன்றாய் வளர்க்க வழி காட்டினார். தானே வளர்த்துங் காட்டினார்.

இத்தகைய மகத்தான பணி புரிந்த பெருமானுக்கு சென்ற நூற்றாண்டிற் சைவ உலகம் பாராட்டைத் தெரிவித்தது. அவருடைய நூற்றாண்டு விழாவையொட்டி ஈழத்தில் சிறப்பு மகாநாடுகள் நடைபெற்றன. அன்னாரின் உருவச்சிலை அழகுக் கோலத்துடன் திருவுலாச் செய்யப்பட்டு யாழ்ப்பாணத்து நல்லூரில் நிறுவப்பட்டது. சென்ற நூற்றாண்டில் அவர்கள் ஆற்றிய சேவையைச் சைவத்தமிழ் மக்கள் என்றுமே மறக்க முடியாது.

கருவிலே திருவுடையாராக அவதரித்த 'நாவலர்' அவர்களுடைய பிள்ளைத் திருநாமம் ஆறுமுகம் என்பது. இவர்களின் முன்னோர்கள் சைவப்பற்றும் சீவகாருண்யமும் உடையவர்கள். அவர்களில் ஒருவரான ஞானப்பிரகாசர் என்பவரே பசுக் கொலைக்கு அஞ்சி இரவோடிரவாக யாழ்ப்பாணத்தை விட்டு இந்தியாவுக்குச் சென்றவராவார். அங்கே சிதம்பரத்தின் கண்ணே எழுந்தருளியுள்ள தில்லையம்பலவரை வணங்கித் தமது மரபில் ஒரு சற்புத்திரர் தோன்றி இந்த நிட்டூர நிலையை நீக்கிச் சைவ மக்களுக்கு விமோசனமளிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார். அவ் வழிபாட்டை ஏற்றுக் கொண்ட இறைவனருளினாற்றான் ஆறுமுகம் 1822இல் நல்லைநகரிலே அவதரித்தார். இளமையிலேயே மேதா விலாசமுடையவராகவும் கூர்ந்த மெஞ்ஞானமுமுடையவராயும் விளங்கினார். தந்தையார் கந்தப்பிள்ளை சிறந்த அறிஞர். கலைப்பிரியர். அவர் பாடிக் குறையிலே விட்டுச் சென்ற நாடகத்தை ஆறுமுகம் ஏழாம் வயதிலேயே பூர்த்தி செய்தார். வடமொழி, தென்மொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் ஐயந்திரிபறக் கற்றார்.

அன்று ஆங்கிலக் கல்வி கற்கும் வாய்ப்பு மிஷனரிமாருடைய கல்வி ஸ்தாபனங்களிலேயே கிடைத்தது. அங்கேயே சேர்ந்து ஆங்கிலக் கல்வியை கற்று வித்தக தன்மையைப் பெற்றதுமன்றித் தமிழ் பண்டிதராகவும் அங்கு கல்வி கற்பிக்க அமர்த்தப்பட்டார். இதே காலத்தில் பார்சிவல் துரையினுடைய பாராட்டு அவருக்கு நிரம்பக் கிடைத்தது. விவிலிய நூலை தமிழிலே மொழி பெயர்க்கும் பணியில் பெரும் புகழீட்டினார். இதனால் கிறிஸ்தவர்களும் இவருடைய வித்துவத்தைப் போற்றினார்கள். பார்சிவல் பாதிரியார் அவர்கள் தமக்குத் தமிழ் கற்பிக்குமாசானாக நாவலர் அவர்களை ஏற்றுக் கொண்டார்.

தமிழ் இலக்கண இலக்கிய நூல்களையும் வேதாகமப் புராணங்களையும் கசடறக் கற்ற சிறப்பினால் பிழையற எழுதவும் நன்றாக பேசவும் ஆற்றலுடையவரானார். இவருடைய பேச்சாற்றலை வியந்து திருவாவடுதுறை மகா சந்நிதானமானவர்கள் கற்றாரவைக்கண் 'நாவலர்' என்ற பட்டத்தைச் சூட்டிக் கௌரவித்தனர்.

"ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்தொன் றாம்புலவர்
வார்த்தை பதி னாயிரத் தொருவர்."

என்று சொல்வது வழக்கம். வாக்கு வன்மை சாதாரணமாக எல்லோர்க்கும் கிடைக்கும் பேறு அல்ல. நாவண்மை மிக்க நாவலர் அவர்கள் சென்ற நூற்றாண்டில் 'பிரசங்கம்' என்ற நிகழ்ச்சியை ஆலயங்களில் தொடக்கி வைத்தார். அன்று பாலர் முதல் விருத்தர் வரையிலும் பண்டிதர் முதல் பாமரர் வரையிலும் இவர் சொற்பொழிவுகளை கேட்டு பயனடைந்தனர். நூற்றுக் கணக்கான நூல்களை விழுந்து விழுந்து படித்தாலும் அவற்றிலுள்ள கருத்துக்கள் பலர் மனதிற் பதியமாட்டா. இக் குறைபாட்டை ஓரளவு சொற்பொழிவுகளால் நீக்கலாமென்பதை நாவலர் பெருமான் செய்து காட்டினார். வேதாகம உண்மைகளையும் புராண சாரங்களையும் விளக்கி, சிவநெறியின் தொன்மையும் சிவ

பரம் பொருளின் பேரருட்டிறனும் விளங்கச் சொன்மாரி பொழிந்தவர் இவர். இவருடைய சொற்பொழிவில் பக்தி, வீரம், சோகம், நகைச்சுவை, வியப்பு யாவும் ஒருங்கு கலந்து மிளிரும். இவருடைய விரோதிகளும் தம் பகை மறந்து கைகட்டி வாய் புதைத்து வாளாவிருந்து பிரசங்கங்களை கேட்டாரென்பதை நாமறிகிறோம்.

"சொல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கு மரிது."

என்றார் வள்ளுவர்.

சைவமென்னும் பயிரை வளர்க்கப் பிரசங்கம் என்னும் மழையைப் பெய்விக்க வேண்டும் என்பது தான் அவர் கண்ட புதுவழி. இதன்படி வெள்ளிக்கிழமை தோறும் யாழ்ப்பாணத்து வண்ணார்ப்பண்ணை சிவன் கோவிலில் பிரசங்கம் செய்து வந்தார். இவரது பிரசங்கத்தால் நன்மையடைந்தோர் மிகப் பலர். ஆனால் சொல்லுதலெளிது; சொல்லியபடி நடப்பது தான் மிகவரிது என்பர். நாவலரவர்களோவென்றால் தான் எதனை அனுஷ்டித்தாரோ அதனையே மற்றவர்களுக்குச் சொன்னார். மாமிச போசனமும் மதுபானமும் மனிதனை அரக்கனாக்குவது என்பதை அழுத்தம் திருத்தமாக எடுத்துக் காட்டி விளக்கினார். இதனை கேட்டு மனம் திருந்திய பலர் அத்தீய பழக்கத்தை கைவிட்டனர். வீணரோடு கூடித் திரிந்து தமது நேரத்தை அவப்பொழுதாக கழித்த பலர் இவர் சொற்பொழிவுகளைக் கேட்பதிலே காலத்தை பயனுடையதாக்கினர். ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் இவர் தொடர்ந்து பிரசங்கங்கள் செய்தார். தமிழகத்திலும் சைவப் பிரசங்கங்கள் பலவற்றையாற்றிய போது சித்தாந்த தெளிவையும் செந்தமிழ் நடையையும் பக்திச் சிறப்பையும் ஒருங்கே கண்டு பலர் வியந்தனர். இவருடைய பேச்சில் இலக்கண வழுக்கள் மருந்துக்கேருமில்லை. சொற் பஞ்சமின்றி எவருக்கும் விளங்கப் பேசும் ஆற்றல் அக் காலத்தில் வேறெவரிடமும் காண முடியாமலிருந்தது.

நெற்றிக் கண்ணை காட்டிய போதும் உன் பாடல் குற்றமே குற்றமென்று எடுத்துக் கூறிய நக்கீரர் பரம்பரையில் வந்தவர் தான் நம் நாவலர் பெருமான். குற்றம் கண்ட வழி எவரையும் கண்டித்துப் பேசும் தன்மை இவருக்குண்டு. ஆனால் கண்டிக்கப்பட்டோர் திரும்ப இவரை எதிர்த்துப் பேசியதே கிடையாது. ஏனெனில் அழகும் சாதுர்யமும் அமைந்த அவரின் கண்டிக்கும் முறையில் அவர்கள் அடங்கியிருந்தனர். இதனால் கேட்பவர் யாவரும் மதுவுண்டு மயங்கும் மதுகரமொப்ப மயங்கி விடுவர். சைவத்தை இழித்தும் பழித்தும் பாதிரிமார் போதனை செய்தனர். அதனை ஏற்று அடிமை வாழ்வை பல தமிழ் மக்கள் மேற் கொண்டு சிறிய சலுகைகளை நோக்கி பெரியதோர் பண்பாட்டை இழந்து நின்றனர். இவர்களை ஆணித்தரமான முறையில் கண்டித்தார் நாவலர். இதனாற் பாதிரிமார் வாயடைத்தது மல்லாமல் நெறி மாறிய தமிழரும் சைவத்துக்கு திரும்பினர். இதே நேரத்தில் நாவலரை பலர் எதிர்த்ததுமுண்டு. அந்த எதிர்ப்பின் மத்தியிலேயும் "சிவனுண்டு பயமில்லை" யென்று வாழ்ந்தார் நாவலர்.

அடுத்து அவருடைய எழுத்துப் பணியை கவனிப்போம். கிறிஸ்தவ குருமார்கள் தமது மதத்தை போதிப்பதற்கும் பரப்புவதற்கும் எவ்வாறு பிரசுரங்களை வெளியிட்டார்களோ அவ்வாறே சைவத்தைப் பரப்புதல் நலமென்று கண்டார் நாவலர். திருமுறைகளின் சாரத்தையடக்கியும் சைவ சித்தாந்த உண்மைகளை விளக்கியும் பாலபாடம், சைவ வினா - விடை முதலிய நூல்களை எழுதி வெளியிட்டார். செய்யுள் நடையில் இருந்த பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணமென்பனவற்றை வசன நடைக்கு மாற்றினார். அடியார் பெருமையையும் திருத் தொண்டின் மகிமையையும் விளக்கி பெரிய புராண சூசனம் என்ற நூலை ஆக்கினார். சிவாலய வழிபாட்டு முறைகள் இவர் நூல்களால் மிகத் தெளிவாக்கப்பட்டன. நன்னூற் கண்டிக உரை, இலக்கண சுருக்கம் என்பனவும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கேற்ற முறையில் வெளியிடப்பட்டன. ஏடுகள் பலவற்றையும் துருவி ஆராய்ந்து திருக்கோவையார் முதலிய பழந்தமிழ் நூல்களை பதிப்பித்த பெருமையும் இவரையே சாரும். நாவலர் பதிப்பு ஒன்றே பிழையில்லாத பதிப்பு என்று பெயர் அன்றும் இன்றும் நிலவுகின்றது. தமிழில் இனிய வசன நடையைத் தொடக்கி வைத்த பெருமையும் நாவலருக்கே உண்டு.

"அன்னநடை பிடியினிடை அழகு நடை
யல்லவென அகற்றி அந்நாட்
பன்னுதமிழ்ப் புலவரிடம் செய்யுணடை
பயின்ற தமிழ்ப் பாவையாட்கு
எனப்பயிற்றி வைத்த ஆசான்
மன்னுமருள் ஆறுமுக நாவலன்றன்
ஒழுக்கநடை போல வாழி"

என்று பாராட்டினார் யாழ்ப்பாணத்து நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர். இன்னும் "வசன நடை கை வந்த வல்லாளர்" எனவும் போற்றப்பட்டார். தமிழ் வசன நடைக்குப் புதுவடிவம் கொடுத்தோடமையாது தரிப்புக் குறிகளையிட்டுப் புதுமை செய்தார். சொற்களையோ சொற்றொடர்களையோ வசனங்களையோ பிழையின்றி எழுதுவதிலும் பதிப்பிப்பதிலும் இவருக்கு நிகர் இவரே.

சைவத்துக்கும் தமிழுக்கும் அரும் பணியாற்ற வேண்டுமானால் அச்சுக் கூடங்களை அமைத்து நூல்களை வெளியிட வேண்டுமென்றும் பாடசாலைகளை தாபித்து இலவசக் கல்வி அளிக்கப்பட வேண்டுமென்றும் அவருடைய சிந்தனையிற் பட்டது. இதற்கான நிதியை திரட்டுவதிலும் பெரும் பாடுபட்டார். அயரா உழைப்பின் பெயரால் வண்ணார் பண்ணையிலும் சிதம்பரத்திலும் வித்தியாசாலைகளை அமைத்து அச்சுக் கூடங்களையும் நிறுவினார். இறைவனருளால் அவ்வப்போது இதற்கான பண உதவி கிடைத்தது. 1850 ஆம் ஆண்டு முதன் முதலாக

(தொடர்ச்சி....)

# அருள்மிகு துர்க்காதேவி ஆலயம்



## வரலாற்றுப் பாதை: ஒரு பார்வை

அருள்மிகு துர்க்காதேவியின் எழில்மிகு தோற்றத்தை இன்று தெல்லிப்பழை துர்க்காபுரப் பகுதியிலே ஆயிரமாயிரம் உள்ளங்கள் ஒன்றுபட்டுத் தரிசிக்கின்றன. யாழ்ப்பாணத்தின் வடபால் காங்கேசன்துறைப் பெருந்தெரு வழியே எட்டாவது மைல் கல் தொலைவில் அமைந்திருக்கும் இவ்வாலயம் துர்க்கை அம்பாளின் பரிபூரண சக்தியைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான பழைமை வாய்ந்த இவ் ஆலயத்தின் பூர்வீக வரலாற்றையும், இன்றைய எழுச்சிப் பெருநிலையையும் அறிந்து கொள்வது பயன் தருவதாகும்.

### பூர்வீகச் சிறப்பு

தொன்று தொட்டு வளமும், பண்பாடும் சார்ந்த மக்கள் இலங்கும் யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழை கொண்டுள்ள பிரிவுகளிலே உழவுத் தொழிலைக் கைக்கொண்டு வரும், உயர் புகழுக்கு வித்துமாய கொடைப் பண்பு செறிந்திலங்கும் உழுகுடைப்பதி வவுணாவத்தையிலே சைவ மரபிலே வந்தவர் சைவப்பெரியார் கதிர்காமர்.

ஏறக்குறைய 1750ஆம் ஆண்டளவில் கதிர்காமர் இந்தியாவுக்குத் தலயாத்திரைக்காகப் புறப்பட்டு காங்கேசன்துறையில் தோணியேறித் தென்னிந்தியாவின் கீழைக்கரையில் உள்ள வேதாரணியத்திலே கரையேறினார். அவர் அங்கிருந்து பாதயாத்திரையாகத் தல வழிபாடு செய்து கொண்டு காசித்திருத்தலம் வரை சென்றார். இவ்வகையில் இந்தியாவில் ஏறக்குறைய பத்து வருடங்கள் கடந்தன. இக்காலவெல்லைக்குள் அவர் தமிழையும் சமஸ்கிருதத்தையும் நன்கு கற்றுத்தேறி ஒரு துர்க்கை உபாசகராகவும் மாறிவிட்டார். அதனால் ஏறக்குறைய 1760ஆம் ஆண்டளவில் தாம் யாழ்ப்பாணம் திரும்பும்போது துர்க்காதேவி யந்திரமொன்றையும், வெண்கலத்தினாலமைந்த 'திருமுகக்கெண்டி' உருவமொன்றையும் கையோடு கொண்டு வந்தார். அன்பர் கதிர்காமர் அவர்கள் காசியிற் பலநாள் தங்கியிருந்தார். இந்தியா முழுவதிலுமுள்ள சக்தி பீடங்கள் அறுபத்து நான்கினுள்ளும் காசியினுள்ள சொப்பனேஸ்வரி பீடம் முக்கியமானது. துர்க்காதேவி சகல கலைகளுடனும் பொலிந்திருக்கும் பீடம் அது. அன்பர் கதிர்காமர் குறித்த யந்திரத்தை அங்கிருந்தே பெற்றிருந்தார் என எண்ணுதற்கு இடமுண்டு.

காசியாத்திரையை முடித்துக்கொண்டு காங்கேசன்துறையை வந்தடைந்த இப்பெரியார் கீரிமலையில் புண்ணிய தீர்த்தமாடி அங்கிருந்து நடந்து மூன்றுமைல் தூரம் இவ்விடம் நோக்கி வந்து கொண்டிருந்தார். திருவருள் அவரது நடையிலே தளர்வைத் தோற்றுவித்தது. ஆயிரக்கணக்கான மைல் தொலைவெல்லாம் நடைகொண்ட நம் பெருந்தகையின் ஆற்றலிலே அடங்கிக் கிடக்கும் துர்க்கை அங்கிருந்து கொண்டு அனைவருக்கும் திருவருள் பாலிக்கும் திருக்கருணை கொண்டாள். நடை தளர, உடல் தளர, அண்டியிருந்த இலுப்பைத் தோப்பிலே இளைப்பாறினார். கொண்டு வந்த துர்க்கா சக்கரத்தை அங்கே தாபிக்குமாறு ஆணை பிறந்தது. அவ்வாணையைச் சிரமேல் தாங்கி மரத்தடியிலே சக்கரத்தை அமைத்து வழிபடத் தொடங்கினார். கதிர்காமர் தாம் கொண்டு வந்த யந்திரத்தையும் திருமுகக் கெண்டியையும் ஸ்தாபனம் செய்து வழிபட்ட இடமே இன்று துர்க்காதேவி தேவஸ்தானமாக வானளாவும் கோபுரங்களும், அலங்கார வளைவு கொண்ட நுழைவாயிலும், அழகிய தெப்பக்குளமும் எழிலூட்டி நிற்கக் காட்சி தருகின்றது. கதிர்காமரின் ஆன்மார்த்த பூசை நிலையமாயிருந்த இந்த ஆலயம் பரார்த்த பூசைக்குரிய நிலையமாய் இன்று விருத்தி அடைந்தவற்றை மேற்கூறிய செய்தி உணர்த்துகிறது.

## மாவிட்டபுரத் திருத்தல தொடர்பு



மாவிட்டபுரம் கந்தனின் அருள்மிகு திருக்கோபுரம்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலோடு இவ்வாலயத்திற்கு ஆரம்ப காலம் முதலே நெருங்கிய தொடர்பு இருந்துள்ளதை பழைய ஏட்டுப்பிரதிகள் குறிப்பிடுகின்றன. மாவை முருகன் ஆலயத்தில் கருங்கற் திருப்பணி நிறைவேற்றப்பட்டு 1815இல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றதெனவும், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குப் பின் (கி. பி. 1820) தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றதெனவும் அறியப்படுகிறது. மேலும் அரசாங்கக் கச்சேரிப் பதிவுகளில் துர்க்காதேவி ஆலயம் கற்கோவிலென்று 1820இல் பதியப்பட்ட செய்தியும் மேற் கூறியதற்கு சான்றாக உள்ளது. 1829ஆம் ஆண்டு புரட்டாதி விஜயதசமி தினத்தன்று மாவை முருகன் இவ்வாலயத்திற்கு எழுந்தருளி வந்து வன்னி வாழை வெட்டும் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. இந்த விழா வசிட்ட இலங்க புராண சுப்பிரமணிய பராக்கிரமத்தை அடிப்படையாகக் கொண்டதாக உள்ளது.



மகாராஜஸ்ரீ
இரத்தினசபாபதிக் குருக்கள்

## புராணபடனச் சிறப்பு

இவ்வாலயத்திற் தொன்று தொட்டுத் தொடர்ந்து வரும் மற்றொரு சிறப்பம்சம் புராணபடனமாகும். வருடம்தோறும் பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகியன கிரமமாகப் படிக்கப் பெற்று வந்துள்ளன. யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல அறிஞர்கள் பலர் இப்படிப்புக்களில் பங்குபற்றியுள்ளனர். உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் அவர்கள் இவர்களில் ஒருவர். 1958ஆம் ஆண்டு தொடக்கம் மூன்று பெரும் புராணங்களும் படிக்கப்பெற்று உரைகூறிப் பயன்கூறி வந்தமையும் சிறப்பம்சமாகும்.



திருமுறை மடம்

## தர்மகர்த்தா சபையும் நிர்வாக சபையும்



சிவத்தமிழ்ச் செல்வி
தெய்வத்திருமகள் கலாநிதி
தங்கம்மா அப்பாக்குட்டி

1948இல் தனி முகாமையாளர் திரு. க. நாகநாதர் அவர்களினால் பதினொரு பேரைக் கொண்ட தர்மகர்த்தா சபையினரிடம் ஆலய பரிபாலனம் ஒப்படைக்கப்பட்டது. 1965இல் உப சபையாக பதினெட்டு உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டு அவர்களே பரிபாலனப் பொறுப்பை ஏற்று நடத்தினர். நிர்வாக சபையினரின் பராமரிப்பில் அன்று முதல் இன்றுவரை ஆலயம் சிறப்பான வகையில் வளர்ச்சிபெற்று வருகிறது. நிர்வாக சபையின் ஏற்பாட்டில் முதலாவது கும்பாபிஷேகம் 1965ஆம் ஆண்டு ஆவணி ஓணத்திலும், இரண்டாவது கும்பாபிஷேகம் 1981 சித்திரை உத்தரத்திலும், மூன்றாவது கும்பாபிஷேகம் 1997 ஆவணிச் சுவாதியிலும், நான்காவது கும்பாபிஷே கம் 2011. தைத்திங்கள் 10ஆம் நாளிலும் (24.01.2011) சிறப்பாக நடைபெற்றது. முதலாவது நிர்வாக சபையின் தலைவராக அமரர் தியாகராசா (கல்வி அதிகாரி) சிறப்பாக வழி நடத்தினார். அவரின் பின் அமரர் திரு. து ஜெயரட்ணம் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர்) வழி நடத்தினார். அவரின் மறைவின் பின், 1977 முதல் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தலைவராகப் பணிபுரிந்து ஆலயப் பணிகளுடன் பன்முகப்பட்ட சமுதாய சமூகப்பணிகளையும் ஆற்றிவந்தார். இது ஒரு வரலாற்றுப் பதிவாக இருப்பதுடன், சைவத் தமிழ் உலகத்தினால் என்றென்றும் மதித்துப் போற்றப்படும் பெருமையையும் அம்மையார் பெற்றிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

2008ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதியன்று அம்மையாரின் மறைவுக்குப் பின்னர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள் ஆலய நிர்வாக சபைத் தலைவராகப் பொறுப்பேற்று, அம்மையாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி சிறப்பாகச் சேவையாற்றி வருகிறார். இவரது சேவைக்காலத்தின் போது 2011ஆம் ஆண்டு இங்கு மீண்டும் புனருத்தாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு மகாகும்பாபிஷேகம் இடம்பெற்றது. ஆலயத்தின் முன்பக்கம் புதிய மண்டபம் அமைக்கப்பட்டதுடன் இலண்டனிலிருந்து 1200 கிலோ எடையுடைய கண்டாமணி கொண்டுவரப்பட்டு புதிய மணிக்கோபுரத்தில் பொருத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஆலயத்தின் உட்பிரகாரங்கள் பலவித சிற்ப வேலைப்பாடுகளுடன் புதுப்பிக்கப்பட்டன.



சைவஞானபானு கலாநிதி
ஆறு. திருமுருகன்



## தென்திசைவாயில் புதிய கோபுரம்

ஆலயத்தின் தென்திசை வாயில் புதிய கோபுரம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கம் அம்பாளின் திருவருளால் நிறைவேறி இன்றைய தைப்பூச நன்நாளில் கும்பாபிடேகம் காண்கின்றது. கடந்த வருடம் 2016 தைப்பூச நன்னாளில் அடிக்கல் நாட்டப்பட்டு திருப்பணி வேலைகள் மிகத்துரிதமாக நடைபெற்று இவ்வருட தைப்பூச தினத்தில் கும்பாபிடேகம் நடைபெறுவது என்பது அம்பாளின் பூரண



அனுக்கிரகமின்றி வேறேதுமில்லை என்பது வெள்ளிடை மலை.

திருப்பணி வேலைகள் தேசகீர்த்தி ச.ஆறுமுகநாதன் அவர்கள் மேற்பார்வையின் கீழ் அழகிய கோபுரத்தை தமிழ்நாட்டைச் சேர்ந்த சிற்பக்கலைஞர் திரு புருஷோத்தமன் சிறப்பாக அமைக்க, ஆலய ஆஸ்தான ஆசாரியார் செ.முத்துக்குமார். செ. செந்தில்குமார் (கோபுர திருக்கதவு உருவாக்கம்) அவர்கள் உறுதுணைபுரிய கோபுர மின்விளக்கு வேலைகளை திரு.த.தயாநந்தன் அவர்கள் நிறைவேற்றினார்கள்.

## மகோற்சவ பெருவிழா

துர்க்காதேவி ஆலய வரலாற்றில் மிக முக்கியமான இடத்தைப் பெறுவது 1968ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மகோற்சவமாகும். ஆவணி மாத பூர்வபட்சத்தில் வரும் பூர நட்சத்திரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவோண நட்சத்திரத்தில் தீர்த்த விழாவோடு நிறைவு பெறுவது ஆலயத்தின் மகோற்சவ ஒழுங்காகும். பன்னிரண்டு தினங்கள் மகோற்சவம் நடைபெற்று வருகிறது.


வேட்டைத்திருவிழா


சப்பரத் திருவிழா


தேர்த் திருவிழா


நவசக்தி அர்ச்சனை


தீர்த்த திருவிழா


தீர்த்த திருவிழா

## திருமஞ்சத் திருப்பணி


*கைலாச வாகனம், மஞ்சம் ஆகியவற்றை உருவாக்கிய சிற்பாசிரியர் திரு. செ. பாலசந்திரன்*

2009 ஆம் ஆண்டு துர்க்கா தேவிக்கு புதிய திரு மஞ்சமொன்று வடிவமைக்கப்பட்டது. அது முதலாக ஆண்டு தோறும் மகோற்சவத்தின் போது திருமஞ்சத் திருவிழா நடைபெற்று வருகிறது.


*கைலாசவாகனம்*


*திருமஞ்சம்*

## புதிய கைலாசவாகனம்

2013 ஆம் ஆண்டு இங்கு புதிதாக கைலாசவாகனம் ஒன்று உருவாக்கப்பட்டது. வருடாந்த மகோற்சவகாலத்தில் இங்கு கைலாசவாகனத் திருவிழாவும் இடம்பெற்று வருகிறது.

## துர்க்காபுரம் மகளிர் இல்லம்

தேவஸ்தானம் ஆற்றும் பன்முகப் பணிகளில் தலையாய ஓர் அறப்பணியாகக் கருதப்படுவது துர்க்காபுரம் மகளிர் இல்லப் பணியாகும். ஆதரவற்ற ஐந்து வயதுக்கு மேற்பட்ட சிறுபிள்ளைகளை ஆதரித்துக் கல்வியூட்டி, உணவூட்டி சகல பராமரிப்பையும் மேற்கொண்டு பணி புரிவதற்கு ஆரம்பத்தில் சிறிய கட்டிடத்தில் இடம் கிடைத்தது. இவ் இல்லம் - 1982ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. 1985ஆம் ஆண்டு சகல வசதிகளுடன் கூடிய மாடிக் கட்டிடம் கட்டப்பட்டு மகளிர் இல்ல செயற்பாடுகள் இங்கு இடம்பெற்றுவருகின்றன.


*துர்க்காபுரம் மகளிர் (சிறுமிகள்) இல்லம்*


*துர்க்காபுரம் மகளிர் இல்லம்*

## சிறு பெண் பிள்ளைகளுக்கான புதிய விடுதிச்சாலை.

2009ஆம் ஆண்டில் வன்னிப் பகுதியில் போர் நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட சிறு பெண் பிள்ளைகளையும் மகளிர் இல்லத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். இதனால் ஏற்பட்ட இடநெருக்கடியைத் தவிர்க்கும் வகையில் ஆலயத்தின் தெற்குவீதியில் இவர்களுக்கான புதிய விடுதிச்சாலையொன்று புரிதாக கட்டப்பட்டிருக்கிறது.



*துர்க்காபுரம் மகளிர் இல்ல உணவு மண்டபம்*




*துர்க்காபுரம் மாணவிகளின் ஆக்கத்திறன் செயற்பாடுகள் மற்றும் கல்விச் செயற்பாடுகள்*

## சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லம்

துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் அருகே 1990ஆம் ஆண்டில் சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லம் அமைக்கப்பெற்றது. ஐம்பத்தைந்து வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இவ்வில்லத்தில் தங்கியிருக்கின்றனர். அவர்களிடமிருந்து கட்டணம் எதுவும் பெறாது மகளிர் இல்ல நிதியில் இருந்து பராமரிக்கப்படுகிறார்கள். இவர்கள் வேறு எவருடைய உதவிகளையும் நாடாது இல்லத்தையே நம்பி வாழ்கிறார்கள். இவர்கள் ஆலய சரியைப் பணிகளையும், மகளிர் இல்லப் பணிகளையும் நல்லபடி ஆற்றி வருகிறார்கள். இவர்களுடைய உணவு, உடை, வைத்தியம் மற்றும் நானாவித செலவுகளுக்கு மகளிர் இல்ல நிதியிலிருந்து பணம் வழங்கப்பட்டு வருகின்றது. இவர்கள் அனைவரும் அம்பாள் வழிபாட்டில் ஈடுபட்டு பூரண அமைதியும், மன நிறைவும்

பெற்று வாழ்ந்து வருவது மகிழ்ச்சிக்குரிய நிகழ்வாகும். இவர்களுக்குமேலும் வசதியளிக்கும் வகையில், ஆலயத்தின் தென்கிழக்கு மூலை பகுதியில் இரண்டு வீடுகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அன்னையர்கள் வசிப்பதற்கு இவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## பல்துறைப்பட்ட சமூகப்பணிகள் :

ஆலயங்களெல்லாம் அறச்சாலைகளாக அமையவேண்டும் என்ற புனித நோக்கத்திற்கமைய இவ்வாலயம் ஆற்றிவரும் பணிகள் குறிப்பிடத்தக்கதாகும். சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் பிறந்தநாள் அறநிதியம் 1989ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை சிறப்பாக இயங்கி வருகின்றது. ஆண்டு தோறும் ஜனவரி மாதம் 7ஆம் திகதியில் இதன் பயன்பாடு நிகழ்கிறது. நூல் வெளியீடு, அறிஞர்களை கௌரவித்தல், வறுமைக்கோட்டிற்குக் கீழ்ப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவுதல், கைதடி வயோதிபர் இல்லத்திற்கு அன்பளிப்பு, யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு உதவியமை, யாழ் போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சை இயந்திரங்கள் வாங்க உதவியமை என்பன குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும். பிறந்தநாள் அறநிதியத்தின் சார்பில் வங்கியில் நிரந்தர வைப்பிலிடப்பட்டுள்ள பணத்திற்கு கிடைக்கும் வட்டி, ஆண்டு தோறும் சமூகப்பணிக்கு ஒதுக்கப்படுகின்றது. மற்றும் இவ்வாலயத்தின் நிதியிலிருந்து இந்நாட்டில் உள்ள பல்வேறு நிறுவனங்களும், வைத்தியசாலைகளும், பாடசாலைகளும் பயன்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ஆலயப் பணிகளோடு அறப் பணியும் இடம் பெறுகின்றது. இதைவிட காலந்தோறும் எம்மண்ணில் அகதிகளாக்கப்பட்டு தவித்து நிற்கும் மக்களுக்கு அவ்வப்போது உணவு, உடை, உறையுள், பண உதவி புரிந்து வருவதும் இந்த அறநிதியத்தின் சிறப்பான செயற்பாடுகளாகும். மேலும் விழிப்புலனற்றோர், புற்றுநோயாளர் ஆகியோருக்கும் உதவி செய்துவருவதும் குறிப்பிடத்தக்கது. ஆலயப் பணிகளோடு மகளிர் இல்லப்பணி, ஆதரவற்ற அன்னையர் இல்லப்பணி மற்றும் சமூகப்பணிகள் அனைத்தும் சகலரும் வியக்கும்படி நடைபெறுகிறது என்பதை சிறப்பாகச் சொல்லலாம்.

## நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்



தேவஸ்தான நிர்வாகசபையினால் நடத்தப்படும் துர்க்காதேவி மணிமண்டலம் நல்லூர் கந்தன் மேற்கு வீதியில் அமைந்துள்ளது. இந்த மண்டபத்திற்கான காணி நிலத்தை பெருமாட்டி திருமதி விசாலாட்சி அரியகுட்டி அம்மையார் அவர்கள் தர்மசாதனம் செய்துள்ளார். நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நல்லைக்கந்தன் மகோற்சவ காலம் இருபத்தைந்து நாளும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது. தவப்பெருந்திரு நாவலர் பெருமான் குருபூசை, தவமுனிவர் யோகசுவாமிகளின் குருபூசை, சமயகுரவர்கள் குருபூசை என்பன சிறப்பாக இங்கு நடைபெறுகின்றது. இங்கு இசை நிகழ்ச்சிகள் மற்றும் சமய நிகழ்ச்சிகள், நூல் வெளியீடுகள், அரங்கேற்ற நிகழ்ச்சிகள், திருமண வைபவங்கள் நடைபெற்று வருகின்றன. இந்த மணிமண்டபத்தில் 2015ஆம் ஆண்டு திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், மண்டபத்தின் பின்பகுதியில் மூன்றுமாடிகள் கொண்டபுதியகட்டிடமொன்றும் அமைக்கப்பட்டது. விருந்தினர் உணவு மண்டபமும், கருத்தரங்கு மண்டபமும், புதிய கட்டிடத்துக்குள் நிறுவப்பட்டிருப்பதும் சிறப்புக்குரியது.

## சிவத்தமிழ்ச்செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகம்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் ஆற்றி வருகின்ற அறப்பணிகளின் தொடரில் 07-01-2002இல் "சிவத்தமிழ்ச்செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகம்" திறந்து வைக்கப்பட்டது. இவ்வாய்வு நூலகத்தில் பண்டைய இலக்கண இலக்கிய நூல்கள், பன்னிரு திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள், பதினெண் புராணங்கள், வரலாற்று நூல்கள், எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள், பிரபந்தங்கள், பெரியபுராணம் உரைவிளக்க நூல்கள், சித்தாந்தம், ஞானசம்பந்தம், ஆண்டு மலர்கள், சென்னை தமிழ் வளர்ச்சிக்கழக கலைக்களஞ்சியம், கும்பாபிஷேக மலர்கள், கோவில் வரலாற்று நூல்கள், ஆய்வுக்கட்டுரைகளின் நூல்கள் போன்ற பலவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது. நூலக முன்புறம் பல்வேறு சிற்ப அமைப்புக்களையும், முன்றலில் கல்விக்கதிபதியான "சரஸ்வதி" யின் வெண்கலச்சிலையும் வெண்தாமரைப் பூவில் அமைக்கப்பெற்று காட்சி கொடுக்கின்றது.



## துர்க்காபுரம் வீட்டுத்திட்டம்

தெல்லிப்பழை கிழக்கு பகுதியில் நன்கொடையாகக் கிடைத்த காணியில் வீட்டுத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது. துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் வளர்ந்து திருமணமான பெண்பிள்ளைகளின் நலன் கருதி இவர்களுக்காக புதிய வீடுகள் அமைக்கப்பட்டு குடும்பமாக அங்கு வாழ்ந்து வருகிறார்கள். துர்க்காபுரம் மாதிரிக் கிராமமாக இந்த வீட்டுத் திட்டம் பரிணமித்து வருகிறது.





## துர்க்காபுரம் ஆயுர்வேதவைத்தியசாலை

முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் சித்த ஆயுர்வேத வைத்தியசாலையை ஆலய வளாகத்தில் நிறுவிய பெருமை துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு உரியது. வடமாகாண சித்த ஆயுர்வேத திணைக்களத்தின் அனுமதியுடன் ஆலய தர்மகர்த்தாசபை உறுப்பினர் ஒருவரது இருமாடிவீட்டை தேவஸ்தானம் வைத்தியசாலைக்காக பயன்படுத்திவருகிறது. இந்த வைத்தியசாலை இருபத்து நான்கு மணிநேரமும் இயங்குவதுடன் நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறக்கூடிய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.



*துர்க்காபுரம் ஆயுர்வேத வைத்தியசாலை*




*துர்க்காபுரம் மூலிகைத்தோட்டம்*

## மீண்டும் வேதபாராயண பாடசாலை

1990ஆம் ஆண்டுக்குமுன் ஆலய வீதியில் இயங்கி வந்த அந்தணச் சிறுவர்களுக்கான வேதபாராயண பாடசாலை போர்ச்சூழ்நிலைகள் காரணமாக செயலிழந்தது. இப்போது ஆலய திருத்தேர் மண்டபத்தில் மீண்டும் வேதபாராணய பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டு தைப்பூச நாளிலிருந்து இயங்கிவருகிறது.

## ஆலய விஸ்தரிப்புக்குபுதிய காணி கொள்வனவு

ஆலயத்தின் வடக்கு வீதி மற்றும் தெற்கு வீதி பகுதிகளில் காணிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இதனால் ஆலயத்தின் சூழல் தற்போது பெருவளர்ச்சி கண்டுள்ளது.

## "அருள் ஒளி" மாதாந்த சஞ்சிகை :

துர்க்காதேவி தேவஸ்தானம் ஆற்றி வருகின்ற பன்முகப்பட்ட சமூகப்பணிகளில் ஒன்றாக "அருள் ஒளி" என்னும் பெயரில் மாதாந்த சமய சஞ்சிகையை வெளியிட்டு வருகிறது. 2002ஆம் ஆண்டு மகோற்சவத்தின் தீர்த்த உற்சவ நாளன்று முதலாவது சஞ்சிகை வெளிவந்தது. ஒவ்வொரு மாதத்தில் வருகின்ற சிறப்புமிகு விழாக்கள், விரத அனுட்டான மகிமைகள், சமயக் கட்டுரைகள் போன்ற பல்வேறு அம்சங்களைத் தாங்கி சஞ்சிகை வெளிவருகின்றது.



நுழைவாயில் வரவேற்பு வளைவு



தெய்வத்திருமகளின் சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி நினைவு மணிமண்டபம்



தெய்வத்திருமகளின்
திருவுருவச் சிலை




அன்னபூரணி திருமண மண்டபம்



துர்க்காதேவி கோசாலை



தேரடியில் அமைந்துள்ள
கோமாதாவும் கன்றும்



விசாலமான தேர் கொட்டகை



"அன்னசத்திரம்" அன்னதான மடம்



ஆலய பூந்தோட்டம்
(தனிகாசலம் ஞாபகார்த்தம்)



துர்க்காபுரம் யாத்திரிகர் விடுதி

## தெற்குவாயில் இராஜகோபுரத்தை உருவாக்க உழைத்தவர்கள்



தமிழ்நாட்டு சிற்பக் கலைஞர்
திரு புருஷோத்தமன்



தேசகீர்த்தி ச. ஆறுமுகநாதன்
(திருப்பணி வேலைகளை
மேற்பார்வை செய்தவர்)



திரு. த. தயாநந்தன்
(கோபுர மின்விளக்கு
வேலைகளை நிறைவேற்றியவர்)



ஆஸ்தான ஆசாரியார்
திரு. செ. முத்துக்குமார்

## சிவத்தமிழ்ச் செல்வி, தெய்வத்திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் குருபூசை நிகழ்வின் சில பதிவுகள்







## இந்து இளைஞர் சங்கம் / பெண்கள் தொண்டர் சபையின் பங்களிப்பு

கடந்த பல வருடங்களாகவே தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் இவ்வாலயத்தோடு இணைந்து சரியைத் தொண்டாற்றி வருவது ஆலயத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்கை அளிக்கிறது. துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபையினரும் பல்வேறுபட்ட சரியைப் பணிகளைச் செய்து வருகிறார்கள். இச்சபை 1979ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இன்று உலகமெங்கணும் வாழும் சைவத்தமிழ் மக்களில் பெரும்பாலோர் துர்க்காதேவியின் அடியார்களாக விளங்குவதால் அவர்கள் பெறும் இன்ப அனுபவங்கள் நாள்தோறும் கடிதமூலமும் நேர்முகமாகவும் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. கருணைத் தாயாக இங்கு எழுந்தருளி உலகமெங்கும் தனது கருணைப் பிரவாகத்தை வீசி ஒளிகொடுத்து வரும் அன்னையின் மகோற்சவம் நடைபெறும் காலங்களில் அங்கு விரதம் அனுட்டிப்போர் பலர். எனவே மெய்யடியார்கள் பலரதும் அன்பும் பக்தியும் ஆதரவும் பொங்கி வந்து கொண்டிருப்பதால் எல்லாவகையான சிறப்பையும் இவ்வாலயம் பெற்று மிளிர்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.




தொகுப்பு: அ. கனகசூரியர்

புகைப்படங்கள் : முருகையா பிரணவன்

இலவசக் கல்வியைத் தொடங்கி அளித்த மகான் நாவலர் அவர்களே. இந்த நிறுவனங்களின் மூலம் வருடா வருடம் தமிழையும் சைவத்தையும் முறையாகப் போதிக்கக் கூடிய போதாகாசிரியர்கள் பலர் தோன்றினர். இன்றும் இந்தக் கல்வி பரம்பரையிலே வந்த ஒரு சிலரே இப்பணியில் உழைத்து வருகின்றனரென்றால் அதில் மிகையொன்றுமில்லை. அவராக்கிய நிறுவனங்கள் இன்றும் பெரும் பணியாற்றி வருவது கண்கூடு.

நாவலர் பெருமானை சென்ற நூற்றாண்டிலே நம் நாட்டிலே அவதரித்த 'ஐந்தாம் குரவர்' என்று பலரும் போற்றுவர். இதனால் வருடா வருடம் மார்கழித் திங்களில் இவருடைய குரு பூசை விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இலங்கையிலிருந்து வந்து மலாயா நாட்டிலும் சிங்கப்பூரிலும் பணியாற்றும் சைவசங்கமும் இவ் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வருவதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இந் நாட்டு இளஞ் சந்ததியினருக்கு நாவலர் எழுதிய சைவ வினா விடை முதலிய நூல்களை கற்பிக்க வேண்டும். இன்று வெண்ணீறு பூசுவோர், விரதம் அனுஷ்டிப்போர், திருவிழா எடுப்போர், பிரசங்கம் செய்வோர், புராணபடனம் ஆற்றுவோர் யாவரும் நாவலர் ஐயா அவர்களின் வழியையே பின்பற்றிச் செல்கின்றனர். அவரே எமக்குல்லவர் குரு ஆவர். நாவலர் வழியில் நின்றதுமன்றி நிற்கவும் எமக்கு வழி காட்டினவர். அவருடைய சமய முறையைப் பற்றி மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் கூறுகிறார்

"கருள்விரவு தலைக்கழிக்கும்
குணமணியும் வெண்ணீறும்
பொருள்விரவும் ஐந்தெழுத்தும்
பொருளாகக் கொண்டுவப்போன்
தெருள்விரவி சுத்தசைவ
சித்தாந்தப் பெருஞ்செல்வன்
அருள்விரவு பரவுபுகழ்
ஆறுமுகநாவலனே"

நமது நால்வர் பெருமக்களும் இதே வாழ்க்கையையே வாழ்ந்தார்கள், சைவத்தை நிலை நாட்டினார்கள்; திருமுறைகளை தந்தார்கள்: சிவாலய தரிசனம் தந்தார்கள்: மறுசமயத்தின் தாக்குதலை தடுத்தார்கள். அரசியல், சமுதாயம் என்பனவற்றிற் புகுந்து ஆகும் நெறிக்கு வழிகாட்டினார்கள். இதே வரிசையில் பெரும் பணியாற்றியவர் நாவலர் ஐயா அவர்கள். பெரும் பஞ்சம் சென்ற நூற்றாண்டில் எமது யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டது. அதனைப் போக்குவதற்கு கஞ்சித் தொட்டித் தருமம் ஒன்றை ஏற்படுத்தினார். இதனால் பலர் பட்டினி தீர்ந்து நலமடைந்தனர். நாட்டிலே கொடிய கொள்ளை நோய் தோன்றி மக்கள் உயிரை வதைத்த போது உடனடியாக அதனை அரசியலார்க்கு அறிவித்து ஆவன செய்து நாட்டு நலனைப் பேணி மக்களுக்கு வாழ்வு கொடுத்தார். தமிழ்ப் பெருந்தலைவராக சேர். பொன். இராமநாதனை சட்டசபைக்கு அனுப்பி வைத்தார். இவ்வாறு மகத்தான சமூகப் பணிகளாற்றிச் சமுதாய நலனைக் கண்ணும் கருத்துமாக பேணியவர் ஆவார். அவர்கள் வழியிலே நாமும் சிறிது சென்று சைவத்தையும் தமிழையும் பேணி நாட்டு மக்கள் உள்ளத்திலே தூய வாழ்வை நிறுவுவதற்கு வழி காண்போமாக.

"ஆரூர னில்லைப் புகலியர் கோனில்லை அப்பனில்லைச்
சீரூரு மாணிக்க வாசக னில்லைத் திசையளந்த
பேரூரு மாறு முகநா வலனில்லைப் பின்னிங்கியார்
நீரூரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கும் நீர்மையரே?

(நன்றி: "சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்வியற் பணிகள்" )

## பரிதவிக்கும் நிலைநீங்க கருணை செய்து அருளிடம்மா

– த. மனோகரன் –

தெல்லிப்பளை பதியிலிருந்து நலமருளும் துர்க்கையம்மா
தொல்லைதரும் கொடுமைகளை வேரறுக்க வேண்டுமம்மா
நல்லறிவு தந்து நம் குலம் தளைக்க வழிசெய்து
அல்லல் அகற்றும் வழிகாட்டி அருளிடம்மா

உட்பகையால் தமிழர் குலம் உற்ற துயர் போதுமம்மா
நாற்புறமும் துன்பங்களே எழுந்து நிற்குதம்மா
வேற்றுமைகள் நீங்கி எங்கள் குலம் மேன்மையுற்று
ஏற்றம் பெற்றிடவே வழிகாட்டி அருளிடம்மா

வட இலங்கை தனிலிருந்து வழிகாட்டி நிற்பவளே
இடர்கள் தரும் தீவினைகள் இனியும் வேண்டாமம்மா

குடமுழுக்கு கண்ட உந்தன் புனித திருத்தலத்தில்
நாட்டிவிடு நல்லறிவை நம்குலம் சிறக்க அருளிடம்மா

பாரெல்லாம் பரவியுள்ள உன்புகழால் இன்புற்று
ஊரெல்லாம் பெருமையுற எழுச்சி பெற்றோம் நாமிங்கு
காரிருள் போல் சூழ்ந்து நிற்கும் கவலைகள் எமைவிட்டு
தூர் நாராய் சிதைந்தொழிய வழிகாட்டி அருளிடம்மா

ஒன்று பட்டவாழ்வே உயர்வு தரும் என்றுணர்ந்து
நன்றாக நாம் வாழ வழிகாட்டி கைகொடம்மா
பிரிவினைகள், பிளவுகளால் தமிழ்த்தாயின் பிள்ளைகள்
பரிதவிக்கும் நிலை நீங்க கருணை செய்து அருளிடம்மா



# யோகர் சுவாமிகள் செய்த சில அருட் செயல்கள்



**(சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள், ஹவாய் ஆதீனத்திலிருந்து அனுப்பியிருந்த கட்டுரையின் சாராம்சம்.)**

யோக சுவாமிகள் ஓர் அபூர்வ சக்திவாய்ந்த சிவயோகியாவார். இவரின் பெருமை அறிவார் மிகச்சிலர் என்றே கூறலாம். இவர்தம் பெருமையை ஓரளவுக்கு அறிந்தவர்களுள்ளும் தனித்தனி இரண்டொரு சம்பவங்கள் மட்டுமேயன்றி எல்லாச் சம்பவங்களையும் அறிந்தவர் எவருமிலர். தமது யோக சக்தியை உபயோகித்துக் காட்டச் சற்றேனும் விரும்பாத இவர் மிக அருமையாக, மிகமிக இரகசியமாகவே அன்பர் சிலருக்கு ஏற்பட்ட தீரா இன்னல் சிலவற்றைக் களைதற்காக அச்சக்தியை உபயோகித்தனர். இவர் எவரும் அறியாமல் ஆங்காங்கு அன்பர் சிலருக்கு செய்துதவிய அற்புதங்கள் சிலவற்றை ஈண்டு வரைவாம்.

இவ்வற்புதங்களை அறிவதனால் அன்பர்களுக்கு அன்பு மேலும் மேலும் பெருகிவரும். அருள் செறியும், தெய்வம் உண்டென்னும் சித்தம் உறுதியாகும். இவ்வுறுதி பெற்றவர் வேண்டுவனவற்றை விமலன் ஈவது திண்ணம். தீவிர பக்குவமுடையார்க்கும் உயர்ந்த நிலைகளை உற்ற பெரியோர்க்கும் இவை நற்பொழுதுபோக்காகும். அறிவிற் குறைந்த சாதகர்கட்கும் ஏனையோர்க்கும் இவை அருள் ஊற்றாகும்.

இவைகள் இயற்கை நியதிக்கு மாறாகும் என்றும் விஞ்ஞானத்திற்கு ஒவ்வாதனவென்றும் எண்ணுதல் அறியாமையே. ஏனெனில் உலகின் கண் நிகழ்கின்ற யாவும் ஏதோ ஒரு நியதிக்கு உட்பட்டே நடைபெறுகின்றன. விஞ்ஞானமும் காணமுடியாத சக்தி உள்ளது. அதை மெய்ஞ்ஞானத்தாலேயே அறியலாம்.

சில ஆண்டுகளுக்கு முன்பு சந்திரனுக்கு மனிதன் யாத்திரை செய்யக் கூடுமென்று அறிவோமாயின் எம்மைப் பைத்தியக்காரர் அல்லது மூடநம்பிக்கை யுடையவர் என்றே கூறிவிடுவார்கள். ஆனால் இன்றோ அது சாத்தியமே யென்று கூறுவதோடமையாது யாத்திரையைச் செய்யவும் துணிந்துள்ளனர். ஆகவே சாதாரண பௌதீக விடயங்களே ஒரு காலத்தில் மூடநம்பிக்கையென்றிருந்து, காலவளவில் மாற்றமடைந்து சரியான உண்மையாக மாறுமாயின், ஆன்ம தத்துவத்தை அறிந்தவர்களுக்கு அவை எத்துணை அற்பச் செயல்களாகின்றன! பூதஞானம் விஞ்ஞானத்தினால் அறியப்படுவது போன்று விஞ்ஞானமும் மெய்ஞ் ஞானத்தினாலேயே அறியுந் தந்திரமானது.

ஆகவே ஈண்டு கூறும் அற்புதச்செயல்கள் தற்கால விஞ்ஞானத்திற்கு முரணாயினும் மெய்ஞ்ஞானிகட்கு என்றும் மாறுபட்டனவாகா என்பதை யாவரும் அறிய வேண்டும்.

**மழை பெய்வித்தமை:**

சில ஆண்டுகளுக்கு முன் வன்னிநாட்டிற் கமம் செய்விக்கும் ஓரன்பர் சுவாமிகளிடம் வந்தபோது காலமழையின்றிக் கமக்காரர் கஷ்டப்படுகின்றனர் என்று உரைத்தாராம். முளைத்த பயிரெல்லாம் வாடிவதங்கி இருப்பதாலும் அந்நிலை நீடித்தால் அவ்வருட விளைவே இல்லாது போய்விடும் என்று மிகுந்த வருத்தத்துடன் கூறினாராம் அந்த நேரத்தில் அவ்வாச்சிரமத்தினுள் வேறொரு அன்பர் கந்தபுராண படனம் செய்துகொண்டிருந்தார்.

சுவாமி வந்தவரிடம், "நீங்கள் கடவுள் நம்பிக்கையை இழந்து விட்டீர்கள்? யான் என்ன கடவுளா?" எனப் பலவாறு ஏசி அவரை அனுப்பிவிட்டார். அடுத்தநாளும் அதே நேரம் புராணபடனம் உள்ளே நடைபெறச் சுவாமிகள் ஆச்சிரம முற்றத்தில் சடையை விரித்துக் கங்கையைத் தாங்கிய சிவபெருமான் கோலத்தில் நின்று வானத்தைப் பார்த்து மூன்று தரம் இடியேறு போல் சத்தமிட்டார். பின்பு புராணம் படிப்பவர்களைப் பார்த்து, "இவன் விசரன் இதற்கெல்லாம் நீங்கள் பயப்படவேண்டாம்" என்றாராம். ஐந்து நிமிடங்கள் ஆகவில்லை மழை 'சோ' வெனக் கொட்டியது. அனேக நாட்களாக மழையின்றி இருந்த பூமிக்குப் புதையல் கிடைத்தது போலாயிற்று. அம் மழை வன்னிப்பகுதியிலும் பெய்து வளப்பஞ் செய்தது.

**சுவாமிகள் பாடிய**

**"நல்லமழை பெய்யாதோ நாடு சிறவாதோ**
**எல்லவரும் இன்புற்று வாழாரோ – நல்லூரான்**
**ஆசனாய் வந்தே அடியேனை ஆண்டுகொண்டான்**
**பேசானு பூதியென் பேறு"**

என்னும் நற்சிந்தனைப் பாடலைப் பாராயணஞ் செய்து மழையில்லாக் குறை தீர்க்கப்பட்டது.

**தூய சோதி**

சில காலத்துக்கு முன் ஈழநாட்டிலும் தமிழகத்திலும் பெரும் புகழ் பெற்றுத்திகழ்ந்த ஓர் சமயப் பிரசாரகராக ஸ்ரீ சங்கர சுப்பையர் என்னும் பெரியார் இருந்தார். இவர் தமிழகத்திலும் ஈழத்திலும் உள்ள எல்லாச் சிவதலங்களுக்கும் யாத்திரை செய்து இடையறாது சிவனடியையே சிந்தித்த பெரியாராவார். கதாப்பிரசங்கம் செய்யும் போது தம்மையே மறந்து பக்திப்பரவசமாகக் காணப்படுவதோடு பிரசங்கம் கேட்போரையும் அந்நிலைக்கு உயர்த்தும் ஆற்றல் பெற்ற ஒரு துறவியாவார். தென்னாட்டில் பெரும் புகழ் பெற்று "ராஜயோகி" எனத் திகழ்ந்த இப் பெரியார் திருவாலங்காட்டுத் தலத்தீசனுக்குத் தேர்த்திருப்பணி செய்வதற்காக எங்கும்

சென்று பொருள் ஈட்டினார். அக்காலத்தில் இவர் ஈழம் ஈன்ற திருவாசக மணியெனத் திகழ்ந்தாரென்பர்.

ஒருமுறை தாய் நாட்டைவிட்டுச் சேய் நாட்டின் தலைநகரான கொழும்புப் பட்டினத்திற்கு வந்து தமது சமயப்பணியில் ஈடுபட்டிருந்த இவருக்கு யாழ்ப்பாணத்து மக்களும் உரிய சன்மானம் செய்ய விளைந்து நேர்முகமாக இவரிடம் தகுதிவாய்ந்த சில பிரமுகர்களை அனுப்பி யாழ்ப்பாணத்திற்கு வரும்படி அழைத்தனர். அவ்வழைப்பிற்கிணங்கி அவரும் மற்றும் பிரமுகர்களும் புகைவண்டி மூலம் பிரயாணஞ்செய்து கொண்டிருக்கும் போது மாங்குளத்தில் ஸ்ரீ சங்கர சுப்பையர் ஏனையோரைப் பார்த்து, மேல் வருமாறு கூறினார் "ஓர் சோதி தெரிகிறது. இவ்விடத்திலிருந்தே இப் புகைவண்டியுள் ஏறிவிட்டது. எங்களோடு தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றது." என்றாராம். நாவற்குழி நிலையத்தை அடைந்ததும் "அச் சோதி இறங்குகின்றது" என்று கூறிக்கொண்டு தாமும் துள்ளிக் குதித்துக் கீழே இறங்கிவிட்டார். அந்த வேளையில் அந்நிலையத்தில் மாபெரும் தவவடிவமொன்று இறங்கியதைக் கூடவந்தவர் கண்டனர். அவ்வடிவம் எங்கள் யோகசுவாமிகளாகும்.

யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தில் ஸ்ரீ சங்கர சுப்பையரைப் பார்ப்பதற்கும் வரவேற்று மாலையணிவதற்கும் என்று நூற்றுக்கணக்கான மக்கள் காத்து நின்றனர். கூட்டத்திற்கு ஒழுங்குகள் செய்த இடத்தில் மக்கள் பெருவாரியாகக் கூடி வரவை எதிர்பார்த்திருந்தனர்.

ஸ்ரீ சங்கர சுப்பையர் அத்தவவடிவைப் பின்தொடர்ந்து சென்று வணங்கவேண்டுமென்று பேரார்வத்துடன் கூறியதும் கூட்டி வந்தவர்கள் திகைப்புற்று யாழ்ப்பாண நிலையத்திலிருக்கும் நிலைமையைக் கூறிப் பிரயாணத்தைத் தொடரும் படி வேண்டினர். அதற்கு அவர் தான் அத்தவவடிவத்தைத் தரிசித்து வணங்கிய பின்பே தாகசாந்தியைத் தானும் செய்வேன் என்று விரதஞ் செய்து கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வந்து தமது கூட்ட அலுவல்களை முடித்துக் கொண்டு அக்காலத்தில் யோக சுவாமிகள் தனது ஆச்சிரமமாகக் கொண்டிருந்த இடமாகிய அரியாலைக்குச் சென்று அவர் திருவடிகளில் சாஷ்டாங்கமாகப் பணிந்து, "இதுகாலவரை யான் யாத்திரை செய்த எத்திருத்தலத்திலும் எய்தாத இன்பத்தை இத்திருத்தலத்தில் யான் இன்று எய்துகிறேன்" என்று மொழிந்தனர். அப்போது சுவாமிகள் திருவாய் மலர்ந்து, "போதும்! போதும்! இனி விடு சமுத்திரங்கள் எல்லாம் தாண்டிவிட்டாய். இன்னுமிருப்பன சிற்றாறுகள் தானே. இவற்றைத் தாண்டுவது இனி உனக்குச் சிரமமாகுமா?" என்றனர்.

இச்சம்பவம் நடைபெற்ற பின்பே யாழ்ப்பாண நாட்டிலும் இவ்விதமான பெரும் மகான் நடமாடுகின்றார் என்பதைப் பலர் அறிந்தனர்.

யோகசுவாமிகள் கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் சுற்றுப்புறங்களைக் கூட்டித் தூய்மைப்படுத்திக் கொண்டிருக்கையில் ஒரு சில வெளியூர்க் காரர்கள் அவரைப் பார்ப்பதற்காக வந்திருந்தார்கள். சுவாமிகள் அவர்களைக் கண்டதும் வேலையை இடையிலேயே நிறுத்திவிட்டுப் படலையைத் திறப்பதற்காக மெதுவாகச் சென்று கொண்டே "I am doing a coolies job. Why have you come to see a coolies?" என்று சொன்னார். இதன் உட்பொருள் யாதெனில் யான் ஒரு ஆத்மீக சுத்தீகரன், மனித சமுதாயத்திற்கிடையே ஆத்மீக உணர்வுகளை மறைத்திருக்கும் அழுக்குகளை நீக்குபவன் என்பதேயாகும். உள் மண்டபத்திற்குள் வந்தவர்களை அழைத்துச் சென்று உட்கார வைத்தார். தாமும் கால்களை மடக்கி உட்கார்ந்து தியானத்தில் ஆழ்ந்து விட்டார்.

தியான நிலையிலிருந்து உணர்வு நிலைக்குத் திரும்பியதும் தம்மைச் சுற்றிச் சூழ்ந்திருப்பவர்கள் மீது பார்வையைச் செலுத்தினார். அங்கு வந்திருந்தவருள் ஒருவர் தீபத்தை ஏற்றி வைத்து, மலர்களை நிலத்திலே வைத்துவிட்டு நெடுஞ்சாண்கிடையாக சுவாமிகளின் முன் பாதங்களை முத்தமிட்டவாறு வீழ்ந்து வணங்கினார்.

சுவாமிகள் திடீரென பலத்த சத்தத்துடன் பின்வருமாறு முழங்கினார். "Bloody fool, this is not an altar, are you worshipping me or are you worshipping yourself? do you think that you can find God by worshipping another?" இவ்வாறு சில தடவைகளில் நாகரீகமற்ற, குழந்தைத் தனமான பேச்சுவழக்கில் சுவாமிகள் பேசுவதுண்டு. அவ்வடியவர்களின் செயல்முறைகளை ஏற்றுக்கொள்ளாத வகையில் தமது கைகளை உயர்த்தியவாறு சுவாமிகள் அவரது இதயத்திற்கு நேராக சுட்டிக் காட்டி, "look! it is here! God is here! it is here!"என்று தெளிவுபடுத்தினார். இதையே தான் நற்சிந்தனையில் பின்வருமாறு உபதேசித்தார்.

**"...உன்னுள்ளே தெய்வீகத் தன்மையை உணர். நீயே உனக்குத் தலைவன். நீயே உன்னை நடத்துபவன். நீயே உலகத்திற்குச் சக்கராதிபதி. இந்தத் தூய எண்ணத்தை மறந்தால் இறப்புப் பிறப்பாகிய சமுத்திரத்தில் கிடந்து திக்குமுக்குப்படுவாய். எழுந்திரு, விழித்துக்கொள். உன்னை இனியொன்றும் வெற்றியெடுக்க முடியாது. விளக்கு எரிய வேண்டுமாயின் திரியும் எண்ணெயும் வேண்டும். நீ பிரகாசமடைய வேண்டினால் ஓம் தத் சத் என உணர்ச்சியோடு பிரார்தனை செய்."**

குருநாதர் செல்லப்பாச் சுவாமிகள் நோய்வாய்ப் பட்டிருந்த காலத்தில் அவரைப் பார்ப்பதற்காக யோக சுவாமிகள் சென்றிருந்தார். ஆனால் செல்லப்பாச் சுவாமிகளோ, "இங்கு நீ ஏன் வரவேண்டும்? இங்கு பார்ப்பதற்கு என்ன இருக்கின்றது. என்னை உன்னிற் காண்," என்று கூறித் திரும்பி விட்டார். இவ்வாறாக ஆசானும் சீடனும் ஆன்ம ஞானிகளாக சுடர்விட்டுப் பிரகாசித்தார்கள்.

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனத் தமது மெய்ஞ்ஞான உணர்வுகளை எல்லாம் திரட்டி நற்சிந்தனைகளாக நமக்குக் கொடுத்திருக்கிறார் யோக சுவாமிகள்.

சுவாமிகள் தமது அடியவர்கள் இருக்கும் இடமெங்கும் சென்று நல்லுபதேசம் செய்து, அவர்களுடன் தியானத்தில் ஆழ்ந்து, சாதனைகளிலும் போதனைகளிலும் ஈடுபட்டுத் தம் வாழ்நாளை அர்ப்பணித்து 24-03-1964 மகா சமாதி எய்தினார்கள்.

நற்சிந்தனை

சிவதொண்டு செய்வார்க்குச் சாந்தம் பொறுமையுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் திரிகால வுணர்ச்சியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் தீயபிணி நோயில்லை
சிவதொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார்.

சிவயோக சுவாமிகள் அன்பர்களின் அனுபவம்
சிவயோகர் சுவாமிகளின் திருவடி நம்பிக்கைப்பொறுப்பு.
(நன்றி : சிவதொண்டர் மலர் குரல்4 ஒலி 2)

## மாமன்றச் செய்திகள்

## அமரர் கலாநிதி முத்தையா கதிர்காமநாதன் அவர்களின் முதலாவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் நினைவுப் பேருரையும்



அமரர் கலாநிதி முத்தையா கதிர்காமநாதன

இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்தும், மாமன்றத்தின் முன்னைநாள் பொதுச் செயலாளர், அமரர், கலாநிதி முத்தையா கதிர்காமநாதன் அவர்களின் முதலாவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் நினைவுப் பேருரையும் தைத்திங்கள் 8ம் நாள் (21-1-2017) சனிக்கிழமை அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் காலை 10.30 மணிமுதல் இடம்பெற்றது.


அமரரின் ஞாபகார்த்தமாக, தமிழ்நாட்டு அறிஞரும் தமிழ் இலக்கியத்தில் முதுகலைமாணிப் பட்டம் பெற்ற, "ஞானபாரதி", திருக்கயிலைமணி", "கொங்குநாவுக்கரசன்", "சைவநெறிக்காவலன்" திரு. வெ. அனந்தகிருஷ்ணன் அவர்கள் "எமது மண்ணில் மேலும் வளரட்டும் எமது சமயம்" எனும் தொனிப்பொருளிலான நினைவுப்பேருரையினை நிகழ்த்தினார். இவர் உலகெங்கும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் சிறப்பம்சமாக அமரர் கலாநிதி முத்தையா கதிர்காமநாதன் அவர்களின் ஞாபகார்த்தமாக ஹொறண — திக்கேன தமிழ் மகா வித்தியாலயத்தின் சிவதொண்டர் அணியினைச் சோர்ந்த தேவையுடைய பத்து சிவதொண்டர்களுக்கு கல்விக்கான புலமைப்பரிசில் வழங்கப்பட்டது. மாமன்றத்தின் தலையாய பணிகளிலொன்றாகிய சிவதொண்டர் அணியில் உள்ள தேவையுள்ள — கல்வியைத் தொடர உதவி தேவைப்படும்- தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு தவணைதோறும் கல்விக்கான புலமைப்பரிசில் வழங்கப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## நாவலப்பிட்டி இந்து மன்றத்தின் 8வது ஆண்டு நிறைவும் "ஆன்மீக எழுச்சி விழாவும்"

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையில் மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமாகிய நாவலப்பிட்டி இந்து மன்றத்தின் 8வது ஆண்டு நிறைவை முன்னிட்டு "ஆன்மீக எழுச்சி விழா" கடந்த 28-01-2017 சனிக்கிழமை அன்று நாவலப்பிட்டி வெஸ்றஹோல் தமிழ் மகாவித்தியாலயத்தில் மன்றத் தலைவர் திரு.இராஜேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

முதன்மை அருளாளராக ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் பிரதம விருந்தினராக மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களும் கலந்து கொண்டனர். கௌரவ அதிதிகளாக பாடசாலை அதிபர் திரு.முத்தையா, சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக்குருக்கள், திரு.சின்னத்துரை தனபாலா, உட்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்வின் பிரதான அம்சமாக ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் அருளுரை இடம்பெற்றது. அத்துடன் வெஸ்றஹோல் தமிழ் வித்தியால்ய மாணவ மணவியரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றதுடன். அவர்களுக்கு இலவச அப்பியாசப்புத்தகங்கள் வழங்கப்பட்டது.



# MAHASIVARATRI

**By: B. S. Sarma**

Retired Principal of Hindu College, Colombo (Bambalapitiya)



**T**he great night of Lord Siva is celebrated on the fourteenth day of the waning moon of the month of Maasi (February- March). Skandhapuranam describes about four Sivarathris. The first one is nityaSivaratri (daily Sivaratri – every night). The second one is the MasaSivaratri which is observed on the Krishna paxashaturdasi (fourteenth moon day on the moons diminishing phase). The third one is the Magaprathamadisivaratri which is observed for the thirteen days starting from prathamatiti in the month Maga (Masi) and on the chaturdasi night the Lord is worshiped throughout the night. The fourth one is observed on the Masi (Maga) month Krishna paxachaturdasi. This is the one observed in a widespread manner. It is also called MahaSivaratri.

Off all the festivals that are dedicated and deemed to be holy to the Almighty, the MahaSivaratri festival is the most auspicious. Sivaratri festival dedicates the entire twenty-four hours of the day and night for the worship of Lord Siva. In the evening devotees generally go to a nearby temple and observe religious rituals. They remain awake without sleeping throughout that night. The devotees worship Siva the whole night, by chanting "AUM NamaSivaya" or singing hymns in praise of Lord Siva, such as Rudram, Chamakam, and the Shiva MahimnaStotra of Pushpadanta or Ravana's Siva TandavaSthotra are sung with great fervor and devotion. In many temples singing in eulogy of Lord Siva and listening to religious discourses interpreting the legends associated with the festival is very common on that day.

According to belief Lord Siva consumed the deity poison which emanated when the ocean of milk was churned by the Devas and Asuras, and this saved the universe. The worship that was offered to Siva on that night is being continued annually. The observance of MahaSivaratri begins with the fasting during the day, and worshipping, Almighty during the great night. MahaSivaratri rituals that takes place in a Siva temple includes pujas, abishekams (Holy bath), archanas (offering flowers by chanting religious hymns), encircling lighted lamps (deepaalankaras) etc. In the rituals, leaves of a forest tree Bilva (Aeglemarmelos) are traditionally used in the services.

**Significance of Sivratri**

- KannappaNayanar sacrificed his eyes and donated to them Lord Siva. This incident occurred on Shivarathri day. Arjuna procured
- Pasupabathaasthram on this holy day.
- Markandeya was rescued by Lord Shiva on this holy day.
- Parvathi was given half – portion of Lord of the Lords on this holy day.
- Beema's arrogance, ego was destroyed and he attained knowledge on this holy day.

During the 'abishekam the deity is anointed with materials like cow's milk, curd, ghee during the first 'yama' (first three hours of that night), with 'panchamirtha" (the five varities of fruits) during the second 'yama' (second three hours of that night), with hony during the third 'yama' (third three hours of that night), and perfumed religious water during the fourth 'yama' (last three hours of that night). Milk, honey, fruits, curd and ghee are symbolic of the five internal faculties which sustain the jiva namely mind (manas), intellect (buddhi), subconscious mind (chiththa), ego (ahankara) and emotion (hridhaya). The materials used for holy bath (abisheka) namely, milk, curd, ghee, honey, fruits sandle paste and kumkumam produce a high negative ion concentration on the idol (murthy) after the abishekams (Holy bath). The energy created by the vibrations with the high concentrated negative ion are absorbed through



nerve ending of the neuro sense organs inhaled by the devotees present during the puja ceremony in the sanctum sanctorum.

The Lingotbhava puja and abhisheka (holy bath) rituals which take place during midnight yama, are the most important aspect of the Sivaratri festival. The Lingotbhavamurthy (form of idol) is seen in the niche in the external side of the western direction of the sanctum sanctorium of Siva temples. This form of Lord Siva is seen to be depicted as emerging out of the Siva linga with the apex and the bottom of the form seen missing. That is the top portion of the head and the bottom portion of the legs is curved off, from the 'chandrasekaramurtham'. Lord Brahma is seen seated on swan in flight at the top and Lord Vishnu seated on a boar burrowing at the bottom of the Lingothbhavamurthy of Lord Siva. The doctrine of the Holy Trinity in the Lingotbhvamurthyshows the combination of Brahma, Vishnu, and Siva which deflects the conception of the creator, preserver and destroyer all are one and the same.

When we expect God to shower upon us the boon of supreme bliss, He naturally expects us to become worthy recipients of the boon. He expects us to be prepared, to sacrifice what is most dear to us. One of the dearest requirements for man is 'sleep', which is very essential for life. On the Sivaratri day if we are ready with a determined mind to sacrifice that dear object of ours, which is sleep that we enjoy with great pleasure, then we can call ourselves to be fit to receive boons from god. The main idea is to prepare us to sacrifice things most dear to us. In order to prove ourselves to be good receivers, we are awake throughout the night and the following day. We must not fall asleep on the following day.

**Mythology of Maha Sivaratri**

Once when everything in all the worlds got condensed into Lord Siva, in that darkness of nothing present, the mother Parvati worshipped Lord Siva in the Agamic way with great dedication. Lord Siva delighted by the prayer blessed Her. She asked for the do well to of all the creatures that in future whoever worships the Lord on the Sivaratri day with devotion; they should be blessed and should be given the ultimate liberation. The Pashupati granted that showing way for all of us to get blessed easily.

When Brahma and Vishnu fought between themselves as "who is the superme", Lord Siva appeared before them as a pillar of fire. They were not able to find the origin and end of that pillar. This day is now being celebrated as Thirukkaarthikai festival. Then Brahma and Vishnu repented for their mistake and prayed to Lord Siva for forgiving their sin worshiping the Siva lingam which is the form of the flame. In the night of Sivarathri day Lord Siva appeared before them and blessed them. Devotees pray to the God throughout the night of Sivarathri by performing Abisheka, chanting and other holy deeds. Every month in ' Krishna Pakshachathurdhasi' (fourteenth moonday) is called MasaSivarathri. The one that comes in the month of "Masi" (mid February to mid March) is called MahaSivarathri. This is considered as the most important vrata by the devotees.

The Linga form in which Lord Siva revealed Himself on MahaSivarathri is the Sivalinga which is considered the symbol of the formless all pervading Divine spirit which is discernible in all operations of the phenomenal universe. Linga is the sign of rhythmic creation, maintenance and destruction of the universe which expresses itself in different forms and periodically returns to its primal performal unity before being reborn.

There is story regarding keeping awake during the night of the Sivaratri. In the Shanti Parva of the Mahabharata, Bheeshma, whilst lying on the bed of arrows and discoursing on Dharma, refers to the observance of MahaSivaratri by king Chitrabhanu. In the past King Chitrabhanuof the Ikshvaku Empire, who ruled over the whole of Jambudvipa, was observing a fast with,his wife, on a MahaSivaratri day. The learned sage Ashtavakra came on a stopover to the court of the king. The sage inquired from the king Chitrabhanu why he was fasting on that day, for which the king told the sage that he had the gift of power of remembering the incidents of his earlier birth (peculiar power of recollecting PoorvaJanma). The king explained to the sage, that in his previous birth he was a hunter in Kasi( Varanasi). His name was Suswara. And his livelihood was to kill and sell birds and animals. The story goes as follows;

Once at Kasithe hunter went to the forest early in the morning to hunt. On that day he was roaming along the forest in search of animals. He had shot a deer in the evening on that day, but he had no time to take it home. He was overtaken by the darkness of night and he was unable to return home. The night at the thick forest was resounding with the roaring sounds of lions and other quadrupeds. He climbed on to a tree for safety. It happened that the tree he climbed was a bael tree. (Bilwa tree - Aeglemarmelos). He bundled up the animal that he had killed and tied it to a branch of the tree. As

he was tormented by hunger and thirst, he kept awake throughout the nightdue to fear of deadly wild animals. He shed profuse tears when he thought of his poor wife and children who were starving and anxiously waiting for his return. He engaged himself in plucking the bael (Aeglemarmelos) leaves and dropping them down onto the ground to pass away the time that night. When the day dawned he got down from the tree and saw a black solid colmnof granite stone like structure under the tree ad then he returned home and sold the deer. He bought some food for himself and his family. He was about to break his fast when a stranger came to him, begging for food. He welcomed the stranger with his pleasant melodious voice that he naturally had, and served the food to the stranger first, and then later took his food.

At the time of death, he saw two messengers of Lord Siva. They were sent down to conduct his soul to the abode of Lord Siva. He learnt for the first time, of the great merit that he had earned by the unconscious worship of Lord Siva during the night of Sivaratri. They told him there was a Sivalingam at the bottom of the tree. The leaves that he dropped fell on the Lingam. His tears which he had shed out of pure sorrow for his family fell onto that Sivlalingam and washed it, and he had fasted all day and all night. Thus he had unconsciously worshiped the Lord.

He lived in the abode of the Lord and enjoyed divine bliss for long ages. He is now reborn as Chitrabhanu. Fortunately for him it was a MahaSivaratri night, the tree he climbed on was a Bilwa tree, there was an ancient Sivalingam just below him, since he did not get any prey he was without any meals or water from the morning, He shed profuse tears, thinking of his poor wife and children who were starving and anxiously awaiting for his return, the drop of which had fallen on to the Sivalingam, as religious bath (Abhishekam). To keep himself awake he started plucking one leaf at a time and putting it down which, without his knowledge, fell on the Sivalinga just below him. The hunter, though unwittingly, fulfilled all the requirements of MahaSivarartriVirathamand was blessed with the Almighty.

**Spiritual Significance of the Ritual**

It is an allegory. The wild animals that the hunter fought with are envy, anger, greed, emotion, infatuation, passion, jealousy and hatred. The jungle is the fourfold mind, consisting of the subconscious mind, the intellect, the ego and the conscious mind. It is in the mind that these 'wild animals' roam about freely. They must be conquered or killed. The hunter was pursuing them. A real Yogi conquers these evil tendencies. So the hunter would have been a yogi. The name of the hunter was Suswara. The word 'Suswara', gives the meaning of melodious. The hunter had a pleasant melodious voice.

If a person practices Yama and Niyama and is ever conquering his evil tendencies, that person will develop definite external marks which show the features of a Yogi. The first marks are lightness of the body, health, steadiness, clearness of countenance and a pleasant voice.

This stage has been spoken on in detail in the Swetaswatara Upanishad. The hunter or the yogi had for many years practiced yoga and had reached the first stage. So he was named Suswara. His birthplace was Varanasi. The yogis mention the Ajna Chakra by the name Varanasi. This is the point midway between the eyebrows. It is regarded as the meeting place of the three nerve currents (Nadis), namely the Ida, Pingala and the Sushumna. A confident aspirant is instructed to concentrate on that particular point. That helps him to conquer his desires and evil qualities like envy, anger, greed, emotion, infatuation, passion, jealousy, hatred and so on. It is there that he gets a vision of the divine light within.

His getting on to the bael( Aeglemarmelos ) tree is extremely noteworthy. The bael tree has three leaves on one stalk. The tree represents the spinal column. The leaves are threefold. The leaf symbolize the Ida, Pingala and SushumnaNadis, which are the regions for the activity of the moon, the sun and fire respectively, These may be considered as the three eyes of Siva.

The climbing on to the bael tree is meant to represent the ascension of the Kundalini Shakti, the serpentine power, from the lowest nerve center called the Muladhara to the Ajna Chakra. That is the work of the Yogi.

The yogi was in the waking state when he began his meditation. He bundled up the animal that he had killed and tying them on a branch of the tree. he rested on the branch of that tree. That means he had fully conquered his thoughts and rendered them inactive. He had gone through the steps of Yama, Niyama, Pratyahara, etc.

He was practicing concentration and meditation while being on the tree. When he felt sleepy, it means that he was about to lose consciousness and go into deep sleep. So he would have been strong-minded himself to keep fully awake.

His wife and children were none other than the world. One who seeks the Grace of God must become an embodiment of love. He must have an all-embracing compassion . His shedding of tears is symbolical of his universal love. In Yoga, one cannot have illumination without Divine Grace. Without practicing universal love, one cannot win that Grace. One must distinguish one's own Self everywhere. The preliminary stage is to identify

one's own mind with the minds of all created beings. That is fellow-feeling or sympathy. Then one must rise above the limitations of the mind and merge it in the Self. That happens only in the stage of Samadhi, and never before that stage or earlier.

The activity of plucking and dropping the bael leaves was only to show that he had no extraneous thoughts. He was not even conscious of what he was doing. All his activity was confined to the three Ida, Pingala and the SushumnaNadis. The leaves of bael (Aeglemarmelos) tree represent the three Nadis. He was in fact in the second state, namely, the dream state, before he passed into the deep sleep state.

Keeping vigil the whole night means that he passed through the deep sleep state successfully. The dawning of day symbolizes the entrance into the Fourth state called 'Turiya' (super consciousness).

His coming down and seeing the Lingam means that in the Turiya state he saw the Siva Lingam or the mark of Siva in the form of the inner lights. In other words, he had the vision of the Lord. That was an indication to him that he would realize the supreme, eternal abode of Lord Siva in course of time.

The sight of the lights is only one step, albeit a difficult one. He goes home and feeds a stranger. A stranger is a person who has shown his sight before. The stranger is the hunter himself, transformed into a new personality.

The food was the likes and dislikes which he had killed the previous night. But he did not consume the whole of it. A little still remained. That was why he had to be reborn as king Chitrabhanu. Going to the world of Siva (Salokya) is not enough to prevent this. There are other stages besides Salokya. These are Samipya, Sarupya and finally Sayujya.

## மாமன்றச் செய்திகள்

### அகில இலங்கை இந்து மாமன்றத்தின் 'இந்து ஒளி' இருபதாவது ஆண்டுப்பூர்த்தி சிறப்பிதழ் வெளியீடும் 2017-2018 (பங்குனி) காலப்பகுதிக்கான கையடக்கப்பஞ்சாங்க வெளியீடும்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆன்மீக சஞ்சிகையான 'இந்து ஒளி' யின் 20வது ஆண்டு நிறைவு சிறப்பு மலர் வெளியீடு மற்றும் 2017-2018 (பங்குனி) காலப்பகுதிக்கான திருக்கணித-வாக்கிய பஞ்சாங்கங்களின் தொகுப்பாகிய கையடக்கப் பஞ்சாங்க வெளியீடு ஆகிய நிகழ்வுகள் தைப்பொங்கல் தினமாகிய தைத்திங்கள் முதலாம் நாள் (14-01-2017) அன்று மாமன்றத் தலைமையகத்தில் காலை 10.00 மணிமுதல் இடம்பெற்றது.

காலைவேளையில் இடம்பெற்ற பொங்கல் மற்றும் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

மாமன்றத் தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இவ் வைபவத்தில், அமெரிக்க ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் முன்னிலை வகித்து அருளுரை ஆற்றினார்.

இந்து ஒளி இருபதாவது ஆண்டுப் பூர்த்தி சிறப்பு மலரையும் கையடக்கப்பஞ்சாங்கத்தையும் பிரதம நீதியரசர் மாண்புமிகு கனகசபாபதி ஸ்ரீபவன் அவர்கள் வெளியிட, இந்து ஒளி சிறப்புமலரின் சிறப்புப் பிரதியை ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும், கையடக்கப் பஞ்சாங்கத்தின் சிறப்புப்பிரதியை நாவலர் நற்பணி மன்ற நிறுவுனர் திரு. ந. கருணைஆனந்தன் அவர்களும் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் சிவதொண்டர் அணியில் இணைந்துள்ள – கல்வியைத் தொடர்வதற்கு தேவையுடைய கொஃ விபுலானந்தா தமிழ் மகாவித்தியாலயத்தைச் சார்ந்த 10 மாணவர்களுக்கும், ஸ்ரீ ஜயவர்த்தனபுர இந்து வித்தியாலயத்தினைச் சார்ந்த 10 மாணவர்களுக்கும் மாண்புமிகு பிரதம நீதியரசர் அவர்களின் கரங்களால் அமரர் நீதியரசர் பொன். ஸ்ரீஸ்கந்தராஜா, அமரர் திரு.வி.எஸ்.துரைராஜா ஆகியோரின் ஞாபகார்த்தமாக புலமைப்பரிசில் வழங்கப்பட்டது.

மேலும் இந்து ஒளி சிறப்பு மலர் தொடர்பான ஆய்வுரையினை மீள்குடியேற்றம், புனரமைப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்கள் நிகழ்த்தினார்.

வழமைபோல இவ்வருடமும் மாமன்றத்தினால் அறநெறிப்பாடசாலை மாணவ மாணவியருக்கு இலவச அப்பியாசக் புத்தகங்களும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து பிரதம நீதியரசர் மாண்புமிகு க.ஸ்ரீபவன் அவர்களின் சிறப்புரையும் திரு. ந. கருணை ஆனந்தன் அவர்களின் ஊரையும் இடம்பெற்றன. மாமன்றப் பொதுச் செயலாளரின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றன.

இன்றைய நிகழ்விலே ஒன்றுகூடியிருக்கும் அனைவருக்கும் எனது அன்பான வணக்கங்கள். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அம்மையாரின் நினைவு நிகழ்விலே என்னை நினைவுப்பேருரை ஆற்ற அழைத்தமைக்கு முதலில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்த் தாய்க்குலம் அன்று, இன்று, நாளை எனும் பொருளில் உங்கள முன் நினைவுப்பேருரையினை நிகழ்த்தவுள்ளேன்.

எமது மக்களின் மனதில் ஆழமான காயமாக மாறிவிட்ட யுத்தத்தின் வடுக்களை எமது மனதிலும் எமது உடலில்



# தமிழ்த் தாய்க்குலம் அன்று, இன்று, நாளை


**திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா**

பா.உ - வன்னி மாவட்டம்


தினமும் சுமந்து வேதனையில் உழலும் எமது பெண்களின் நிலையை சற்றே நீங்கள் இந்த இடத்திலாவது சிந்தித்துப் பார்க்க வேண்டும். "அது எங்கோ வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் நடக்கிற சண்டை, நமக்கு என்ன" என்ற மனநிலையில் பார்த்த வெளியிடத் தமிழர்களும் இல்லாமலில்லை. 30 வருட யுத்தமானது எமது உரிமைக்கான போராட்டமாக ஆரம்பித்தது. அந்தந்தக் காலங்களில் பதவி வகித்த அரசு பலதடவை எமது மக்களை கூண்டோடு அழித்திருக்கிறது. அந்தக் கொடூர யுத்த காலத்தில் மக்கள் பட்ட துன்பங்கள் எத்தனை? எமது தாய்மார் தமது பிள்ளைகளுக்கான பால்மாவுக்காக, அரிசி பருப்பு முதலான அத்தியாவசியப் பொருட்களுக்காக எவ்வளவு கஷ்டப்பட்டார்கள். உணவு முதலியவற்றைக்கூட அரசு எமக்கு வழங்காது எம்மை அடக்கி வைத்திருந்து எம்மைப் பணியவைக்க முயற்சித்தது. மண்ணெண்ணெய் இல்லாத காலத்தில் சிக்கன விளக்கொன்றை கண்டுபிடித்தோம். பெற்றோல் இல்லாதபோது வாகனங்களை மண்ணெண்ணெயில் ஓட வைத்தோம். ஓர் உடுப்புத் துவைக்கின்ற சவர்க்காரத்திற்குக்கூட வழியில்லாத அந்த நேரத்திலே எமது பெண்கள் பனங்கழியில் உடுப்புத் துவைத்துத் தமது பிள்ளைகளை வளர்த்தெடுத்தார்கள். ஒருவரிடமும் நாம் கையேந்தவில்லை. தமிழர் என்ற தன்னுணர்வோடு, தன்மானத்தோடு வாழ்ந்தார்கள் எங்களது பெண்கள். இதுமட்டுமல்ல, அந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அன்று கௌரவமாக, கண்ணியமாக வாழ்ந்த எமது இனம், இந்த இறுதி யுத்த இடம்பெயர்வின் பின்பு ஏற்பட்ட மீள்குடியேற்றத்தின் பின் எங்கு சென்று கொண்டிருக்கின்றது? இன்று கண் முன்னே நாம் எங்கு போய்க்கொண்டிருக்கின்றோம்? இந்த ஒரு சூழல்தான் என்னை இந்த அரசிலில் கொண்டு வந்துவிட்டது. எந்த ஓர் அரசியல் நோக்கத்திற்காகவும் நான் அரசியலுக்குள் வரவில்லை. தலைவர் இங்கு உரையாற்றும்போது குறிப்பட்டதுபோல, நான் ஒரு திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றிக்கொண்டிருந்தேன். அந்த வன்னியிலே பிறந்து, குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில், அந்த யுத்தத்தை இறுதியாக சந்தித்த முல்லைத்தீவு மாவட்டத்திலே பிறந்து, வித்தியானந்தாக் கல்லூரியிலே கல்வி கற்று, அங்கேயே சேவையாற்றி, அங்கேயே வாழ்ந்து, இந்த இறுதி இடம்பெயர்வில் இறுதிவரை சென்று, இறுதி யுத்தத்திலே 'ஷெல்' வீச்சிலே எனது காலை இழந்து, மீண்டுவந்து நான் அந்த சமகாலத்திலே மக்களோடு வாழ்ந்துகொண்டிருக்கின்றபொழுது எமது இனம் போய்க் கொண்டிருக்கின்ற போக்குத்தான் என்னை இந்த அரசியலினுள் கொண்டுவந்து விட்டது. இன்னும் 10 வருட காலம் நான் அரச சேவையில் இருந்து ஓய்வுபெறுவதற்கு எனக்குக் காலம் இருந்தபொழுதும் அந்த அரச சேவைக் காலத்தில் ஒரு இலட்சம் ரூபாயை சம்பளமாக உழைக்கக்கூடிய சந்தர்ப்பம் இருந்தபொழுதும் அதற்கு விடைகொடுத்துவிட்டு, நான் இந்த அரசியலினுள் உட்புகுந்தது எந்தவோர் அரசியல் நோக்கத்திற்காகவும் அல்ல. ஒரு வருடம் கடந்த இந்தக் காலத்தில் எனது ஆத்ம திருப்தி ஏற்படுகின்ற வகையில் பல சேவைகளை நான் ஆற்றிக்கொண்டிருக்கின்றேன்.



என்னுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலே உங்களுக்குத் தெரியும் பலருக்கு தேர்தல் என்று வந்துவிட்டால், அந்த வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் விஞ்ஞாபனப் பட்டோலையொன்றை வெளியீடு செய்வார்கள். அந்த வகையில் எனக்கும் அவ்வாறு ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அந்த விஞ்ஞாபனத்தினை எனது நாட்குறிப்பினுள் கவனமாக வைத்திருக்கின்றேன். அதில், எமது பிள்ளைகள் கௌரவமாக வளர்க்கப்பட வேண்டும், கண்ணியமானவர்களாக உருவாக்கப்பட வேண்டும், இதற்கு அறநெறி வகுப்புக்கள் கிராமங்கள் தோறும் உருவாக்கப்பட வேண்டும், இந்துமாமன்றங்கள் பல்கிப் பெருகி சேவையாற்ற வேண்டுமென்ற விடயங்கள் பலவற்றை எனது விஞ்ஞாபனத்திலே குறிப்பிட்டிருந்தேன். அந்த வகையில், இந்த அகில இலங்கை இந்துமாமன்றத்தினருடன் எனக்குக் கிடைத்த தொடர்பு என்னுடைய நோக்கத்தை மேலும் வளர்த்துச் செல்வதற்கு அது மிகவும் வசதியாகவும் வாய்ப்பாகவும் எனக்கு அமைந்திருக்கின்றது.

கடந்த இரு வாரங்களுக்கு முன் சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா அவர்களின் சந்திப்பு முறிகண்டி ஆலயத்திலே எனக்கு ஏற்பட்டது. அப்பொழுது அவர், இங்கே ஏற்றப்பட்டிருக்கின்றது போன்ற 10 – 15 நந்திக் கொடிகளை எனக்குத் தந்திருந்தார். நேற்றும் எனது கிராமத்திலே ஒரு பிள்ளையார் ஆலயத்திலே ஓர் அறநெறி கட்டட திறப்புவிழா நடைபெற்றது. அதில் இந்த நந்திக் கொடி ஏற்றிவைக்கப்பட்டது. இதைவிட, ஒவ்வொரு பிரதேச செயலாளர்களோடும் தொடர்புகொண்டு இந்த அறநெறி வகுப்புக்கள் தற்பொழுது கிராமங்கள் ரீதியாக வளர்ச்சி பெற்று வருகின்றன. இதற்கு மேலாக முல்லைத்தீவு மாவட்டத்திலே ஓர் இந்துமாமன்ற ஒழுங்கமைப்பு இல்லாதது அவதானிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் இந்துமாமன்றம் அமைக்கப்பட்டு, கடந்த மாதம் மாவட்ட மட்ட இந்துமாமன்றம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டிருக்கின்றது. இன்று எமது தாய்க்குலம் போய்க்கொண்டிருக்கின்ற போக்குக்கு இந்த ஆன்மீக ரீதியான சேவைகள்தான் எமது இளசுகளை நல்லவர்களாக உருவாக்கும் என்பது எல்லோராலும் கண்டுகொள்ளப்பட்ட ஓர் உண்மையாக தற்போது இருக்கின்றது.

சங்கமருவிய காலத்திலே ஏற்பட்ட யுத்தம், அதனுடைய இழப்பு, அதனுடைய விரக்தி என்பவற்றின் ஒரு வெளிப்பாடுதான் கி.பி. 09ஆம் நூற்றாண்டு பல்லவர் காலம், அதைத் தொடர்ந்து வந்த சோழர் காலம். அவ்வாறான ஓர் ஆன்மீக சேவை, அவ்வாறான ஒரு பொறிமுறைகளை நாமும் வளர்த்துக்கொள்ள வேண்டிய தேவை இந்த வடக்கு, கிழக்குப் பகுதியைப் பொறுத்தவரையில் தற்போது இருக்கின்றது. புத்திஜீவிகள் கூடியிருக்கின்ற இந்த அவையிலே நான் தயவாக உங்களிடம் ஒரு கோரிக்கையை விடுக்கின்றேன், இந்த அகில இலங்கை இந்துமாமன்றம் செய்கின்ற சேவைகளை நான் நன்கு அறிவேன். அவற்றை நான் ஊடகங்கள் மூலமாகப் பார்த்துக்கொண்டிருக்கின்றேன். தற்போது தொலைபேசி மூலமாக அவர்களோடு இருந்த தொடர்பு நேரடியாகக் கிடைத்ததையிட்டு எல்லாம் வல்ல இறைவனுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எங்களுடைய வடக்கு, கிழக்குப் பகுதிகளிலே இந்த யுத்தம் தந்த விரக்தி, அதன் விளைவு பல்வேறு விதமான பாதிக்கப்பட்ட குழுக்களை உருவாக்கியிருக்கின்றது. 89,000க்கு மேற்பட்ட பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள் காணப்படுகின்றன. கணவனைக் கையிலே ஒப்படைத்துவிட்டு இன்றுவரை எங்கு என்று தேடிக்கொண்டிருக்கின்ற பெண்கள் இருக்கிறார்கள். அவர்கள் 'றோட்'டுக்கும் 'கோட்'டுக்குமாக அலைந்து நீதி தேடிக் கொண்டிருக்கிறார்கள். எவ்வாறு கண்ணகி தனது கணவன் குற்றமற்றவன் என்று வழக்குரைத்தாளோ அவ்வாறு தன்னுடைய கணவன் எங்கேயென்று தேடி நீதிமன்றங்களுக்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள் பிள்ளைகளைத் தொலைத்த தாய்மார் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிறார்கள் தாய், தந்தையைத் தொலைத்த பிள்ளைகள் அலைந்து கொண்டிருக்கிறார்கள் அங்க அவயவங்களை இழந்து படுக்கையிலேயே கிடந்து உழன்று கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் நேரடியாகக் கண்காணிக்கப்பட வேண்டியவர்கள். எங்களுடைய சமூகம், எங்களுடைய இனம், எங்களுடைய சமயம் சீரழிந்து போகின்றதென்றால், இந்த 7 வருட காலத்திலே அங்கு கொட்டப்பட்ட நிதி எங்களுடைய பாதிக்கப்பட்டவர்களை சரியாக சென்றடையாமல் இடையிலேயே சுரண்டப்பட்டதுதான் முக்கிய காரணம். இந்த நேரத்திலேதான் இந்த ஆன்மீக சேவை – ஆன்மீகப் பணி என்பது அங்கு காலத்தின் கட்டாயமாகத் தேவைப்படும் ஒன்றாகக் காணப்படுகின்றது. இந்தப் பெண்கள் இன்று சீரழிந்து போகின்றார்கள் என்றால், அங்கு பொருளாதாரத் தேவை ஓர் அடி அத்திவாரமாகக் காணப்படுகின்றது. அந்த உண்மையை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். பெண்களை பேசுவதாலோ, அவர்களைப் தூற்றுவதாலோ நீங்கள் கௌரவமற்றுப் போகின்றீர்கள், பிள்ளைகளைப் பிழையாக வளர்க்கின்றீர்கள் என்று கூறுவதாலோ நாம் பெரியவர்கள், அவர்கள் சிறியவர்கள், அவர்கள் கேவலமானவர்கள் என்ற முடிவு அல்ல. மேத்தாவினுடைய ஒரு கவிதையிலே அதன் முடிவிலே ஒரு வரி, அதை நான் நெடுக புரட்டிப் புரட்டி எனக்குள்ளே மனப்பாடம் செய்துகொள்வேன்.

"விடியும்பொழுது அவளின் கையில் காசு
அது தனது பிள்ளைக்கு கஞ்சி வார்ப்பதற்கு"

இந்த ஒரு நிலைதான் இன்று எமது வடக்கு, கிழக்குப் பகுதிகளில் காணப்படுகின்றது. தனது பிள்ளைக்கு ஒரு நேரக் கஞ்சிகூட வார்க்க முடியாமல் எத்தனை பெண்கள் அல்லாடுகிறார்கள் எத்தனை பெண்கள் தவிக்கின்றார்கள். சகலதையும் இழந்து வெறுங்கையோடு மீளக் குடியமர்ந்த பாதிக்கப்பட்ட எமது இந்தத் தொகுதியினருக்கு ஒரு பால் மாட்டை வழங்குவதாலோ, 15 கோழிகளை வழங்குவதனாலோ, ஒரு நீரிறைக்கும் இயந்திரத்தை வழங்குவதாலோ அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. வழங்கப்பட்ட கோழிக்குக் கோழித்தீன் வாங்குவதா? அவளுடைய பிள்ளைக்குப் பால்மா வாங்குவதா? அவளுடைய தேவை. கொடுத்த கோழி எங்கே?

கொடுத்த மாடு எங்கே? என்று அவளை மிரட்டுவதாலே அவளுடைய தேவை நிறைவு செய்யப்படப்போவதில்லை. இந்த சூழலை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஏன், இன்று இந்த சீரழிவு ஏற்படுகின்றது? ஏன், இந்த கலாசாரம் சீரழிந்து போகின்றது? இதை நாம் இப்படியே விட்டுச்செல்லப் போகின்றோமா? இதற்கு என்ன பொறிமுறையை வகுத்துக்கொள்ளப் போகின்றோம்? இதை நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய தேவையிருக்கின்றது.

இன்று எமது பிரதேசங்களிலே காணப்படுகின்ற தொலைக்காட்சி, தொலைபேசி ஆகிய இரண்டு கருவிகளும் எம்மைச் சீரழிக்கின்ற மிக முக்கிய கருவிகளாகக் காணப்படுகின்றது என்பது உண்மை. தொலைக்காட்சியில் பார்க்கக் கூடாதவற்றைப் பார்ப்பது, தொலைபேசியில் பொருத்தமற்ற தொடர்பாடல்கள் இவை வளர்ந்துகொண்டு செல்கின்றன. ஆனால், ஒவ்வொரு வீடாகப் போய் யார் தொலைக்காட்சி பார்க்கிறார்கள், தொலைபேசி எவ்வாறு பாவிக்கிறார்கள் என்று நாம் எவரும் அதனைக் கண்காணிக்க முடியாது. இந்த ஒட்டுமொத்த சூழலை பாதிக்கின்ற இந்த உபகரணங்களை எவ்வாறு சரியாகப் பயன்படுத்த வேண்டும்? அதற்கு என்ன பொறிமுறையை நாங்கள் கையாளப் போகின்றோம்? இதற்கு என்ன வழிமுறையை நாம் கையாளப் போகின்றோம்? வடபகுதி சீரழிந்து போகின்றது என்று சொல்லிக்கொண்டே, மேடைகளில் பேசிக்கொண்டே எங்களுடைய காலத்தைக் கழித்துவிடப் போகின்றோமா? அன்பானவர்களே! பெரியோர்களே! வடபகுதி நோக்கி உங்களது கரங்களை நீட்டுங்கள்! உங்களது சேவைகளை அங்கு பரந்து விரியச் செய்யுங்கள்!

வெறுமனே ஏ9 வீதி செப்பனிடப்பட்டிருப்பதாலும் கொழும்பிலிருந்து அல்லது புலம்பெயர் உறவுகள் வருகின்றபோது 'ஹயேஸ்' வாகனத்தில் ஏறி ஏ9 வீதியினூடாகப் போகின்றபோது கிளிநொச்சியைப் பார்க்கின்றார்கள், யாழ்ப்பாணத்தைப் பார்க்கின்றார்கள், குளிரூட்டப்பட்ட அறைகளிலே தங்குகிறார்கள், 'கேஎப்சி போன்ற கடைகள், 'சுப்பமார்க்கட்டுகள்', ஓடுகின்ற 'ரெயின்', செப்பனிடப்பட்ட வீதிகள், ஆம், வடபகுதி விருத்தியடைந்து விட்டது. அதுவல்ல அங்கிருக்கின்ற நிலை! அங்கு கிராமங்களை, பாதிக்கப்பட்டவர்களை நேரடியாகச் சென்று பார்க்க வேண்டும். அவர்களுடைய தேவைகள் என்ன? அவர்களுக்கு ஏன் அந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது? அன்று உண்ண உணவின்றி இருந்த எமது பெண்ணினம் ஏன் இன்று சீரழிந்து போகின்றது. அந்த யுத்த காலத்திலே நான் வாழ்ந்துகொண்டிருந்தவள் என்ற வகையிலே கூறுகின்றேன், அன்று 18 வயதுக் குமரிகூட நட்டநடு நிசியில் தெருவிலே போகமுடியும் உலாவ முடியும். இன்று பச்சைக் குழந்தையைக்கூட தொட்டிலிலே போட்டுவிட்டு ஒரு தாய் அயல் வீட்டுக்குச் செல்ல முடியாமல் இருக்கின்றது. ஏன், கேவலம், தந்தையுடன்கூட தனது பிள்ளையை வீட்டில் விட்டுவிட்டு ஒரு தாய் கூலிவேலைக்குச் செல்லமுடியாமல் இருக்கிறது அண்ணனுடன் அவசரத்திற்கு சைக்கிளில் ஏற்றிப் பாடசாலைக்கு அனுப்ப முடியாமல் இருக்கின்றது. நாங்கள் ஊடகங்களில் பார்க்கின்றோம், வித்தியாவினுடைய கதை என்ன சொல்லுகின்றது? அன்று நாங்கள் சிறுபிள்ளைகளாக, குமர்ப்பிள்ளைகளாக இருந்த நேரத்திலே வீதியிலே நாங்கள் பாடசாலைக்குச் செல்கின்றபொழுது ஒருவன் விசில் அடித்துவிட்டால் போதும், நியாயம் கேட்பதற்கு மாமன், மச்சான், தந்தை, சகோதரன் என்று எல்லோரும் கூடிவிடுவார்கள். இன்று பெண்களுக்கு என்ன நடக்கின்றது? இன்றிருக்கின்ற தொலைத்தொடர்பு சாதனங்கள், இந்த 'பேஸ்புக்', 'இன்ரநெற்', 'ஈமெயில்', தொலைபேசி என்பன இந்தப் பெண்களை எப்படிக் கேவலப்படுத்துகின்றன் அவர்களது அந்தரங்கங்களை எப்படி வெளிப்படுத்துகின்றன. இதற்கு என்ன நியாயம் கூறப்போகின்றோம்? இதை எப்படி நாங்கள் சீர்செய்யப்போகின்றோம்? இவ்வாறு விட்டுச் செல்லப்போகின்றோமா? இதற்குத்தான் இந்த ஆன்மீக சேவை அவர்களின் அடிப்படைத் தேவையாகவுள்ளது. அவர்களை விழுந்த இடத்திலிருந்து எவ்வாறு எழுந்து நிற்க வைப்பது? இதற்கு நாம் எல்லோரும் சேர்ந்து ஒரு பொறிமுறையை செயற்படுத்தத் தவறுவோமானால், மீண்டும் நாம் பாதாளக் குழிக்குள் விழுந்த பாவிகளாகி விடுவோம். உங்களை இருகரம் கூப்பிக் கேட்கின்றேன், இந்த சீரழிந்து சென்றுகொண்டிருக்கின்ற, இந்த யுத்தத்தின் விரக்தியிலேயிருக்கின்ற மக்களை, அன்று அந்த யுத்த பூமியிலே 'ஷெல்' வந்து விழலாம், 'கிபிர்' வந்து குண்டு போடலாம், ஆமிக்காரன் வந்து சுட்டுக்கொண்டு செல்லலாம் என்ற ஒரு பயம் தான் அங்கிருந்த தாய்மாரின் இதயங்களிலே இருந்தன. இன்று ஒவ்வொரு தாயினுடைய இதயத்திலும் நெருப்புத் தணல் வெந்துகொண்டிருக்கின்றது. ஒரு தாய் தனது மகனை எவ்வளவு தூரம் கல்வி கற்க வைக்க வேண்டும் - அவனை என்ஜினியர் ஆக்குவதா, டாக்டர் ஆக்குவதா, ஆசிரியர் ஆக்குவதா என்று கணக்குப் பார்ப்பதில் அவள் தனது கவனத்தைச் செலுத்தவில்லை. தனது பெண் பிள்ளைக்கு எவ்வளவு நகை சேர்த்து வைத்திருக்கின்றேன், எத்தனை ஏக்கர் காணி வைத்திருக்கின்றேன், வீடு வசதியாக வைத்திருக்கின்றேனா என்று கணக்குப் பார்ப்பதில்லை. தனது பிள்ளையைப் பிள்ளையாக வளர்த்தெடுக்கின்றேனா? என்பதைத்தான் ஒவ்வொரு தாயும் இன்று அங்கு கணக்குப் பார்த்துக்கொண்டிருக்கின்றாள். இந்தக் குமுறி எழுகின்ற, எரிந்து போகின்ற, வெந்துகொண்டிருக்கின்ற தாயினுடைய இதயத்துக்கு ஆகக்குறைந்தது நாம் ஒத்தடமாவது கொடுக்க வேண்டாமா? அதற்கு சில பொறிமுறைகளை வகுக்க வேண்டிய ஒரு காலத்தின் கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம். வடபகுதி, கிழக்குப் பகுதி, சீரழிந்து போகின்றது. அந்த சீரழிந்த சமுதாயத்தை நாம் என்ன செய்யப் போகின்றோம்? என்பதை நாம் எல்லோரும் ஒன்றுகூடி உதவிக்கரம் நீட்டவேண்டிய ஒரு தேவையிருக்கின்றது.

இன்று ஆரம்பிக்கப்படவிருக்கின்ற இந்து மகளிர் அங்குரார்ப்பணம் போல் எமது வட பகுதியிலும் பல மகளிர் அமைப்புக்கள் இருக்கின்றன. யுவசக்தி அமைப்பு, சங்கமி அமைப்பு, அமரா குழு என்று பல்வேறு விதமான குழுக்கள் பிரதேச மட்டம், கிராம மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம் என்று பல்கிப் பெருகி விரிந்து போயிருக்கின்றார்கள்.

அவர்களும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்றார்கள். ஆனால், அங்கே பாதிக்கப்பட்ட பெண்களுக்கு எவ்வளவு தூரம் நீதி கிடைக்கின்றது? என்பதையும் நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கணவனைத் தொலைத்துவிட்டு, கணவனைக் கையில் கொடுத்தவிட்டு நீதி கேட்டு பெண்கள் நீதிமன்றம் சென்றுகொண்டிருக்கிறார்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இது ஒரு புறம் இருக்கட்டும். இது தீர்க்க முடியாத பிரச்சினையாக இருக்கலாம். இது எமக்கு அப்பாற்பட்ட சக்தியாக இருக்கலாம். ஆனால், தன்னுடைய கணவரோடு கூடி வாழ முடியாமல் இருக்கின்றது. தன்னுடைய கணவரோடு மகளை விட்டுவிட்டு வேலைக்குச் செல்ல முடியாமலிருக்கின்றது, தன்னுடைய தந்தையால்தான் தன் பிள்ளைக்கு துஷ்பிரயோகம் நடைபெறுகின்றது, பாடசாலையில் ஆசிரியரால் தனியார் வகுப்புக்கு என்று அழைக்கின்ற நேரம்தான் எனது பெண் பிள்ளை துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றாள் என்று வெளியில் சொல்லமுடியாமல் பிள்ளையினுடைய எதிர்காலம், குடும்பத்தினுடைய கௌரவத்திற்காக எத்தனை தாய்மார் அங்கு வெந்துகொண்டிருக்கிறார்கள். வடபகுதியிலே வாழுகின்ற பெண்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் கௌரவ இராஜாங்க அமைச்சர் அவர்களும் நானும் பல்வேறுவிதமான மேடைகளில், அரங்குகளில் எங்களுடைய பெண்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் அவர்களுடைய பொருளாதாரம் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் பிள்ளைகளுடைய கல்வியிலே கவனஞ்செலுத்தப்பட வேண்டுமென்று அந்த அவையை நோக்கி நாம் கேட்கலாம். ஆனால், எங்களுடைய இனத்தை, எங்களுடைய மதத்தை, எங்களுடைய கலாசாரத்தை, எங்களுடைய விழுமியங்களைச் சீரழிக்கின்ற வகையில் அங்கு திரைமறைவிலே நடந்தேறிக் கொண்டிருக்கின்ற அந்த அநாகரிகமான செயல்களை எந்த மேடையிலே, எந்த அவையிலே நாம் வாய்விட்டுக் கேட்பது? இந்தக் கேவலங்களுக்கு அல்லது இந்த அநாகரிகங்களுக்கு நாமே சில பொறிமுறைகளை இந்தப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வகுத்துக்கொடுக்க வேண்டும். இதை நாம் இந்த நேரத்திலே செய்யத் தவறுவோமாக இருந்தால், நாம் மீண்டும் பிழை செய்தவர்கள் என்ற குற்றத்திற்கு உட்படுத்தப்பட்டுவிடுவோம். எனவே, இன்று இவ்வாறாக யுத்தத்திலே சீரழிந்துபோய், சிறகொடிந்துபோய், வெந்துகொண்டிருக்கின்ற எங்களுடைய சமூகத்துக்கு, அந்தப் பெண்களுக்கு, அந்தப் பிள்ளைகளுக்கு நாம் என்ன செய்யப் போகின்றோம்? முதலில் பெண்களுக்குப் பாதுகாப்பு வேண்டும். யாரிடமிருந்து பாதுகாப்பு வேண்டும்? தந்தையிடமிருந்து மகளுக்கு, அண்ணனிடமிருந்து சகோதரிக்கு, மாமனிடமிருந்து மருமகளுக்கு, ஆசிரியரிடமிருந்து பிள்ளைக்கு. இதை யாரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்? இதை வாய்விட்டு நாம் யாரிடமும் கேட்கமுடியாது. இதற்கு ஒரு சரியான வழிமுறையை நாம் தான் வகுத்துக்கொள்ள வேண்டும். இதற்குத்தான் இந்த அகில இலங்கை இந்துமாமன்றம் செய்துகொண்டிருக்கின்ற அளப்பரிய சேவையாகிய இந்த ஆன்மீகப் பயணம், இந்துமதத்துக்கான தொண்டு, பொருளாதார வளர்ச்சிக்கான உந்துதல்கள், வாழ்வாதார வளர்ச்சிக்கான ஊன்றுகோல்கள். உங்களுடைய இந்த சேவைகளை வடபகுதி நோக்கி விரைந்துசென்று தாருங்கள்! அவற்றை முன்னெடுத்துச் செல்வதற்கு அங்கு பிரதேச மட்டத்தில், மாவட்ட மட்டத்தில், மாகாண மட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற இதற்கேயுரிய குழுக்களைச் சந்தியுங்கள்! அவர்கள் ஏற்கெனவே இந்த வேலைகளில் அனுபவமானவர்களாக இருக்கிறார்கள். அவர்களோடு உங்களது கரங்களைக் கோர்த்துக் கொள்ளுங்கள். எம்மை, எமது இனத்தை மீண்டெழுந்து அவர்கள் கௌரவமாக, கண்ணியமாக வாழக்கூடிய வகையிலே வழிசமையுங்கள். இது ஒன்று.

நாளை நாம் இந்தப் பெண்களுக்குச் செய்ய வேண்டிய சேவைகளிலே எமது பெண்களை கல்வியறிவு உடையவர்களாக, தலைமைத்துவப் பண்பு பொருந்தியவர்களாக, தங்களுடைய பிரச்சினைகளை வெளியில் சொல்லக்கூடியவர்களாக ஆக்கக்கூடிய கல்வியறிவுள்ளவர்களாக அவர்களை ஆக்க வேண்டும். தனக்கு, தனது பிள்ளைக்கு ஓர் அச்சுறுத்தல் ஏற்பட்டுவிட்டால், அதை எங்கு முறையீடு செய்வதென்று தெரியாமலிருக்கின்ற அந்தப் பெண்களை நாம் வெளியில் கொண்டுவர வேண்டும். இந்த நிலையை உருவாக்குவதற்கும் விழிப்புணர்வுகள், இவர்களுக்கான விசேட கல்விகள், பாதிக்கப்பட்ட பெண்களுக்கான தலைமைத்துவப் பண்புகள் என்பன வகுத்துக் கொடுக்கப்பட வேண்டும். இதுமட்டுமல்ல, பெண்ணுக்கு ஓர் அசௌகரியம் ஏற்பட்டுவிட்டால் அதை எங்கு கூறுவதென்று தெரியாமல், கிராமப் புறங்களிலே எத்தனை பெண்கள் அல்லாடுகின்றார்கள். பெண்களுக்குப் பெண்தான் விரோதி என்ற உண்மையையும் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஒரு பிள்ளைக்கு அசௌகரியம் ஏற்பட்டுவிட்டால், ஒன்றைப் பத்தாகப் பெரிப்பிக்கின்ற பெண்களையும் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இந்த நிலையிலே நாளை எமது பெண் பிள்ளைகளை, எமது பெண் இனத்தை வளர்த்தெடுக்கக்கூடிய வகையிலே கிராமம் தோறும் நன்மதிப்புடைய, கௌரவமான, மானசீகமாக கிராம மட்டத்திலே மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெண்களை அடையாளம் காண வேண்டும். அவ்வாறான ஒரு மானசீகமான, நேர்மையுடைய, கட்டுப்பாடுடைய, கௌரவமான பெண்ணை நாம் அடையாளம் காண்போமானால், ஓர் ஏழைத் தாய் தனக்கு, தன்னுடைய பிள்ளைக்கு ஏற்பட்ட அசௌகரித்தை அந்தப் பெண்ணிடம் முறையீடு செய்வாள். எவ்வாறு இந்த அகில இலங்கை இந்துமாமன்றம் சமய ரீதியாக ஏற்படுகின்ற அசௌகரியங்களுக்கு 'கோட்'டுக்குச் செல்லாமல், 'றோட்'டுக்குச் செல்லாமல் அந்தப் பிரச்சினையைத் தம்முள்ளே தீர்த்துக்கொள்வதற்கான ஓர் அறிஞர் குழாத்தை வைத்திருக்கின்றதோ இவ்வாறான ஒரு பெண் குழாம் எமது பகுதிக்குத் தேவை. தனது பிள்ளையினுடைய எதிர்காலம், தனது குடும்பக் கௌரவம் இவற்றுக்காக பல பிரச்சினைகள் வெளியில் வருவதில்லை. ஒரு நம்பிக்கைக்குரிய ஒரு பெண் குழாம் அங்கு கண்டுபிடிக்கப்பட்டால், நிச்சயமாக அந்தப் பெண் அங்கு சென்று முறைப்பீடு செய்வாள். அதனூடாக அதற்குத் தீர்வு கிடைக்கும். இந்த ஒரு கைங்கரியத்தையும் நாம் செய்ய வேண்டிய ஒரு காலத்தின் கட்டாய தேவை எங்களுக்கு இருக்கிறது.

இதனைவிட, நான் அரசியல் பேசாது விட்டாலும் இந்த சமூக வளர்ச்சியிலே, எங்களது பொருளாதார விருத்தியிலே எங்களுடைய பெண்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதிலே அரசியலிலும் பெண்கள் உள்வாங்கப்பட வேண்டும். 50 வீதத்திற்கு மேற்பட்ட பெண்கள் இலங்கையில் இருக்கின்றபொழுது 225 உறுப்பினர்களில் 13 பெண் உறுப்பினர்கள் மட்டும் இலங்கைப் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள். அதிலும் இரண்டு பெண்கள் மட்டும்தான் தமிழ் பெண் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். பெண்களுக்குக் குரல் கொடுக்கக்கூடிய, கெட்டித்தனமான, கல்வியறிவுள்ள, துணிச்சலான, தங்களுடைய பெண்களின் பிரச்சினைகளை எடுத்துரைக்கக்கூடிய பெண்கள் அரசியலில் உள்வாங்கப்பட வேண்டும். 25 வீதம் கட்டாயமாக உள்ளூராட்சியிலே பெண்கள் உள்வாங்கப்பட வேண்டுமென்ற சட்டம், பாராளுமன்றத்திலே பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டுமென்ற சட்டம் உருவாக்கப்பட வேண்டும். 50 வீதம் பெண்களுக்குப் பாராளுமன்றத்திலே அரசியலிலே இடங்கொடுப்பதால் ஆண்கள் ஒன்றும் கெட்டுப் போகப்போவதில்லை. இந்த ஆண்களையே பெற்றுக்கொடுப்பது பெண்கள்தான். எதிர்காலத்தை உருவாக்குவதும் பெண்கள்தான். இதனால்தான்,

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே"

என்று கூறுவார்கள்.

"நூலைப் போல சேலை
தாயைப் போல பிள்ளை"

என்று கூறுவார்கள். இவற்றையெல்லாம் உங்களுக்கு நான் சொல்லிக்காட்டத் தேவையில்லை. எனவே இந்த அரசியலினுள் பெண்கள் உள்வருவதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அவர்கள் தம்மை தக்க வைத்துக்கொள்ளக்கூடிய வகையில் தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். சட்டங்கள் தெரிந்தவர்களாக, அறங்கள் தெரிந்தவர்களாக, நீதியானவர்களாக, சமூகத்திலே கௌரவமானவர்களாக, மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாக, தன்னுடைய குடும்பப் பின்னணியையும் ஏற்று நடப்பவளாக இருக்கவேண்டும்.

ஒரு செய்தியையும் நான் இங்கு கூறத்தான் வேண்டும். நான் ஒரு பெண் விடுதலையோடு தொடர்புடைய ஒரு அம்மாவை 2 மாதங்களுக்கு முன்பு சந்தித்தேன். அவர் இந்தப் பெண்களுக்கு நீதி கிடைக்க வேண்டும், நியாயம் கிடைக்க வேண்டுமென்பதில் மிகவும் ஆவேசமாகக் கதைப்பவர். நாங்கள் இருவரும் அளவளாவிக் கொண்டிருந்தவேளை அவர் ஒரு செய்தியை எனக்குக் கூறினார். "குடும்பக் கட்டமைப்புக்களை உடைத்தெறிந்துகொண்டு பெண்கள் அரசியலினுள் வரவேண்டும்" என்றார். இதை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டேன். நான் ஓர் அரசியல்வாதி என்ற வகையிலே இப்பொழுது கூறுகின்றேன், நான் எனது கணவருக்குச் செய்ய வேண்டிய பணியைச் செய்யாமலோ எனது பிள்ளைகளைச் சீரான முறையில் வளர்க்காமலோ மேடையில் ஏறிநின்று கலாசாரத்தைப் பற்றி, கண்ணியத்தைப் பற்றி, பிள்ளை வளர்ப்பைப் பற்றி, பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றிப் பேசினால் சமூகம், ஊரவர்கள் என்னைக் காறித் துப்புவார்கள் இது உண்மை! எனவே, அந்த அரசியலினுள் வருகின்ற பெண்ணானவள் தன்னுடைய குடும்பக் கௌரவத்தை, தன்னுடைய கடமையை, தன்னுடைய கௌவரத்தை விட்டுவிலகி, உடைத்தெறிந்துவிட்டு வந்து ஒருநாளும் அரசியல் செய்ய முடியாது அது சாத்தியப்படாது அவள் தூக்கியெறியப்படுவாள் அவளை சமூகம் ஏற்றுக்கொள்ளாது. இன்று நான் பெருமையோடு கூறுகின்றேன், இரண்டு ஆண் குழந்தைகளுக்குத் தாயாக - இரண்டு வாலிபர்களுக்குத் தாயாகிய நான் பிள்ளை வளர்ப்பைப் பற்றி ஒவ்வொரு சமூகக் கூட்டத்திலும் ஒவ்வொரு கிராம தரிசனங்களிலும் பேசுகின்றேன் என்றால், என்னுடைய பிள்ளைகள் கௌரவமானவர்களாக, ஒழுக்கமானவர்களாக இருப்பதனால்தான். நாளை எமது பெயரைச் சொல்லப்போவது நாங்கள் படித்த கல்வியோ, எங்களுக்கிருக்கின்ற சொத்தோ, எங்களுடைய பெருமைகளைப் பேசப்போவது அவை எதுவும் அல்ல. நாங்கள் விட்டுச் செல்லப் போகின்ற எமது பிள்ளைகள்தான் நாங்கள் தக்கவரோ தகாதவரோ என்பதை எடுத்துக்காட்டும்.

"தக்கார் தகவிலார் என்பது
அவரவர் எச்சத்தாற் காணப்படும்"

ஆகவே, நீங்கள் எல்லோரும் எனக்கு தாய்க்குச் சமனானவர்கள், முதிர்ந்தவர்கள், அனுபவசாலிகள், அறிவாளிகள். அப்படிப்பட்ட நீங்கள் தகுதியான பெண்களை அரசியலில் உள்வருவதற்கு வழிசமைத்துத் தர வேண்டும். கௌரவ இராஜாங்க அமைச்சர் விஜயகலாவோ, பாராளுமன்ற உறுப்பினர் சாந்தியோ குரல் கொடுப்பதால் பெண்களுக்கு நீதி கிடைக்கப் போவதில்லை. இன்று நீதிமன்றங்களுக்கு ஏறித் திரிகின்ற எத்தனை பெண்கள் ஏமாந்து போகின்றார்கள். சட்டம் இந்த நீதிமன்றத்தில் பெண்களின் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு என்ன வழிவகுத்து வைத்திருக்கின்றது. ஒரு பெண் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுவிட்டேனென்று நீதிகேட்டு, வழக்குத் தொடுத்து நீதிமன்றத்திற்குச் சென்றால் அங்கு சட்டத்தரணி என்ன கேள்விகள் கேட்கின்றார்? அந்தப் பெண்ணை நீதிமன்றத்திலே வைத்து, எங்கு தொட்டான்? எப்பொழுது தொட்டான்? எப்படித் தொட்டான்? இவ்வாறாறெனில், அந்தப் பெண்ணினத்திற்கு நீதி கிடைக்குமா? எந்தப் பெண் நீதிமன்றத்திற்கு செல்ல முனைவாள்? ஒரு பெண் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டாள் என்பதை அவள் அந்த ஆணாலே கருவுற்றாள் என்று 'டீஎன்ஏ' 'ரெஸ்'டின் மூலம் நிரூபிக்கப்படும்பொழுதுதான் அவனுக்குத் தண்டனை கிடைக்கின்றது. அல்லது அவள் ஆதாரபூர்வமாக, படங்கள் மூலமாக அல்லது குரல்வழியான் பதிவுகள் மூலமாக ஏதாவது அந்த நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்தால் மட்டுமே அவனுக்குத் தண்டனை கிடைக்கின்றது. இது ஓர் ஏழைப் பெண்ணால் ஆகுமா? இது ஒரு கையால் ஆகாத பெண்ணால் ஆகுமா? எங்கே நீதி கிடைக்கின்றது எங்கள் பெண்களுக்கு? ஆகவே, அந்தப் பெண்களின் பிரச்சினைகள் 'கோடு' ஏறக்கூடாது.

வழக்கேறக்கூடாது, எங்கள் தாய்க் குலத்தை நாம் வழக்குக்கு இழுக்கக்கூடாது. அவர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களை, இன்னல்களை இந்த இந்துமாமன்றம் எவ்வாறு சமயத்தையும் தமிழையும் வளர்த்தெடுப்பதற்கு இந்தக் கோயில்களுக்குள்ளே, கோயில் நிர்வாகங்களுக்குள்ளே, ஆலய பரிபாலன சபைக்குள்ளே இருக்கின்ற பிணக்குகளை தம்மட்டத்திலே தீர்த்து வைக்கின்றதோ அவ்வாறு நொந்துபோயிருக்கின்ற, விரக்தியின் விளிம்பிலிருக்கின்ற எங்களது பெண்களின் பிரச்சினையையும் தீர்ப்பதற்கு பெண் குழாம்களை அமைத்துத் தாருங்கள் என்பதையும் நான் தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

இலக்கியங்களிலே, வரலாறுகளிலே மண்தோன்றி கல்தோன்றாக் காலத்தின் முன்பே நாம் கற்றுத் தேர்ந்த வீர தீரப் பெண்கள் வாழ்ந்து கண்முன்னே போர்க்களம் சென்று வீரம் பேசிய பெண்கள் இருந்தார்கள். இன்று 100 வீதமான பெண்களையும் ஒரே வட்டத்திற்குள் கொண்டுவந்து சேர்க்கவில்லை. எமக்குப் பெருமை சேர்த்த - அரசியல் ரீதியாக, சட்ட ரீதியாக, நிர்வாக ரீதியாக, வைத்திய ரீதியாக - பெண்களும் எம்மிடையே வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், குறிப்பாக நொந்துபோன, யுத்தத்திலே ஏன் இவையெல்லாவற்றையும் இழந்தோம் என்றுகூடத் தெரியாமல், இழந்தவற்றுக்குக்கூட ஒரு பரிகாரம் கிடைக்காமல், தொடர்ந்து எல்லாவிதமான அடக்குமுறைகளினுள்ளும் அதிலிருந்து மீண்டெழுந்துகொள்ள முடியாமலிருக்கின்ற பெண்களைக் கரிசனையோடு நாம் பார்க்கத் தவறுவோமானால் நாம் அடுத்த ஒரு சந்ததியை எவ்வாறு உருவாக்கப் போகின்றோம்?

இன்று பார்த்தீர்களானால் வடபகுதியிலே எமது இளைஞர்களிடையே வாள் வெட்டு, குத்துச் சண்டை, கொலை, கொள்ளை என்பன பரந்து, விரிந்து, தலைவிரித்தாடுகின்றன. இவற்றுக்குப் பல காரணங்களில் ஒரு காரணம் நான் ஏற்கெனவே கூறிய தொலைக்காட்சி. நான் நித்திரைக்குச் செல்லும்போது எனது ஆச்சியின் மடியிலே படுப்பேன். அவர், அறம் வெல்லும், பாவம் தோற்கும், உண்மை நிலைக்கும், பணிவு வேண்டும், சத்தியம் நிலைக்கும் என்ற கதைகளைச் சொல்வார். அவற்றைக் கேட்டுத்தான் நான் நித்திரைக்குச் செல்வேன். பொழுது சாய்கின்ற நேரத்திலே சுவாமி அறையிலே விளக்கேற்றி, திருநீறு பூசி, தேவாரம் பாடி, கும்பிட்டுவிட்டு படிப்பதற்கு மேசையிலே உட்காருவோம். இன்று எமது பிள்ளைகள் என்ன செய்கிறார்கள்? அந்தக் குடும்பச் சூழல் எத்தனை வீதம் இப்பொழுது இருக்கின்றது என்று நாங்கள் கண்டுகொள்ளுகின்றோம். அம்மாவுக்கு தொலைக்காட்சியிலே நாடகம் பார்க்க வேண்டும், மகனுக்கு தொலைக்காட்சியிலே 'கிரிக்கெட்' பார்க்க வேண்டும். பேரப்பிள்ளைக்கு தொலைக்காட்சியிலே சுட்டி நாடகம் பார்க்க வேண்டும். இங்கே வந்துவிடும் பிரச்சினை. நித்திரைக்குப் போகும்போது எமது இளைஞர்கள், யுவதிகள் எதைப் பார்க்கின்றார்கள்? இந்தத் தொலைக்காட்சி நாடகங்கள் எங்களுக்கு என்னத்தைப் போதிக்கின்றன? எப்படிக் களவெடுப்பது, எப்படிப் பொய் சொல்வது, எப்படித் தாயை ஏமாற்றிவிட்டுக் காதலிப்பது, எப்படி காதலித்தவளை ஏமாற்றி விடுவது, எப்படி மாமியார் மருமகள் சண்டை, எப்படி கணவன் மனைவியை விட்டுவிட்டுப் பிழையான வழியில் செல்வது. இவற்றைத் தானே போதிக்கின்றன. தொலைக்காட்சியிலே எங்கள் பெரியவர்களின் ஏதாவது கதாபிரசங்கமோ, ஏதாவது வரலாறு சம்பந்தமாகவோ நடைபெற்றால் அதை நிற்பாட்டு, அவன் ஏதோ அலட்டுகின்றான் என்று உடனே 'சனலை' மாற்றுவது. இது எங்களுடைய வீடுகளிலே எங்களுடைய பிரதேசங்களிலே அன்றாடம் நடைபெற்றுக்கொண்டிருப்பவை. வந்தாரை வரவேற்கின்ற எமது இல்லங்களிலே வந்தவரை முகஞ்சுழிக்கின்ற ஒரு நிலையை இன்று தொலைக்காட்சி உருவாக்கியிருக்கின்றது. உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதை இப்படியே விடப்போகின்றோமா? இதற்கு மாற்றுவழி என்ன? இதற்குத் தான் கிராம ரீதியான அறநெறி வகுப்புக்கள். என்னைப் பொறுத்தவரையில் இவ்வாறான ஐயாக்கள் போன்று வேட்டி உடுத்து, தலை நரைத்த, திருநீறு பூசிய இவர்கள் போன்று பஞ்சபுராணம் ஓதுபவர்களுக்கு வழியில்லாமல் போய்விடுமோ என்ற ஓர் ஏக்கம் என்னுள்ளே புதைந்திருக்கின்றது. ஆனால், இந்த ஒரு வருட காலத்தின் பின்பு அறநெறி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்பு கோயில்களுக்குப் பூசைக்குப் போனால் சிறிய பிள்ளைகள் வேட்டியோடும், நீட்டுப் பாவாடை சட்டையோடும் வந்து தேவாரம் பாடும்போது எனது மனம் குளிர்ந்து போகின்றது. இதுதான் எங்களுக்குத் தேவை. இவற்றைத்தான் நாம் வளர்த்தெடுக்க வேண்டும்.

எனவே, இந்த வட பகுதியிலே உங்களது கருணைக் கரங்களை நீட்டி எம்மவரை ஒன்றிணைக்க வேண்டும். அது பொருளாதார ரீதியாக, சமூக ரீதியாக, விழிப்பூட்டல் ரீதியாக, அவர்களுக்கு நீதி வழங்குகின்ற ரீதியாக, நியாயம் வழங்குகின்ற ரீதியாக, அவர்களது நொந்துபோயிருக்கின்ற மனங்களைத் தேற்றுகின்ற வகையிலே ஒன்றுபட்டு, நாங்கள் எல்லோரும் ஒருமித்து, சில பொறிமுறைகளை வகுத்து, அவர்களுக்கூடாகவே அவர்களுக்கு நியாயம் வழங்குகின்ற, நீதி வழங்குகின்ற குழுக்களை அமைத்து கிராம மட்டத்திலிருந்து குடும்ப மட்டத்திலிருந்து செயற்படுத்த வேண்டும். நாம் ஒவ்வொரு குடும்பமாகச் சென்று பார்க்க முடியாது. தாய் என்ன செய்கிறாள், பிள்ளை என்ன செய்கிறது, பேர்த்தியார் என்ன செய்கிறார் என்பதை நாம் பார்க்க முடியாது. அவர்களாகவே மாற வேண்டும். அவர்களது மனநிலை மாற வேண்டும். அவர்களாகவே மாறுகின்ற வகையில் அந்தச் சூழலை ஏற்படுத்தக்கூடிய வகையிலே நாம் சில வரன்முறைகளை செய்கின்றபொழுதுதான் எம்மோடு சமகாலத்திலே வாழ்ந்து எமக்கு ஓர் உந்துசக்தியாக இருந்த வீரப்பெண், சமூக சேவகி, சமய சேவகி ஆகிய எங்களது சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு நாம் செய்கின்ற நன்றிக் கடனாக இருக்கும் என்று கேட்டு, இவ்வாறான ஒரு பெரியோர் கூடிய சபையிலே என்னையும் அழைத்து ஒரு பேருரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் தந்தமைக்கு மீண்டும் நன்றிகூறி, எனது உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி. வணக்கம்!

# ஆலய நிர்மான முறையில் ராஜகோபுரங்களின் முக்கியத்துவம்


**கலாநிதி. ம.பாலகைலாசநாதசர்மா**
சிரேஷ்ட விரிவுரையாளர்
சமஸ்கிருதத் துறை, கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


ஆலய அமைப்பு, விமானங்களின் அமைப்பு (ஸ்தூபி), ராஜகோபுரங்களின் அமைப்பு பற்றிய விபரங்கள் சிறப்பாக சிவாகமங்களிலும், சிற்ப சாஸ்திரங்களிலும் தெளிவாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக காமிகாகமம், காரணாகமம், மாநசாரம் போன்ற நூல்களில் தனிப்பகுதிகளாக கோபுரநிர்ணயம் பற்றிய பகுதியில் காணப்படுகிறது.


மாநசாரம் எனும் நூலில் ஐவகைப் பிரகாரங்களில் கோவிலுக்கு முற்பகுதிகளில் (பூர்வம், தஷணம், பச்சிமம், உத்திரம்) ஆகிய நான்கு திசைகளிலும் 2, 3, 5, 7, 9 எனும் பிரகாரங்களிலும் ராஜகோபுரம் அமைக்கப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. ராஜகோபுரங்கள் அமையப் பெறும் போது சரியான திசைகளிலும் பிரதானவிமானம், (மூலமூர்த்தி ஸ்தூபி) மூலவர், மூலஸ்தான வாயிற்பிரமாணம் என்பவற்றோடும் பிரகாரங்களின் விஸ்தாரணத்திற்கேற்பவும் ராஜகோபுரங்களின் உயரத்திற்கேற்பவும் அஸ்திவாரத்தின் உறுதித் தன்மைக்கேற்பவும் ராஜகோபுரங்கள் அமைக்கப்பட வேண்டும்.

உதாரணமாக ராஜகோபுர உயரத்தின் மூன்றில் ஒருபகுதி அஸ்திவார ஆழமும் வியாளவரிவட்டத்தின் அகலத்திற்கேற்பவும் அஸ்திவாரத்தின் விஸ்திரணம் அமையவேண்டும். இவ்வாறு அமைக்கப்பெறும் ராஜகோபுரங்கள் துவாரசோபை, துவாரசாலை, துவாரபிசாதம், துவாரஹம்யம், மஹாமர்யாதை என ஐவகையாக அழைக்கப்பட்டு மஹாகோபுரம், ராஜகோபுரம் என குறிக்கப்படுகின்றது.

ராஜகோபுரங்கள் மேற்குறிப்பிட்டபடி ஆலய ஸ்தாபனத்தின் திசைகளுக்கு அமையவே (கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு) அவசியம் அமைக்கப்பட வேண்டும்.

"த்வாரசோபாதிமானம் ஸ்யாத் கோபுராந்தம் விசாலத்"

திசைகளில் அமையும் வாயில்களின் பிரமாணத்திற்கேற்ப (சரியான திசைகளிலும், இடங்களிலும்) ராஜகோபுரங்களின் விஸ்தாரம் அமைக்கப்பட வேண்டும்.



கோபுரத்தின் அலங்காரத்தைச் சாலையின் அலங்காரம் போற் செய்யவேண்டும். சபையின் ஆதாரம் போன்ற சிரோகிரகத்தோடு கூடினதாயும், சாலையின் போன்ற சிரோகிரகத்தின் வேலையை யுடையதாயும், மண்டபத்தின் ஆகாரத்தோடு கூடியதாயும், மேல்மெத்தையால் அலங்கரிக்கப்பட்டதாயும், முன்பாகத்தில் நடையோடு கூடினதாயும், பிரகாரத்தின் மத்தியில் மெத்தையைக் கோபுரத்தினது விஸ்தாரத்தின் மூன்று பாகத்திலிருந்து ஓர்பாகம், நாலிலோர்பாகம் ஐந்திலோர்பாகம் இருக்கவேண்டும். கோபுரங்களின் வெளிவருகிற வழி பிராகாரத்திற்கு வெளியில் இருக்க வேண்டும். கோபுரமும் ராணுவஸ்தானமும் மூலவாஸ்துவின் பார்வையுடையதாயிருக்க வேண்டும்.



கோபுரஅமைப்பில், கர்ப்பக்கிருக அளவுக்கும் திருக்கோயிலின் நீள அகல உயரங்களுக்கும் பொருத்தமாகவே திருக்கோபுரம் அமையவேண்டுமென்பது சிவாகமவிதி. கோபுரநிலையில் இரு அமைப்புக்கள் உள்ளன. கோபுரத்தின் நான்கு மூலைக் கோணங்களும் நேர்கோடாக அமைவது ஒருவகை. அம்மூலைக் கோணங்கள் நேர்கோட்டிலமையாது உள்ளே சற்று வளைந்து அமைவது இன்னொருவகை. திருக்கோயிலின் தன்மைக்கும் வளத்திற்கும் ஏற்ப கோபுரங்களின் உயர அளவுகள் அமைவதும் குறிப்பிடத்தக்கது.

திருக்கோயில்களின் தலைவாயிலில் வானளாவ உயர்ந்து விளங்கும் கோபுரங்கள் தூலலிங்கம் என்ற சிறப்புப் பெறுவன. கோயிலின் கம்பீரத் தோற்றத்திற்கும் வனப்பிற்கும் கோபுரங்களே காரணமாகின்றன. 'கோலக் கோபுரக் கோரணஞ்சூழாக் கால்களாற் பயனென்' என்ற நாவுக்கரசரின் வாக்கு கோபுரத்தின் மகிமையைக் கூறுகின்றது. கோபுரத்துடன் கூடி விளங்கும் கோயில்தான் எல்லா நிலைகளிலும் நிறைவுபெற்றதொன்றாக அமையும். எனவே கோபுரம் கோயில்களுக்குரிய இன்றியமையாத அங்கமாக விளங்குகின்றது. கலைச்சிறப்பும் தத்துவமகிமையும் கொண்டு மிளிர்வன கோபுரங்கள்.

திருக்கோயிலில், கர்ப்பக்கிரகம் விமானம், மண்டபங்கள் பிரகாரம் போன்ற பல்வகை அம்சங்களும் சிறப்படைவதற்குத் தலைவாயிலில் சிறந்துவிளங்கும் கோபுரமே துணைசெய்கின்றது. எனவே இக்காரணம் பற்றியே பண்டைய நாட்களில் மன்னர்கள் தாம் எழுப்பிய கோவில்களில் கோபுரங்களையும் சிறப்பாக அமைத்தனர்.

கோபுரத்தின் அமைப்பிலே சிறந்ததொரு தத்துவம் உள்ளது. பூமியிலே ஆழ்ந்தும் அகன்றும் ஆகாய வெளியிலே உயர்ந்தும் விளங்குவது கோபுரமாகும். மூலத்தானத்துள் அமைந்து விளங்கும் சூக்குமலிங்கம் நித்திய நைமித்திய கிரியைகள் நிகழும்போது அடியார்கள் உள்ளேநின்று வழிபடுவதற்குரியது. சூக்குமலிங்கம் ஒருகோயிலில் எழுந்தருளி அருள்பாலிக்கும் மூர்த்தியை அறிந்துகொள்ள ஏதுவாகின்றது. கொடிமரத்தடியில் அமைந்து விளங்குவது பத்திரலிங்கம் ஆனால் தூலலிங்கம் எனச் சிறப்புப்பெறும் கோபுரமோ துலாம்பாரமாகத் தூரத்தேநின்று கைதொழுது வழிபடுவதற்கும், வசதிகுறைவான காலங்களில் கோயில் தரிசனம் செய்யமுடியாத வேளைகளில் வழிபடுவதற்கும் பெருந் துணைபுரிவது ராஜகோபுரமாகும். இவ்வாறு சகலநிலைகளிலும் சிறப்புப் பெறும் கோபுரத்தை ராஜகோபுரம் என்றழைப்பர். இறைவனது சாந்நித்யத்தை எடுத்துக்காட்டி விளங்கும்.

தென்னாட்டிலும் ஈழத்திலும் காலங்காலமாக எழுச்சி பெற்றுவரும் திருக்கோயில்களில் ராஜகோபுரங்கள் எமது பண்பாட்டுச் சின்னமாக விளங்கி உலகளாவிய நிலையில் எமது பண்பாட்டுப் பெருமையை பறைசாற்றி நிற்கின்றன.

தமிழ்நாட்டிலே உள்ள கோயில்களில் கோபுரங்கள்தான் அடியார்களை வரவேற்று நிற்கின்றன. கோபுரத்தை தரிசித்த மாத்திரத்தில் பரம்பொருளின் தெய்வீகப் பெருமை எமது உள்ளங்களில் குடிகொண்டுவிடுகின்றது. கோயில் என்றால் கோபுரமே எனக் கூறக்கூடிய அளவுக்குத் தமிழகத்தில் உள்ளகோயில்கள் தோறும் வானளாவாக ஓங்கிநிற்கும் வகையில் கோபுரங்கள் எடுக்கப்பட்டுள்ளன. எனவே கோயில் எழுந்த சூழலில் தெய்வீகமணம் கமழச் செய்வனவாக இவை விளங்குகின்றன.

கோயில் வாயிலை அலங்கரித்து நிற்கும் கட்டிட அமைப்பாகிய கோபுரத்தின் வரலாறு சுவையானதொன்று. தமிழகத்திலே கோயில் கட்டிடக்கலை சிறப்பாகப் பல்லவர் காலத்தில் இருந்துதான் மேன்மையடைகின்றது. மிகவும் தொன்மையான கோபுரம் எனக் குறிப்பிடதக்க கோபுரம் பல்லவ மன்னன் இராஜசிம்மன் எடுத்த கோயில்களில்தான் காணப்படுவதாக அறிஞர் கருதுவர். காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும் மாமல்லபுரத்திலும் எழுந்த கடற்கரை கோயிலிலும் மிகச்சிறிய கோபுரங்கள் உள்ளன. இக்காலக் கோயிற் கட்டிட அமைப்பில் நாம் காணும் சிறப்பம்சம் யாதெனில் கருவறையை அலங்கரிக்கும் விமானம் உயரமாகவும், கோபுரம் மிகச் சிறியதாகவும் அமைந்து விளங்குவன. வாயிலில் மேற்பகுதியில் ஒருசிறிய துவாரவாசலை மட்டும் கொண்டு காணப்படக்கூடியது.

பல்லவ மன்னர்களை அடுத்து கோயிற் திருப்பணிகளில் தம்மைச் சிறப்பாக ஈடுபடுத்திய பேரரசர்கள் நிர்மாணித்த கோயில்களில் கோபுரங்கள் விமானங்களைவிடச் சிறியவையாகக் காணப்பட்டன. சில கோபுரங்களின் கீழ்ப்பகுதி கருங்கல்லாலும் மேற்பகுதி செங்கல்லாலும் கட்டப்பட்டு விளங்குகின்றன. சோழர் காலத்தில் இராஜராஜசோழனின் காலம் சிறப்புவாய்ந்தது. இவன் எடுப்பித்த தஞ்சைப்பெருங்கோவில் ஒரு புதிய மரபைக் கொண்டு விளங்கியது. இவனுடைய காலத்திலும் கருவறையின் மேல் உள்ள விமானம் உயர்த்தியே கட்டப்பட்டதாயினும் அதன் முன்னர் இரண்டு கோபுரங்கள் உள்ளன. வெளியில் உள்ளது உயரமாகவும் உள்ளே உள்ளது உயரம் குறைவாகவும் கட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கோயில் கோபுரங்கள் திருவாயில் என்றபெயர் பெற்றன. விமானத்தின் முன்னர் இரு கோபுரங்களை அமைப்பது சோழர் காலத்தில் முக்கிய மரபாக இருந்தது. இரண்டாம் குலோத்துங்கசோழன் காலத்திலிருந்து கோயிலின் நான்குபுரங்கலிலும் நான்கு கோபுரங்கள் எழுப்பப்பெறும் மரபும் தொடங்கியது. எடுத்துக்காட்டாக தில்லையில் நான்குபுரங்களிலும் நான்கு கோபுரங்கள் 12ம்,13ம், நூற்றாண்டில் கட்டப்பட்டன. எனவே எழுநிலைக்கோபுரம் என்ற சிறப்புப் பெயர் ஏற்படலாயிற்று. அடிப்பகுதி அகன்று பரந்து விளங்கிய நிலையில் இக்கோபுரங்கள் சுமார் 100 அடி உயரம் எழுந்தன.

இத்தகைய கோபுரங்களில் கீழ்ப்பகுதியில் பலபரிவார தெய்வங்களின் உருவங்களும் மேற்பகுதியில் பிரதான தெய்வத்தின் பல தோற்றங்களும் சிற்பங்களாக இடம்பெற்றுள்ளன. கோபுரத்தின் நுழைவாயிலின் இருமருங்கும் உள்ள நிலைக்கால்களில் பரதநாட்டிய கரணங்கள் சிறப்பங்களாக சித்தரிக்கப்பட்டுள்ளன.

சோழர் காலத்தையடுத்து தமிழகத்தை ஆண்ட விஜயநகரப் பேரரசு மன்னர்கள் கோபுரங்களை அமைக்கும் பணியில் பல சிறப்பம்சங்களைப் புகுத்தினார்கள். இவர்கள் புகழ்வாய்ந்த கோயில்கள் அனைத்திலும் மிகவுயர்ந்த கோபுரங்களை எழுப்பினர். கோயிலின் வாயிலை இத்தகைய வானளாவ எழுந்த கோபுரங்கள் பெரும் வனப்பையும் கம்பீரத்தையும் எடுத்துக்காட்டின. காஞ்சி, தில்லை, திருவண்ணாமலை, திருவரங்கம், மதுரை ஆகிய இடங்களிலும் இவை போன்ற கோபுரங்கள் எழுந்தன. விஜயநகரமன்னர் வரிசையில் கோபுரப்பணியில் சிறந்து விளங்கியவர் கிருஷ்ணதேவராயர் ஆவார். இவர் 108 அடி உயரத்திற்குமேல் கோபுரங்களை எழுப்பியவர். இவரது கோபுரங்கள் ராயர் கோபுரம் என்று அழைக்கப்படலாயிற்று. எனவே இக் காலப்பகுதியில் கோயிற் கட்டிடக்கலை வரலாற்றில் கோபுரக்காலம் எனக் குறிப்பிடலாம். இம் மன்னர்களது பிரதிநிதிகளாகிய நாயக்க மன்னர்களும் உயர்ந்த கோபுரங்களை எழுப்பியுள்ளனர். திருமலை மன்னர் மதுரையில் எழுப்பிய கோபுரத்தில் எண்ணற்ற அழகிய சுதை உருவங்களை வைத்து தனது தெய்வீகபக்தியை வெளிப்படுத்தியுள்ளார். இன்றும் இத்தகைய கோபுரங்கள் காண்போரின் உள்ளங்களில் தெய்வீகப் பெருமையையும் வரலாற்றுப் புகழையும் உணர்த்தி நிற்கின்றன.

கோபுரங்கள் புராண இதிகாசக்கதைகளை கட்புலனுக்கு இலகுவாக உணர்த்தும் சக்திவாய்ந்தன. அவற்றில் இடம்பெறும் சிற்பங்கள் தெய்வீகவரலாறு, கலை, தத்துவப்பொருள் ஆகியவற்றை விளக்கி நிற்கின்றன. கோபுரங்கள் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினாறு, பதின்மூன்று, ஆகிய நிலைகளைக் கொண்டு விளங்குவன. கோபுரத்தின் முடியில் இத்தகைய எண்ணிக்கை கொண்ட கலசங்கள் அமைத்து கும்பாபிஷேகங்கள் நிகழ்த்தப்படுகின்றன. கோபுரங்களில் பெருமபாலானவை ஐந்து மாடங்களாகிய நிலைகளைக் கொண்டது. தலைவாசலும் ஐந்து மாடங்களுமாகிய ஆறு அமைப்புக்களும் உடம்பின் ஆறு ஆதாரங்களாகிய மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அனைகதம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகியவற்றைக் குறிப்பனவாகும். இந்துக் கோவில்களை அலங்கரிக்கும் கோபுரங்கள் ஆகமங்கள் விதித்துக்கூறும்

திருக்கோயில் அமைப்பின் புராணத்துவத்தையும் பெருமையையும் எடுத்து இயம்புகின்றன.

மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தின் கோபுரங்கள் வரலாற்றுப் புகழோடு கலைச் சிறப்புப் பெற்று விளங்குகின்றன. அம்பிகையின் ஆலயத்திற்குமுன் அமைந்து விளங்கும் கோபுரம் ஏழுநிலைக் கோபுரமாகும். 740 சுதை விக்கிரகங்களைக் கொண்டது. ஏறக்குறைய 117 அடி உயரமுள்ளது. கோபுரத்தின் அடிப்பகுதி 78 அடிநீளமும் 38அடி அகலமும் கொண்டது. எண்ணற்ற கலையெழில் கொண்ட சிற்பங்களினால் அது 'சித்திரக் கோபுரம்'என அழைக்கப்படுகின்றது. இக்கோயிலின் நாற்புறமும் நான்கு கோபுரங்கள் அலங்காரத்துடன் காட்சிதருகின்றன. ஒவ்வொன்றும் ஒன்பது நிலைகளைக் கொண்டது. இப்பிரதான கோபுரங்களுள் தென்வாயிலில் உள்ள கோபுரமே உயரத்தில் கூடியது. நிலமட்டத்திலிருந்து 160 அடி உயரமுள்ளது. கோபுரத்தின் அடிப்பகுதி 108 அடிநீளமும் 67 அடி அகலமுடையது. ஏறக்குறைய 1124 சுதைச்



மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம்

சிற்பங்கள் உள்ளன. வடக்குக் கோபுரம் மொட்டைக் கோபுரம் என அழைக்கப்படுகின்றது. கிழக்குகோபுரம் மாறவர்மன் சுந்தரபாண்டியனால் நிர்மாணிக்கப்பட்டதாகும்.(1216 -38) எனவே இதனைச் சுந்தரபாண்டியன் கோபுரம் என அழைப்பர். இக்கோபுரம் 153 அடி உயரமும், அடித்தளம் 111அடி நீளமும் 65 அடி அகலமும் கொண்டு விளங்குகின்றது. ஏறக்குறைய 1101 சுதைச் சிற்பங்கள் இக் கோபுரத்தை அலங்கரிக்கின்றன. இவ்வாறு கோபுரத்தின் சிறப்புக்களை அறிய மதுரை ஸ்ரீ மீனாஷி அம்மையின் ஆலயம் சிறந்ததொன்றாக விளங்குகின்றது.

அண்மைக் காலத்தில் ராஜகோபுர வரலாற்றில் குறிப்பிடத்தக்க அமைப்பு ஸ்ரீரங்கம் இராஜகோபுரமாகும். ஆசியாவிலேயே உயரமான கோபுரமென புகழத்தக்க பெருமைகொண்டது. அடியார்களைக் கருவியாக்கி அரக்கன்



ஸ்ரீரங்கம் தெற்குவாசல் கோபுரம்

நிகழ்த்திய சாதனை என்று அனைவரும் பெருமைப்படத்தக்க கோபுரமிதுவாகும். ஸ்ரீரங்கம் தெற்குவாசலில் உள்ள இக்கோபுரம் பதின் மூன்று நிலைகளைக் கொண்டது. கோபுரம் 236 அடி உயரம் கொண்டது. கிழக்கு மேற்கில் 165¼ அடி அகலமும், தெற்குக்கு வடக்கில் 97 அடி அகலமும் கொண்டது. பதின்மூன்று செப்புக் கலசங்களில் ஒவ்வொன்றும் 10½ அடி உயரமும் 5½ அடிபருமனும் 135 கிலோகிராம் எடையும் கொண்டது. 1979 மே மாதம் முதல் ஏழு ஆண்டுகளுக்கு மேலாக ஒவ்வொரு நாளும் சுமார் இருநூறு கலைஞர்களும் தொழிலாளர்களும் இணைந்து உழைத்து இவ்வரும் பெரும் திருப்பணியை நிறைவேற்றியுள்ளனர். இத்தகைய விபரங்கள் திருக்கோயிற் கோபுரத்தின் பெருமையினை எமக்கு அறிவுறுத்துகின்றன.

# தென்-பொன் வாசற் கோபுரம்

**த.ஜெயசீலன்**

தெல்லியூர் உறையும் துர்க்கா தேவியார்...ஆட்சி செய்து
தொல்லறம் காக்கும் கோவில் துயர்களைத் துரத்தும் தீ...
வில்!
எல்லையில் எழில்கள் பூண்டு இரண்டாம் பொற் கிரீடம் சூடிக்
கொள்வதாய்த் தெற்கு வாசற் கோபுரம் படைத்த தின்றில்!

சென்ற தைப்பூச நாளில்... திருவருள் கூட...நாட்டிக்
கொண்டனர் அடிக்கல்! ஆண்டுள் கோபுரம் வியப்பாய்க் கட்டி
இன்று தைப்பூசத் தன்று எழுப்பினர்! தளங்கள் ஐந்து
நின்றதைம் பூதம் போல... 'அறுபத்தோர்' அடிக ளாக...

அன்று ஓர் காலம்...இந்த ஆலயப் பொன்னை எல்லாம்
கொண்டதோர் கூட்டம்: யுத்த கோரத்தால் விளைந்த சோகம்!
"என்னதான் புதுமை" என்றெம் அன்னையை வியக்க...யாவும்
வந்தன மீண்டும்...இத்...தென் வாசலில்...மகிமை பாரும்!

காரணப் பெயராய்...தெற்கு வாசலின் அரணாய்...காவற்
கூண்டுமாய்...தென்-பொன் வாசல் கோபுரம் நிமிர்ந்த வேளை.
கூடி ஊர் குவிந்துயிர்த்துக் கும்பாபி ஷேகம் காண
வாழ்த்தினோம்... சிற்பி மாரை! வணங்கினோம்... பணி
செய்தோரை!

## "தை" பிறப்புதுடன் எமது மக்களின் துயரங்கள் நீங்க வேண்டும்... சிறையில் வாடும் எம் உடன்பிறப்புக்கள் விடுதலை அடைய வேண்டும்...

## மாமன்றத்தின் தைப்பொங்கல் செய்தி

மலரும் தைப்பொங்கல் திருநாள் தமிழர் வாழ்வில் நல்லதோர் விடியலைத்தரவேண்டும் என்ற எண்ணமே மனமெங்கும் பொங்கிநிற்கிறது. தமிழ் மக்களின் பண்பாடு, பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் தனிப் பெரும் விழா "பொங்கல் விழா". பண்டுதொட்டு தமிழ் மக்கள் இத்திருநாளில், இவ்வுலகில் உயிர்கள் வாழத் துணைபுரியும் சூரியனை தெய்வமாக வழிபட்டும், உழவர் பெருமக்களின் உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்தும் வாழ்ந்தும் வந்தனர். துன்பமெல்லாம் நீங்கும் நன்நாளாகவும், அறுவடைப்பொங்கல் விழாவாகவும் இதனை கோலாகலமாகக் கொண்டாடி வந்தனர். உறவினர்கள், நண்பர்கள், குடும்பத்தாருடன் கூடிக்குலாவி கதைபேசி வாழ்ந்த அந்த இனிய நினைவுகள்தான் நிழலாடுகிறதே தவிர வயலும் வயல் சார்ந்த இடமான மருதநிலப்பரப்பை அதிகமாக நம்பிவாழ்ந்த மக்கள் இடம்பெயர்ந்து, இன்னலுற்று, இருப்பை இழந்து ஏக்கமுற்ற நிலையில் ஒரு நல்ல விடியலையே எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

புதிதாக வயலிலிருந்து வந்த செந்நெற்பச்சையரிசியும், கரும்பின் சக்கரையும், பசும்பாலும் சேர்த்து பொங்கிச் சூரியன் உதயமாகும் பொழுது படைத்து வரவேற்பது தமிழனின் வாழ்வியல் மரபு. செழுமையையும், இனிமையையும் குறிக்கும் பால், பழம், கரும்பு, இளநீர், மஞ்சள், பயறு என பொங்கலுடன் படைத்து சூரிய வணக்கம் செய்து, படைத்த பொங்கலையும், உணவு வகைகளையும் உற்றார், உறவினர், அயலவர்கள் என இன பந்துக்களுடன் கூடி பகிர்ந்து உண்டவை வரலாறு.

இந்தப் பசுமையான நினைவுகள், நிஜமாகவேண்டும். அந்த நம்பிக்கை இனியும் வலுவிழந்து போகாமல் இருக்க வேண்டும். தைப்பொங்கல் ஒரு தெய்வீக அர்ப்பணிப்புத் தினமாகும். மருதநிலத்து மக்கள் கையேந்தி நிற்கும் நிலை மாறவேண்டும். திக்கற்றவனுக்கு தெய்வம் தான் துணை என்ற மூதுரை மாத்திரமல்ல கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்ற நம்பிக்கையோடும் வாழும் எமது மக்களின் எண்ணங்கள், அபிலாசைகள் நிறைவேற வேண்டுமென்பதே மாமன்றத்தின் விருப்பம்.

இச்சந்தர்ப்பத்தில் இந்நாட்டு இந்து மக்களின் சார்பாக நாங்கள் பின்வரும் பகிரங்க வேண்டுகோள்களை விடுக்க விரும்புகிறோம்.

இந்நாட்டில் எங்களின் சகோதர சகோதரிகள் பலர் இன்னும் அகதிகளாக வாழ்ந்து வரும் நிலைமை உடன் மாற்றப்படவேண்டும். தங்கள் சொந்த இல்லங்களில் இந்நாட்டின் பிரஜைகளாக சகல சுதந்திரங்களுடனும் வாழ அவர்களுக்கு இத் "தை" பிறந்ததும் வழி பிறக்க வேண்டும். நாட்டில் சுமுகநிலை உருவாக வேண்டும். மூன்று தசாப்தங்களுக்கு மேல் அல்லலுறும் எமது மக்களின் துயரங்கள் நீக்கப்படவேண்டும்.

தமிழ் மக்களின் அபிலாசைகளைத் திருப்திபடுத்தும் அரசியல் தீர்வு இனிமேலும் தாமதிக்காது வழங்கப்படவேண்டும். தமிழ் மக்களின் உரிமைகள் விரைவில் வழங்கப்பட்டு நாட்டில் சுமுகமான நிலை வரவேண்டும்.

தமிழர் திருநாளில் இறைவழிபாட்டில் ஈடுபட்டு இத்திருநாள் அமைதி, சமாதானம், சாந்தி நல்வாழ்வு தரவேண்டிநிற்போம். வரும் காலம் வளமான காலமாக இருக்க அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருவடிகளை பற்றுறுதியுடன் பற்றிக்கொள்வோமாக!

## என்னருமை அன்புமிகு அன்னைக்கு என் அஞ்சலி!



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவரும், யாழ். இந்து ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குனரும், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவரும், சிவபூமி அறக்கொடை நிறுவனத் தலைவருமாகிய சைவஞானபானு, செங்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் பாசமிகு தாயார் திருமதி சரஸ்வதி ஆறுமுகம் அவர்களின் மறைவையொட்டி மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களின் அஞ்சலிச் செய்தி.

சீமாட்டி சரஸ்வதி அம்மா இறையடி சேர்ந்த துயரச் செய்தி கேட்டு மனம் கலங்கி ஏங்கி நின்றேன்.

என்னைப் பெற்றெடுத்த தாய் போன்று 'ராசா' எனப் பாசம் பொழிய அழைத்து என்மீது அக்கறையும் அன்பும் பொழிந்த ஒரு தாயை இழந்துவிட்டேன்.

யாழ். மண்ணில் உரையாற்றும் போது இந்த அன்பு அன்னையைப் பலதடவை அவர்கள் சபையில் இருந்தாலும் இல்லாவிட்டாலும்கூட அன்பு பாராட்டிக் குறிப்பிட்டிருக்கிறேன்

ஒருதடவை மண்டபத்திற்கு வெளியால் மரநிழலில் இருந்தவர் நான் கீழே இறங்கி வந்தபோது 'இராசா, நீங்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தேன்' என அன்பொழுக புன்னகையுடன் சொன்ன அந்த புனித உள்ளம் இன்று என் மனத்திரையில் சிரித்துக் கொண்டு என்னை ஆசீர்வதிக்கின்றது போன்ற உணர்வே இதனை எழுதும் போது எனக்கு

போர்க்காலத்தில் யாழ். பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டத்திற்காக பலாலியில் வந்து இறங்குகின்றேன், அதற்கிடையில் சுண்ணாகத்தில் ஒரு குண்டுவெடிப்பு, "நீலகண்டனை வீட்டிலே கொண்டு போய் வைத்திருங்கள், வேறு ஒரு இடமும் தங்க விடாதீர்கள், கவனமாகப் பாருங்கள்" இது என்னையழைக்கவந்த திரு ஜெயசிங்கத்திற்கு அம்மாவின் அன்புக் கட்டளை - என்மனம் நெகிழ்ந்தது.

பெற்றவளைப் பல ஆண்டுகளுக்கு முன் இழந்துவிட்டாலும் எனக்காகத் துடிக்கின்ற ஒரு தாய் யாழ். மண்ணில் இருப்பதைக் கண்டு என்மனம் புல்லரித்துவிட்டது.

அம்மா, நிறைவான வாழ்வு வாழ்ந்து, சைவஞானபானு செஞ்சொற்செல்வரைப் பெற்று வளர்த்த பெருமையுடன் வரலாறுபடைத்த நாயகி ஆகிவிட்டீர்கள்.

என்றும் நீங்கள் எங்கள் இதயங்களில்!

## மாமன்றத்தின் நடவடிக்கையால்
## கல்வி அடிப்படை உரிமை மறுக்கப்பட்ட மலையக மாணவர்களுக்கு நீதி

ஊவா, சப்ரகமுவ மாகாணங்களிலிருந்து, அம்மாகாணங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர கணித, விஞ்ஞான கற்கைநெறிகள் தமிழ் மொழி மூலமாகக் கற்பிக்கப்படாத காரணத்தினால், அம்மாகாண தமிழ் மாணவர்கள் நுவரெலியா மாவட்டப் பாடசாலைகளுக்குச் சென்று கல்விகற்று வந்தவேளை திடீரென, முறையான காரணங்களேதும் கூறப்படாமல் அம்மாணவர்கள் வெளியேற்றப்பட்டனர். இச் செயலானது ஒரு அடிப்படை உரிமை மீறலாகும் என்பதை உணர்ந்த மாமன்றம், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நீதி நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்காக பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பில், உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை அம் மாணவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்க பாதிக்கப்பட்ட நான்கு மாணவர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி திரு. கே.வி.எஸ். கணேசராஜாவின் ஆலோசனையுடன் சட்டத்தரணி முத்துச்சாமி புஷ்பராஜ் அவர்கள் மூலம் மனுக்களைத் தாக்கல் செய்ய ஒழுங்கு செய்தது.

மத்தியமாகாண அமைச்சர் திரு. எம். ரமேஸ்வரனின் தலையீட்டால் மாகாண கல்வித் திணைக்களம் அம் மாணவர்கள் மீண்டும் அதே பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ள இணங்கி அதற்குரிய எழுத்துமூல உறுதிமொழியை வழங்கியிருந்தனர். அதனைத் தொடர்ந்து அவ்வுறுதி மொழிகள் செயற்படுத்தப்பட்டு மாணவர்களும் பாடசாலைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இதனையடுத்து தொடரப்பட்ட அடிப்படை மீறல் வழக்குகளை மீளப்பெற சட்டத்தரணிகள் விண்ணப்பங்களைச் செய்தனர்.

இந்த அடிப்படை மீறல் வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் நீதியரசர்கள் முன்னிலையில் 01-02-2017 இல் வந்தபோது சிரேஷ்ட சட்டத்தரணி திரு.கணேசராஜா உயர்நீதிமன்றத்திற்கு அடிப்படை மனுக்கள் செய்த மூன்று விண்ணப்பதாரிகளின் பிள்ளைகளும் ஏனைய பிள்ளைகளும் பாடசாலைகளில் தொடர்ந்து கல்விகற்க அனுமதி கிடைத்ததை அறிவித்ததைத் தொடர்ந்து நீதிமன்றம் வழக்கை மீளப்பெற அனுமதித்தது.

ஊவா, சப்ரகமுவ மாகாணங்களில் உள்ள பாடசாலைகளிலும் தமிழ் மொழி மூலம் கணிதம் விஞ்ஞானம் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு படிக்க ஒழுங்குகளைச் செய்யுமாறு மாமன்றம் மத்திய அரசாங்கத்தையும் மாகாண சபையையும் வேண்டியிருக்கின்றது.




☞ வழிபாட்டியல் ☞ வாழ்வியல்
☞ கிரியையியல் ☞ விரதவியல் ☞ சிராத்தவியல்
☞ ஆசௌசவியல் ☞ தத்துவ இயல் ☞ திருமுறையியல்

என ஒவ்வொரு இந்துவினதும் நாளாந்த வாழ்க்கையில் பின்னிப்பிணைந்துள்ள வாழ்வியல் முறைமைகளின் எளிமையான சுருக்கமான தெளிவான விளக்கங்கள் அடங்கிய கையேடு.

**மாணவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் தமது சந்தேகங்களை தீர்க்கும் வழிகாட்டியாகவும் கலைக்களஞ்சியமாகவும் திகழும்**

## 'இந்து மக்களுக்கு ஒரு கையேடு'

சகாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைமைச் செயலகம் :** 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டிணர் மாவத்தை, கொழும்பு 02.
தொலைபேசி : 0112 43 990 தொலை நகல்: 0112 344 720
மின்னஞ்சல் : hinducongress@gmail.com

**யாழ் பணிமனை:** 211/17, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 1075 தொலைநகல்: 021 221 7280
மின்னஞ்சல் : hinducongressjaffna@gmail.com

இச் சிறப்புமலருக்கு
அனுசரணை
திரு. வே. சிவசுந்தரம்
(இலண்டன்)

WESTERN
JEWELLERS

JEWELLERS
& GEM MERCHANTS
SPECIALIST IN
22CT GOLD JEWELLERY

230, UPPER TOOTING ROAD,
TOOTING,
LONDON SW 17 7EW,
TEL : 0208 - 767 3445,
FAX : 0208 - 767 3753

5, PLAZA PARADE
29-33, EALING ROAD,
WEMBLEY
MIDDLESEX HA0 4YA

# இந்தச் சுடரில்...


- பஞ்சபுராணம் 1
- ஆசிச்செய்திகள்

நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி 3

ஆன்மீகச்சுடரின் ஆசிச்செய்தி 3

கீரிமலை நகுலேஸ்வர ஆதீன கர்த்தாவின் ஆசிச்செய்தி 4

மாவை ஆதீன கர்த்தாவின் ஆசிச்செய்தி 4

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுருவின் ஆசிச்செய்தி 4

தேவஸ்தான பரம்பரை தர்மகர்த்தா சபையித் தலைவரின் வாழ்த்துச் செய்தி 4

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபை தலைவரின் ஆசிச்செய்தி 5

மாமன்றத் தலைவரின் பிரார்த்தனைச் செய்தி 5

- ஸ்ரீ துர்க்காதேவி திருப்பதிகம் 6
- குடமுழுக்கினால் உலகம் உய்யுமே! 7
- சைவ சமயத்தில் சிவநடனம் 8
- ஆலயங்களும் அறப்பணிகளும் 10
- சைவத்தமிழ் உலகில் சைவாதீனமாக விளங்கும் சிவத்தமிழ்ச் செல்வி முத்துவிழா காணும் பெருந்தகை 13
- இந்து மதத்தின் சிறப்புக்களை மாணவர்களுக்கு அறியத்தரும் பணி போற்றுதற்குறியது 15
- யார் மன்னன் ? 17
- ஆறுமுகநாவலர் சிந்தனைத் திறன் 19
- பரிதவிக்கும் நிலைநீங்க கருணை செய்து அருளிடம்மா 21
- யோகர் சுவாமிகள் செய்த சில அருட் செயல்கள 22
- MAHA SIVARATRI 25
- 'தமிழ்த் தாய்க்குலம் அன்று, இன்று, நாளை 29
- ஆலய நிர்மாண முறையில் இராஜகோபுரங்களின் முக்கியத்துவம் 35
- தென்-பொன் வாசற் கோபுரம் 37

**மாமன்றத்தின் ஒழுங்கமைப்பில், 2017, ஜனவரி 20 முதல் 25ந் திகதி வரை தமிழ்நாட்டு அறிஞர் திரு. வெ. அனந்தகிருஷ்ணன் அவர்களின் தொடர் சொற்பொழிவு வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தில் நடைபெற்றது. அந்நிகழ்வுகளின் பதிவுகள் சில...**



மட்டக்களப்பு. காரைதீவு இராமகிருஷ்ண பெண்கள் வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வு



ஹட்டன் மாணிக்கப்பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வு



கல்முனை ஸ்ரீ இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வு



மட்டக்களப்பு களுதாவளை மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வு



நல்லை ஆதீன குரு முதல்வரை சந்தித்து ஆசிபெற்றார்.



பொலனறுவை சமன்பிட்டி இந்து இளம்பிறை இறைபணி மன்றத்தில் நடைபெற்ற நிகழ்வு



மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வு



கிளிநொச்சி உருத்திரபுரம் இந்துக் கல்லூரியில் உரை நிகழ்த்தும் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் மற்றும் திரு. வெ. அனந்தகிருஷ்ணன் ஆகியோர்

HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/55/NEWS/2017

## 14–01–2017 தைப்பொங்கல் தினத்தன்று மாமன்றத்தில் இடம்பெற்ற 'இந்து ஒளி' 20வது ஆண்டுப் பூர்த்தி சிறப்பிதழ் வெளியீடு, கையடக்கப் பஞ்சாங்க வெளியீடு மற்றும் இலவச அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வுகளின் சில பதிவுகள்...



மாண்புமிகு பிரதம நீதியரசர் க. ஸ்ரீபவன் அவர்களுடன் வழிபாட்டிலீடுபட்டுள்ள மாமன்றத் தலைவர், பிரதித் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர்





'இந்து ஒளி' சிறப்பிதழ் மற்றும் கையடக்கப் பஞ்சாங்கம் ஆகியவற்றை நடராஜப் பெருமான் சந்நிதானத்திலிருந்து எடுத்து வரும் பிரதித் தலைவர் திரு. மா.தவயோகராஜா, பொதுச் செயலாளர் திரு.வே.கந்தசாமி.



மங்கள விளக்கேற்றும், நாவலர் நற்பணி மன்ற நிறுவுனர் திரு ந. கருணைஆனந்தன் அவர்கள்.



ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் அருளுரையாற்றுகிறார்.



மாமன்றத் தலைவரின் தலைமையுரை



லங்காசிறி செய்தி நிறுவனத்தினால் மாமன்றத்திற்கு சுவர்க்கடிகாரம் ஒன்று அன்பளிபாக வழங்கப்பட்டது.



திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்கள் ஆய்வுரையை நிகழ்த்தினார்



'இந்து ஒளி' சிறப்பிதழை மாண்புமிகு நீதியரசர் க.ஸ்ரீபவன் அவர்கள் வெளியிட ஆன்மீகச்சுடர் முதற்பிரதியைப் பெற்றுக் கொள்கிறார்



கையடக்கப்பஞ்சாங்கத்தின் முதற்பிரதியை மாண்புமிகு பிரதம நீதியரசரிடமிருந்து பெறும் திரு.ந.கருணைஆனந்தன் அவர்கள்



ஆன்மீகச்சுடரிமிருந்து ஆசிகளையும் கௌரவிப்பையும் பெற்று 'இந்து ஒளி' சிறப்புப் பிரதியை பெற்ற திரு.அ.கனகசூரியர்



'இந்து ஒளி' சிறப்புப் பிரதியை மாண்புமிகு பிரதம நீதியரசர் க.ஸ்ரீபவன் அவர்களிடமிருந்து திரு. சி.தனபாலா அவர்கள் பெற்றுக்கொள்கிறார்.



மாண்புமிகு பிரதமநீதியரசர் க.ஸ்ரீபவன் அவர்களை திரு. சி.தனபாலா அவர்கள் கௌரவிக்கிறார்



மாண்புமிகு பிரதம நீதியரசர் க.ஸ்ரீபவன் அவர்கள் சிறப்புரை ஆற்றுகிறார்



மாமன்றத்தின் இலவச அப்பியாசக் கொப்பிகளை திரு.ஜெ.நிரோஷ்காந்த் பெற்றுக் கொள்கிறார்



நிகழ்வில் கலந்துகொண்ட அவையோர்



அதே தினத்தில் மாமன்றத்தின் உப தலைவரும் யாழ் இந்து ஆராய்ச்சி நிலைய கௌரவ இயக்குநருமாகிய சைவஞானபானு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் 'இந்து ஒளி' 20வது ஆண்டுப் பூர்த்தி சிறப்பிதழையும் கையடக்கப் பஞ்சாங்கத்தையும் 'சிவபூமி'யில் வெளியிட்டு வைத்தார்.
சிறப்பிதழுக்கு இணை அனுசரனை வழங்கிய ஜெய சண்ஜன் கட்டுமான உரிமையாளர் திரு.க. சண்முகநாதன் அவர்கள் முதற்பிரதியை பெற்றுக்கொள்கிறார். அருகில் மாமன்றத்தின் யாழ். பணிமனை நிர்வாக அலுவலர் திரு. வி. ஜெயசிங்கம் மற்றும் சிவபூமி மனவிருத்திக் கல்லூரி அதிபர் திருமதி குகதாசன் ஆகியோர்.

இவ்விதழ் இல. 48B, புளூமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.

9 772012 964007